விழி 06 பார்வை 71 யூலை 2010

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விலை | ரூபா 50.00



## கல்வியின் மூலம் மனித உரிமை..!



யூலை - 1983

சிவில் சமூகமும் கல்வியும்

புதிய கல்விச் சட்டம்


சின்னப்பையன் வரைந்த சித்திரம்

முள்முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 16




**விலை: 100.00**

*தொடர்பு:*
*3, டொரிங்டன் அவனியூ*
*கொழும்பு 07*
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: koodam2006@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : பேராசிரியர். சபா. ஜெயராசா
பேராசிரியர். சோ. சந்திரசேகரன்

ஆலோசகர் குழு : முனைவர் மா. கருணாநிதி
பேராசிரியர். மா. சின்னத்தம்பி
பேராசிரியர். மா. செல்வராஜா
திரு. தை. தனராஜ்

நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்

துணை நிர்வாக ஆசிரியர் : காசுபதி நடராஜா

ISSN 1800 - 1246

# அகவிழி

மாத இதழ்

இதழ் வடிவமைப்பு : த. மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்,
தொலைபேசி: 011-2472362

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:
: AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel: 011-2506272
E-mail : ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

## உள்ளே...


- சிவில் சமூகமும் கல்வியும் 03
- கல்வியின் மூலம் மனித உரிமை... 06
- இலங்கைக்கான புதியகல்விச் சட்டம் 11
- ஆசிரியரும் மாணவரும் 14
- தலைமைத்துவமும் விழிப்புணர்வும் 19
- ஆசிரியர் தேர்ச்சி 24
- இன்றைய சூழலில் ஆசிரியர்கள்... 28
- சின்னப் பையன் வரைந்த சித்திரம்! (சிறுகதை) 32
- முன்முடி (சிறுகதை) 34


அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, உட்பொருளில் காணப்படும் கருத்துக்கள் 'அகவிழி'யின் கருத்துக்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகூறல்...

நமது சமூக வரலாற்றில் '1983 யூலை' மறக்க முடியாத காலம். பல்வேறு வலிகளையும் இழப்புகளையும் நமக்கு திணித்துவிட்ட காலம். இதன் தருக்க விளைவு சமூக அரசியலில் பல்வேறு புதிய மாற்றங்களுக்கும் வித்திட்டது. இவை யாவற்றையும் வரலாற்றின் முன் பின் நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி சிந்திக்க வேண்டிய காலமாகவும் இது அமைகின்றது.

1977க்கு பிறகு இலங்கையின் ஆட்சி அதிகாரம் மற்றும் அரசியல் பொருளாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் கவனிக்கத்தக்கது. புதிய பொருளாதாரச் சீர்திருத்தம், திறந்த பொருளாதாரக் கொள்கை, உலக மயமாக்கல் போன்றவற்றால் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள், அரசியல் நடைமுறைகள் பல்வேறு நெருக்கடிகளுடன் வளர்ந்துள்ளது. குறிப்பாக இனவாத அரசியல் இந்த முறைமைக்குள் புதிய தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்பட தொடங்கியது.

தொடர்ந்து 1980களிற்கு பின்னர் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வு தளமாற்றச் சிந்தனையாகவும் செயல்வாதமாகவும் பரிணாமம் அடைகின்றது. இந்தச் செல்நெறியில் '1983 யூலைக்கலவரம்' ஓர் மாறும் காலகட்டமாகவும் அமைகின்றது.

யூலைக் கலவரத்திற்கு பின்னர் தமிழ் கல்விச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் நெருக்கடிகள் இன்னும் முழுமையான ஆய்வுக்கு உள்ளாக்கப்படவில்லை. இன்று கல்வித்தராதர வீழ்ச்சி, கல்வித்துறையில் படுமோசமான குளறுபடிகள் உருவாகியுள்ளன. இவை பற்றி பல்வேறு மட்டங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த விமர்சனங்களுக்கு பின்னால் தமிழ் கல்விச் சூழலில் கல்வித்தர வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்களுள் 1983க்கு பின்னர் ஏற்பட்ட மாற்றங்களையும் நாம் தொடர்புபடுத்தி புரிந்து கொள்ள வேண்டும்.

இக்காலத்து இளைஞர்கள் பலர் படிப்பைத் தொடராது உயிரை பாதுகாத்தால் போதும் என்று நினைத்து அன்னிய நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கினார்கள். பல்கலைக்கழகத்தில் இருந்த பலர் படிப்பை தொடரவில்லை. இன்னும் பலர் அரசியலில் ஈடுபடத் தொடங்கினார்கள். பாடசாலைகளில் உயர்தரம் மற்றும் சாதாரணதரம் படிக்கும் மாணவர்கள் வரை இந்த போக்கு தொடர்ந்தது.

இதைவிட இளந்தலைமுறை ஆசிரியர்கள் பலரும் நாட்டை விட்டு ஓடினார்கள். இன்னும் பலர் அரசியலில் ஈடுபட்டார்கள். தொடர்ந்து கல்விச் சமூகத்தை சேர்ந்தவர்கள் பலர் சுட்டுக்கொள்ளப்பட்டார்கள். பலர் கைது செய்யப்பட்டார்கள், சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்த படலம் தொடவே கல்விச் சமூகத்தில் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

எதிர்காலம் கேள்விக்குறியாகி என்னசெய்வது என்று தெரியாமல் கல்விச்சமூகம் தத்தளித்தது. மாணவர்கள் கற்கும் நிலைகளிலும் அவர்களது அடைவு மட்டங்களிலும் பெரும் வீழ்ச்சி படிப்படியாக ஏற்பட்டது. கற்கும் பாணியிலும் புறஅழுத்தம் மிகுந்த செல்வாக்கு செலுத்தியது. சில மட்டங்களில் மாணவர்கள் வெளித்தொடர்பின்றி வீடும் பாடசாலையுமாக மட்டுப்படுத்தப்பட்டார்கள். ஏதோ படித்தால் போதும் என்று திருப்திப்படக்கூடிய சூழல் பலருக்கும் எதார்த்தமான தெரிவாகவே அமைந்தது.

மேலும் கல்வி முகாமைத்துவ நிருவாக மட்டங்களில் சமூகத்தேவை சமூகம் அவசியம் கருதி உச்சப்பயன்பாட்டில் செயற்படக்கூடிய வலுவுள்ள அதிகாரிகள் மட்டத்திலும் வீழ்ச்சி காணப்பட்டது. குளம்பிய நிலைகளில் வலுவற்ற நபர்கள் பலாபலங்களை அடையக்கூடிய மோசமான சூழல்களும் உருவாகி வந்தன.

இன்னொரு புறம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல பாடசாலைகள் இயங்கவில்லை. இதற்குள் அகப்பட்ட மாணவ ஆசிரியர் நிலைமைகள் சரியான கவனிப்புக்கு உரித்தாக்கப்படவில்லை. போக்குவரத்து வசதியின்மை, பாதைகள் மூடப்பட்டமை, உரியநேரத்திக்கு பாடநூல்கள் கிடைக்காமை, உரிய வளங்கள் வந்து சேராமை போன்ற காரணிகளும் கல்வியில் பெரும் தாக்கத்தை விளைவித்தது. இவையாவற்றையும் கவனத்தில் எடுத்து இவற்றால் ஏற்பட்ட கல்வி இழப்பீடுகள் மற்றும் உளத்தாக்கம் போன்ற அம்சங்களை கவனத்தில் எடுத்து பரிசீலிக்கப்பட வேண்டிய தேவை வலுப்பெற்றுள்ளது.

வடகிழக்கு பிரதேசம் முழுமையாக போரியல் நெருக்கீட்டுக்கு உள்ளாக்கப்பட்ட பிரதேசம். இந்த பிரதேசங்களை ஏனைய பிரதேசங்களில் இருந்து தனித்துவமாக நாம் நோக்க வேண்டும். 1983 யூலைக் கலவரத்தின் பின்னர் இந்தப் பிரதேசங்களில் ஏற்பட்ட நெருக்கடிகள் மாற்றங்கள் வாழ்வியல் மதிப்பீடுகளில் தெரிவுகளில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் கல்வியின் தர விருத்திக்கு சாதகமான உள்ளீடுகளை வழங்குவதில் பின்தங்கிய நிலைமை காணப்படுகின்றது. சமூகங்களிடையே காணப்படும் அசமத்துவமான வளர்ச்சி கல்வியிலும் பெரும் தாக்கத்தை விளைவிக்கின்றது. வடக்குகிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் கல்வி கற்பதற்கான ஏற்புடைச்சூழல் சாதகமாக உள்ளது. அங்கு ஏற்பட்டுள்ள கல்வித்தராதரத்துடன் வடகிழக்கின் கல்வி நிலைமைகளை நாம் ஒப்பிட்டு மதிப்பிடக் கூடாது. இது ஆரோக்கியமான பார்வையாகவும் இருக்க முடியாது.

நாம் அவசரகாலத்தில மேற்கொள்ளும் விசேட கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை வடகிழக்கில் விரிவாக்க வேண்டும். புதிய நோக்கில் மாற்றங்களை உருவாக்கம் புதிய சிந்தனைகளை நோக்கி பயணிக்க வேண்டும்.

தெ.மதுசூதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவில் சமூகமும் கல்வியும்

சபா.ஜெயராசா

கல்வியும் சிவில் சமூகமும் (Civil Society) அல்லது குடிமைச் சமூகமும் அண்மைக் காலமாக விதந்து பேசப்படும் ஒரு கருப்பொருளாகவுள்ளது. அரசுக்கும் அரச நிறுவனங்களுக்கும் வெளியால் இயங்கும் ஒரு சமூகப் பிரிவாகவும், பண்பாட்டு அமைப்பாகவும், சிவில் சமூகம் அடையாளப்படுத்தப்படுகின்றது. அரச நிறுவனங்களின் அதிகாரங்கள் கட்டுக்கடங்காது பெருகிச் செல்லும் நிலையில் சிவில் சமூகத்தால் அவற்றைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்ற இலட்சிய வாதமும் ஆதர்சநோக்கும் ஒரு புறம் காணப்படுகின்றது. மறுபுறம் அது அடிப்படையான சமூக மாற்றத்தைப் பின்தள்ளி விடுகின்ற மயக்கமூட்டும் நடவடிக்கை என்றும் குறித்துரைக்கப்படுகின்றது.

"அரச அதிகாரப் பிடியிலிருந்து தனி மனிதர்களைப் பாதுகாத்தலே சிவில் சமூகமாகின்றது" என்ற கருத்தை ரொக்குவிலி (Tocqueville) முன்வைத்தார். சிவில் சமூகம் தொடர்பாக மார்க்சிய சிந்தனையாளரிடத்து இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அது பயன் குன்றிய நடவடிக்கை என்று ஒரு சாராரும் அதன் வழியாக சில இலக்குகளை எட்டலாம் என்று இன்னொரு சாராரும் வாதிடுகின்றனர்.

கல்வியும் சிவில் சமூகமும் பற்றி விளங்கிக் கொள்வதற்கு மேலும் ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. சில குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு சிலர் ஒன்றிணைந்து குறித்த நடத்தைகளை முன்னெடுக்கும் பொழுது சிவில் சமூகம் உருவாக்கம் பெறுகின்றது. சிவில் சமூகம் என்ற பிரிவிலே பல்வேறு நிறுவனங்கள் தோற்றம் பெறுகின்றன.

அதாவது கல்விக்கழகங்கள், வாண்மைக் கழகங்கள், கலை இலக்கிய நிறுவனங்கள், தொடர்பாடல் நிறுவனங்கள், பண்பாட்டு அமைப்புக்கள், சமய நிறுவனங்கள் என்ற வாறு சிவில் சமூக நிறுவனங்கள் உருவாக்கம் பெறுகின்றன. சில ஆய்வாளர்கள் அரசியற்கட்சிகளையும் சிவில் சமூகம் என்ற பிரிவில் உள்ளடக்குவர். அடம் பேர்குசன் (1766) போன்ற ஆய்வாளர்கள் சிவில் சமூகமே சமூகத்தின் உன்னதவடிவம் என்றும் பதினெட்டாம் நூற்றாண்டிலே விதந்துரைத்தனர்.

உலகக் கல்வி வரலாற்றை நோக்கும் பொழுது கல்விச்சீர்திருத்தங்களிலே சிவில் சமூகத்தினர் குறிப்பிடப்பட்ட சீர்திருத்தங்களை மேற் கொண்டு வந்துள்ளனர். காலனித்துவ ஆட்சியில் இந்தியாவிலும் இலங்கையிலும் தோற்றம் பெற்ற சமய மறுமலர்ச்சி கல்வி மறுமலர்ச்சி முதலானவற்றில் சிவில் சமூகத்தினரது பங்கு சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனால் அந்த மறுமலர்ச்சியினால் சமூக அடுக்கமைவின் உயர் நிலையிலிருந்தோரே மிகையான நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவில் சமூகத்தின் கல்வி அணுகுமுறைகளை வலியுறுத்துவோர் பின்வரும் பரிமாணங்களைச் சுட்டிக்காட்டுவர்.

1. கல்வி முன்னேற்றம் நோக்கி கூட்டாக, குழுவாகச் செயற்படுதலை முன்னெடுக்கின்றது.
2. மாற்று வழிகளைக் கண்டறிவதற்குரிய எழு முறைகள் அதனால் முன்னெடுக்கப்படுகின்றன.
3. அரசின் பணிகளும் சிவில் சமூகத்தினாலே சுமக்கப்படுகின்றது. கல்விச் செயற்பாடுகளிலே அரச சார்பற்ற கல்வி நிறுவனங்கள் தொடர்ச்சியாகப் பங்கேற்று வருகின்றன.
4. கவனம் செலுத்தப்படாத துறைகளிலும், ஓரங்கட்டப்பட்ட விடயங்களிலும் அதன் வழியாகக் கவனம் செலுத்தப்படுகின்றது.
5. அரசினாற் பயன்படுத்தப்படாத மனித ஆற்றலும், அரச இயந்திரத்தினாற் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்ட மனித ஆற்றலும் சிவில் சமூகத்தின் வழியாகப் பயன்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.
6. குறித்த அறிவுக்கையளிப்புச் செயற்பாட்டை வரன்முறை சார்ந்த வகையிலும், வரன்முறை சாரா வகையிலும் அவை முன்னெடுக்கின்றன.
7. அரசின் கவனிப்புக்குப் பெருமளவிலே உள்ளாக்கப்படாத முன்பள்ளிக் கல்வி, மாற்றுவலுவுடையோருக்கான கல்வி முதலியவற்றிலே சிவில் சமூகம் கூடிய கவனத்தைச் செலுத்துகின்றது.
8. விளைஞர்களின் (Clients) கல்வி விருப்பினை அரசைக் காட்டிலும் கூடிய ஆர்வத்துடன் சிவில் சமூகம் அணுகிச் செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சில சந்தர்ப்பங்களிலே அரசைக் காட்டிலும், வினைத்திறன் கொண்ட தொடர்பாடலையும், மக்கள் பங்களிப்பையும் அவை முன்னெடுக்கின்றன.

10. பன்மை நிலை கொண்ட நாடுகளிலே அரசின் ஒற்றைப் பரிமாண நோக்கினையும் அணுகுமுறைகளையும், தனியுரிமைச் செயற்பாடுகளையும் ஓரளவிலேனும் தடுத்துக் கொள்வதற்கு சிவில் சமூகங்கள் உதவுமென நம்பபடுகின்றது.

கல்வி உரிமைகளை வலியுறுத்துதல், சமூகக் குழுக்களுக்கும் தனி மனிதருக்குமுரிய கல்வித் தேவைகளை இனங்காணுதல், கல்வியிலே நிறைவேற்றப்படாத பரப்புக்கள் மீது கவனக்குவிப்பை ஏற்படுத்தல் முதலியவற்றைச் சிவில் சமூகங்கள் முன்னெடுக்கின்றன. அவற்றின் பொருட்டு ஊடகங்களைப் பயன்படுத்துதல், கருத்தரங்குகளை அமைத்தல் முதலாம் அறிகை சார்ந்த செயற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்படுகின்றன. ஆனால் அவை சிலவேளைகளிலே எதிர்மறையான செயற்பாடுகளையும் புரிகின்றன. சிறுபான்மைக்குரல்கள், தேசிய இனங்கள் முதலியவற்றை ஒடுக்குவதற்குரிய சிவில் சமூகங்களும் பல்லின மக்கள் வாழும் நாடுகளிலே காணப்படுகின்றன.

சமகாலச் சமூகம் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வருகின்றது. ஆனால் அந்த மாற்றங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பன்முகமாகிய கல்விச் செயற்பாடுகள் முறைசார்ந்த வகையிலும், முறைசாரா வகையிலும் இடம் பெறுகின்றனவா? என்பது கேள்விக்குரியது. சமகாலச் சமூக மாற்றங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்;

1. மரபுவழியான குடும்ப உறவிலும் கட்டமைப்பிலும் நிகழ்ந்த தகர்ப்புக்கள் யுத்தம், சுனாமி, இடப்பெயர்வு முதலியவற்றால் நிகழ்ந்த இழப்புக்களும் நொருங்குண்ட குடும்பங்களும், மரபு வழியான குடும்பங்கள் கல்வியிலே மேற்கொண்ட கவனத்தைச் சமகாலத்திலே மேற்கொள்ள முடியாத தடைகளும், இடர்களும், இயலாமையும்.

2. பின்னைய முதலாளியத்தின் பரந்துபட்ட வளர்ச்சியும் மாற்றுவகையான முகாமைத்துவங் கோலங்களும், கல்வியிலே நேரடியாகத் தலையிடுதல் வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளமை.

3. பல்வேறுபட்ட தொழில் முறைகள் சார்ந்த துணைப பண்பாடுகளின் (Sub Cultures) வளர்ச்சியும் அவற்றுக்கிடையே காணப்படும் இணக்கமும் பிணக்குகளும்.

4. உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சேவை நிறுவனங்களிலே இடம் பெற்று வரும் மனிதம் சாரா உறவுகள் (Impersonality of Relation Ship) அதாவது ஒருவரது உணர்வை மற்றவர் புரிந்து கொண்டு வர்க்க உணர்வுடன் தொழிற்படுவதற்கு இடையூறாகக் காணப்படும் நிலவரங்கள். உதாரணமாக



ஒருவர் ஒரு தொழில் நிலையத்திலிருந்து நீதியற்ற முறையிலே வெளியேற்றப்படும் பொழுது அது அவருக்குரிய சொந்தப் பிரச்சினையாகச் சுட்டிக் காட்டப்படுகின்றதேயன்றி வர்க்கப் பிரச்சினையாகக் காட்சி கொள்ளப்படாது திரிபாக்கம் மேற்கொள்ளப்படுதல்.

5. நவீன சமூக வளர்ச்சியும், பிள்ளைகளுக்குரிய கல்வி நெருக்கீடுகளும், வருமானப் பின்னடைவுகளும் பெண்களுக்குரிய சுமை தாங்களை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. பிள்ளைகளின் கல்விப் பின்னடைவுகளுக்கு தந்தையொருவரைக் காட்டிலும் தாய்மாரே கூடிய பொறுப்பியத்துக்கு (Accountability) உள்ளாக்கப்படுதல்.

6. நெருக்கீடுகள் நிறைந்த சமூக பொருளாதாரச் சூழலிலே தனி மனிதர் உளவியல் நெருக்குவாரங்களுக்கும், மனமுறிவுகளுக்கும் அன்னியமாதலுக்கும் உள்ளாகி வருதல். போதைப் பொருட்களின் பன்முகப்பட்ட வளர்ச்சியும் நுகர்ச்சியும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளமை.

சமூகத்திலே பலவீனங்கள் மலியும் பொழுதும், அறியாமை பரவலாகக் காணப்படும் பொழுதும் அதிகாரமையங்கள் வளர்ச்சியுறத் தொடங்குகின்றன. அரச அதிகாரத்துக்கு எதிராகத் தோற்றம் பெறும் சிவில் சமூகங்களே அதிகாரமையங்களாக மாறிவிடும் முரண் விசைகளும் தோற்றம் பெறுதல் உண்டு.

அந்நிலையிலே சிவில் சமூக அமைப்பு அனைத்தையும் ஒரே தராதரத்துக்குள் அடக்கிவிட முடியாது. ஆய்வு நிலையிலே சிவில் சமூகங்களைப் பின்வருமாறு வகைப்படுத்த வேண்டியுள்ளது.

1. *சீர்திருத்தங்களை முன்னெடுப்பவை:* அடிப்படையான சமூகமாற்றத்தை ஏற்படுத்தாது; சில துறைகளிலே மாற்று நடவடிக்கைகளையும் செம்மைப்பாடுகளையும் முன்னெடுப்பவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எதிர்த்தலையும் தாக்குப் பிடித்தலையும் மேற்கொள்பவை, அவற்றை எதிர்க்கட்டு வகை (Resistance Type) என்று குறிப்பிடலாம்.

3. புரட்சியை முன்னெடுப்பவை என்பதும் பழிப்பும்மிக்க சமூக அமைப்பை அடியோடு புரட்டி மாற்றியமைத்துப் புதிய சமூகத்தையும், புதிய பண்பாட்டையும் முழுநிறைவான ஆளுமை வளர்ச்சிக்குரிய ஊறுபடாத கல்வியை முன்னெடுக்கும் வகை.

நவீன சமூகங்களின் இயல்பும் ஆட்சிமுறைமைகளும், அவற்றின் மறுபக்கங்களும் சிவில் சமூகத்தைத் தோற்றம் பெறச் செய்கின்றன. சிவில் சமூகத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும், அடையாளங்களிலும் அறிவுக் கையளிப்பும் தொடர்பாடலும் என்ற செயற்பாடுகள் சிறப்பிடம் பெறுகின்றன. சிவில் சமூகத்திலே அறிவும் வினைப்பாடுகளும் (Actions) ஒன்றிணைக்கப்படுகின்றன.

கல்வியியல் என்பது மிகுந்த ஆழமானதும், ஆய்வு பூர்வமானதும், முற்றிலும் வாண்மை சார்ந்ததுமான ஒருதுறை. ஆனால் மூன்றாம் உலக நாடுகளிலே கல்விக் கொள்கைகளை உருவாக்குதல் கல்வியைத் திட்டமிடுதல், கலைத்திட்டங்களை வடிவமைத்தல் கல்வியின் செயலாற்றுகைகளை நெறிப்படுத்துதல் முதலியவற்றிலே கல்வியியல் சாராத பிறதுறைகளைச் சார்ந்தோரே ஈடுபடுத்தப்படுவதால், பாரிய பின்னடைவுகளும் எதிர்விளைவுகளும் காணப்படுகின்றன. அதே நிலை கல்வி தொடர்பான சிவில் சமூகத்திலும் காணப்படுகின்றது.

## சிவில் சமூகம்...

மார்க்சியப் பாரம்பரியத்தில் 'சிவில் சமூகம்' என்கிற கருத்தாக்கத்திற்குப் புதிய பரிமாணம் சேர்த்தவர் அந்தோனியோ கிராம்சி. சிவில் சமூகத்தில் செயற்படும் நிறுவனக் கட்டமைவுகளின்பால் அவர் கவனத்தை ஈர்த்தார். கல்விமுறை, மத அமைப்புகள், தொடர்புச் சாதனங்கள் முதலான நிறுவனங்கள் முக்கியமானவை. பின்னாளில் அவற்றை அல்துஸர் 'கருத்தியல் அரசு கருவிகள்' என்று வகைப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. ஆளும் கருத்தியல், எதிர்க்கருத்தியல்கள் உள்ளிட்ட பல்வேறு கருத்தியல்களும் மேற்குறித்த கருத்தியல் சார் கருவிகளும் சந்திக்கும் புள்ளியே சிவில் சமூகம். இது தனது உறுப்பினர்கள் மத்தியில் பல்வேறு அம்சங்களில் கருத்தொருமிப்பை உற்பத்தி செய்கிறது. ஏதேனும் ஒரு கருத்தியல் மேலாண்மை உருப்பெறுகிறது. வன்முறை அல்லது வற்புறுத்தலின் விளைவாக இம் மேலாண்மை உருப்பெறுவதில்லை. மேலாண்மை பெற்ற இக்கருத்தியல் அரசியல் சமூகத்தைத் (அரசை) தாங்கி நிலைநிறுத்துகிறது. இந்த அரசியல் சமூகம் வன்முறையான / வற்புறுத்துகிற அரசு கருவிகளைக் (காவல்துறை, சட்டம், அரசு நிர்வாகம், நீதிமன்றம்) தன்னகத்தே கொண்டுள்ளது.

எனவே புரட்சிகரமான ஓர் மாற்றம் வேண்டுபவர்கள் முதலில் சிவில் சமூகத்திற்குள் தமது கருத்தியலை மேலாண்மை (Hegemony) பெறச் செய்யவேண்டும். கருத்தியல் போராட்டங்களுக்கும், அறிவுஜீவிகளுக்கும் கிராம்சியின் கருத்தாக்கத்தில் முக்கிய பங்கு அளிக்கப்படுகின்றது. சிவில் சமூகத்திற்கும் அரசுக்கும் உள்ள நெருக்கம் கிராம்சியின் வரையறையில் முக்கியம் பெறுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வீச்சுப்பெற்ற உலகமயம் தேசிய இறையாண்மைகளைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இன்றைய புதிய தாராளவாதச் சிந்தனையாளர்கள் மீண்டும் சிவில் சமூகம் குறித்து அதிகம் பேசுகின்றனர். அரசு, ஏதேச்சதிகாரம் ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் தலைசிறந்த நிறுவனமாய் சிவில் சமூகத்தை அவர்கள் முன் வைக்கின்றனர். மனித உரிமை அமைப்புகள், சுற்றுச்சூழல் இயக்கங்கள், சேவை அமைப்புகள், உலக வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்க்கும் அமைப்புகள், இவ்வாறும் இது போன்றவற்றை முன்னிலைப்படுத்தும் அரசு சாரா நிறுவனங்களையும் (NGO) இவர்கள் சிவில் சமூகமாக வரையறுக்கின்றனர். சிவில் சமூக நிறுவனங்களையே சிவில் சமூகமாக இவர்கள் முன் வைக்கின்றனர். உலகமயச் சூழலில் 'உலக சிவில் சமூகம்' (Global Civil Society) என்கிற கருத்தாக்கத்தையும் இவர்கள் முன்னிலைப்படுத்துகின்றனர்.

மொத்தத்தில் அரசிலிருந்து வேறுபட்ட பல்வேறு நிறுவனங்களின் வலைப்பின்னலாக சிவில் சமூகத்தை இவர்கள் வரையறுக்கின்றனர்.

மேற்குறித்த புதிய தாராளவாதிகளின் (New Liberals) வரையறையில் மார்க்சியர்கள் வலியுறுத்திய இரு அம்சங்கள் அடிக்கடி வாசிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. அவை 1. சிவில் சமூகத்தின் உள் நிறுவனங்களுக்கிடையிலான மோதல்கள் 2. சிவில் சமூகத்தில் உருவாகும் கருத்தியல் மேலாண்மை அரசைத் தாங்கிக் காப்பாற்றும் தன்மை.

-அ.மார்க்ஸ்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் மூலம் மனித உரிமை - சில அனுபவங்கள்

வே.வசந்திதேவி

மனித உரிமைகளை நிலைநாட்ட நாங்கள் என்ன செய்ய முடியும்? பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு கேள்வி பள்ளி ஆசிரியர்கள் சிலரால் மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மக்கள் கண்காணிப்பகத்தின் (People's Watch) முன் வைக்கப்பட்டது. அந்தக் கேள்வியும் அதன் உட்பொருள் சார்ந்த சிந்தனையையும் அந்தச் சவாலை எதிர்கொள்ள வேண்டுமென்னும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. ஒரு மனித உரிமை அமைப்பு, கல்வி என்னும் அதன் செயல்தளத்திலிருந்து வேறுபட்ட ஒரு தளத்தில் ஈடுபடத் துணியலாமா? ஒரு சமூக ஆர்வலர் கல்வியாளராகச் செயல்பட முடியுமா? கல்வியின் குறிக்கோள் தகவல்களைக் கற்றுத் தருதல் அல்ல, சமூக உணர்வூட்டுவதும் மனிதநேயத்தை வளர்த்தெடுப்பதும் எனக் கொண்டால் சமூக ஆர்வலரைக் காட்டிலும் யார் சிறந்த கல்வியாளராக இருக்க முடியும்?

இன்றைய கல்வி மானுட விடுதலைக்கு வழி வகுப்பதற்குப் பதில் ஆதிக்கச் சக்திகளின் தந்திரமான கரங்களின் அபாயகரமான ஆயுதமாக மாறியிருக்கிறது. அதனால்தான் இவான் இலியிச் (Ivan Ilyich) வகுப்பறை உடைக்கும் சமுதாயம் (De-Schooling Society) வேண்டுமென அறை கூவல் விடுத்தார். பெலே பிரியரே ஒடுக்கப்பட்டோருக்கான கற்றல் கலை (Pedagogy of the Oppressed) என்னும் ஒன்றை உருவாக்க முயன்றார். மாற்றுக் கல்வியின் மூலம் மானுட விடுதலை எட்டப்பட வேண்டும்.

தொழில்நுட்பக் கல்வி உள்பட அனைத்து வகைக் கல்வியுமே ஒரு வகையில் மனித உரிமைக் கல்வியாகத்தான் இருக்க வேண்டும். அனைத்து அறிவியல், தொழில்நுட்ப முயற்சிகளின் முதல் இலட்சியமே மனித வாழ்க்கை, அதன் எதிர் காலம் குறித்த கரிசனைதான். உங்கள் அறிவியல் வாய்ப்பாடுகள், வரை படங்களுக்கு இடையில் சிக்கி இதை ஒருபோதும் மறந்துவிட வேண்டாம் என மாபெரும் அறிவியலாளர் ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன் சொன்னதை இங்கே குறிப்பிட வேண்டும். கல்வி என்பது நேரடியாகவே அப்படி அல்லாமலே மனித உரிமைகளை வளர்த்தெடுப்பதாக இருக்க வேண்டுமேயல்லாமல் சலுகை பெற்ற சிலரது உரிமையாக அல்ல. வர்க்க, சாதி, பாலின, இன, கலாசார, மத, உடல்-மனரீதியாகக் கற்பிக்கப்பட்டுள்ள அனைத்து வகையான பாகுபாடுகளுக்கும் அப்பால் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரது வாழ்வுரிமைகளையும் காப்பதாக, அவர்கள் எல்லோருடைய திறமைகளை வளர்ப்பதாகக் கல்வி இருத்தல் வேண்டுமென்பதே கல்வியாளர்களின் இன்றுவரை எட்ட முடியாத இலட்சியக் கனவு.

நடப்பிலுள்ள இன்றைய கல்வி முறை சமூகத்தைப் பலகூறுகளாகப் பிரிக்கிறது, மனிதர்களைப் பாகுபடுத்துகிறது, துண்டாடுகிறது. ஏற்கனவே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்துகிறது, நவீன உலகத்திற்கேற்ற புதியவகைப்பட்ட ஏற்றத் தாழ்வுகளை உருவாக்குகிறது, மாணவர்களைத் தம்மைச் சுற்றியுள்ள உலகிடமிருந்தும் தம் சொந்தச் சமூகத்திடமிருந்தும் அன்னியப்படுத்துகிறது. அன்னியப்படுத்தும் கல்வி சமூக நீதி, சமத்துவம் ஆகிய நாகரிக உலகின் மதிப்புகளைப் பேணத் தவறுவதுடன் அதன் மகத்தான பணி எனப் போற்றப்படும் அறிவுத் தேடல் சார்ந்த முயற்சிகளிலும் மிக மோசமாகத் தேல்வியடைகிறது. தடுப்புப் பட்டை அணிந்த கண்களின் வழியே உண்மையின் குன்றிப்போன சொரூபத்தைத் தான் மாணவர்களுக்குக் காட்டுகிறது இன்றைய கல்விமுறை.

மேற்குறித்த கேள்விகளுடன் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன் மனித உரிமைக் கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான தேடலை முன்னிறுத்திச் செயல்படத் தொடங்கியபோது அதை வடிவமைப்பதற்கான கருத்தியல்களும் ஊக்கமும் களத்திலிருந்து எங்களுக்குக் கிடைத்தன. கல்வி என்பது அதில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களின் பங்களிப்பைக் கோருவது. ஆகவே அதை வடிவமைக்கும் பணியைக் கல்வியாளர்களின் பொறுப்பில் விடத் தீர்மானித்தோம். ஆனால் அவர்கள் வித்தியாசமாகச் சிந்திக்கவும் ஈடுபாட்டுடன் செயல்படவும் தெரிந்த கல்வியாளர்களாக இருக்க வேண்டும். ஏற்றத்தாழ்வை உருவாக்கும் இன்றைய கல்விமுறையின் நிலையை உணர்ந்தவர்களாக, அதில் மாற்றங்களை உருவாக்க வேண்டுமென்னும் விருப்பமுடையவர்களாக இருப்பது முக்கியம். அத்தகையோரைத் தேடுவதே முதல் பிரச்சினையாக இருந்தது.

மனித உரிமைக் கல்வியை 1997ஆம் ஆண்டு ஒரு சிறு பரிசோதனை முயற்சியாக, சென்னை நகரத்திலுள்ள ஒன்பது கிறித்தவப் பள்ளிகளில் தொடங்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினோம். பின் மதுரை மாநகராட்சியின் சில பள்ளிகள், துறவியர் சபைப் பள்ளிகளுக்கு அது எடுத்துச் செல்லப்பட்டது. 2002இல் தமிழக அரசின் சுமார் 370 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் அதை அறிமுகம் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. நெடுங்காலமாகத் துயரங்களையும் அடக்குமுறைகளையும் அனுபவித்து வரும் சமூகங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் உரிமைக் கல்வி பயிலத் தொடங்கினர். இக்குழந்தைகள்தாம் உரிமைக் கல்வியின் பொருத்தப்பாடுகளையும் சாத்தியங்களையும் எங்களுக்குப் புலப்படுத்தியவர்கள்.

2007க்குப் பின்னர் மூன்றாண்டுகளில் மனித உரிமைக் கல்வி ஈரோடு, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சென்னை, மதுரை மாநகராட்சிகளிலுமுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது . 2005 வரை இத்திட்டம் தமிழகப் பள்ளிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. தமிழகம் தந்த கள அனுபவம் அதை மற்ற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லும் உத்வேகத்தை எங்களுக்கு அளித்தது. இன்று இத்திட்டம் இந்தியா முழுவதிலுமுள்ள 14 மாநிலங்களுக்குப் பரவியுள்ளது. மேலும் சில மாநிலங்கள் வரும் கல்வியாண்டில் இதில் இணைய விருக்கின்றன. இப்போது தமிழ்நாட்டில் உள்ள சுமார் 2300 பள்ளிகளிலும் பிற மாநிலங்களில் உள்ள 4000 பள்ளிகளிலும் மனித உரிமைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் சுமார் மூன்றரை லட்சம் மாணவர்கள் அதன் பயனாளிகளாக இருக்கின்றனர். தமிழ் உள்பட ஒன்பது இந்திய மொழிகளில் பயிற்றுவிக்கப்படும் இக்கல்வி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு முன்னோடித் திட்டமாக (Pilot Project ) சுமார் 50இலிருந்து 700 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் இக்கல்வி பெறுகின்றனர்.

ஆறாம் வகுப்பில் மனித உரிமைகள் குறித்தும் ஏழாம் வகுப்பில் குழந்தைகளின் உரிமைகள் குறித்தும் எட்டாம் வகுப்பில் பாகுபாடு குறித்தும் அறிமுகப்படுத்தும் விதத்தில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பாடங்கள் மாணவர்களின் வாழ்வியல் சூழல், அவர்களது அன்றாட அனுபவங்கள், ஊடகச் செய்திகள் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்படுகின்றன. மாணவர்கள் தாம் கற்றதை வாழ்வுடன் பொருத்திப் பார்த்துத் தெளிவுபடுத்திக்கொள்ளும் விதத்தில் பயிற்சிகள் அமைக்கப்பட வேண்டுமென்பது பொதுவான நோக்கம். அனுபவப் பகிர்வுகள், குழு விவாதங்கள் ஆகியவையே கற்றல், கற்பித்தல் முறைகள். மனனக் கல்விக்கு இங்கே துளியும் இடமில்லை. அரசியல் சாசனப்படியான, சட்ட-ரீதியிலான வழிகளில் உரிமைகளை மீட்டெடுப்பதற்கும் அவற்றைப் பாதுகாத்துக்கொள்ளவும் முடியுமென மனித உரிமைக் கல்வியின் மூலம் மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டப்படுகிறது.



இந்நிறுவனம் மனித உரிமைக் கல்வியைத் தொடங்கியபோது, ஐக்கிய நாடுகள் சங்கத்தின் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகளுடன் (1995-2004) தொடர்புபடுத்திக் கொள்ளவில்லை. ஆனால் விரைவிலேயே அந்தச் சர்வதேசத் திட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டது. அந்தப் பத்தாண்டுகளின் முடிவில், ஐ.நா. ஒரு புதிய திட்டத்தை, ஆரம்ப, மேல் நிலைப் பள்ளிகளை மையமாகக் கொண்ட மனித உரிமைக் கல்விக்கான உலகத் திட்டம் (2005-2007) என்னும் பெயரில் அறிவித்துள்ளது. இந்த உலகத் திட்டம் பல்வேறு சமூகங்களுக்கிடையே நிலைத்த, நேயமான உறவுகளை உருவாக்கவும் வளர்க்கவும் அவர்களிடையே புரிதல், சகித்தல், சமாதானம் ஆகியவற்றை வளர்க்கவும் மனித உரிமைக் கல்வி மிகவும் தேவை எனக் கருதுகிறது. ஐ.நாவின் உலகத் திட்டக் குறிக்கோள்களை ஒட்டி இந்நிறுவனம் மனித உரிமைக் கல்வியை நடைமுறைப்படுத்துகிறது. ஐ.நா. இத்திட்டத்தின் தேவையை உணர்த்தி அதற்கு உலக அளவில் செயல்படும் அரசாங்கங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற உதவுகிறது.

இதயமற்ற உலகை மாற்றுவதே மனித உரிமைக் கல்வியின் அடிப்படைக் குறிக்கோள். அதை அடைவதற்கான பணி வகுப்பறையில்தான் தொடங்க முடியும் என்பதே நம்பிக்கை. மாற்று உலகிற்கான அன்பு, தோழமை, கருணை, அழகு, படைப்புணர்வு, சுதந்திரம், சமத்துவம் ஆகிய மாண்புகளின் விதைகளை குழந்தைகளின் மனங்களில் விதைத்து, வளர்க்க வேண்டும். இளம் மாணவர்களின் கண்முன் இன்றைய கொடுமைகளையும் அநீதிகளையும் அவலங்களையும் நிறுத்தி, அவற்றைப் புரிந்துகொள்ளவும் அலசி ஆராயவும் அவற்றிற்குச் சவால்விடவும் இறுதியில் மாற்றவும் தேவையான சக்தியை அவர்களுக்கு அளிக்கும் பணியை நாம் மேற்கொள்ள வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் கால, இடம் சார்ந்த தனிப்பட்ட தன்மை கொண்டவை என்பதை மனத்தில் கொண்டு, அதேசமயம், உரிமைகளின் உலகளாவிய பொதுமைத் தன்மையை (Universality) இலக்காகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறைகளாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மானுடம் முழுதும் நமதுலகம் என்ற உண்மையை ஆசிரியரும் மாணவரும் உணர வேண்டும். உரிமை மீறல்கள் எங்கு நடந்தாலும் சகித்துக்கொள்ள முடியாது, அவற்றை எதிர்ப்பதில் நமக்கு உடனடிப் பெறுப்புள்ளது. பாதிக்கப்பட்டோருடன் ஒருமைப்பாடும் அவர்களுக்கான ஆதரவும் அவர்கள் எங்கிருந்தாலும் நமக்கு இயற்கையாகப் பொங்கி வருதல் வேண்டும்.

பாடத்திட்டத்தை உருவாக்கும் பணி இத்தகைய கரிசனைகளுடன், பல கலந்தாய்வுகளுக்குப் பின் உருவாக்கப்பட்டது. வகுப்பறையை மாணவரின் வாழ்வுக்கும் சுற்றியுள்ள அருகமை சமுதாயத்திற்கும் கூடிய வரை நெருக்கம் கொண்டதாகச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று இத்திட்டம் பதினெட்டு மாநிலங்களுக்குச் சென்றுள்ள நிலையில், இந்தியாவின் பிரம்மாண்டமான பன்முகத் தன்மைக்கு ஏற்ற வண்ணம் உள்ளடக்கத்தை மாற்ற வேண்டியதன் தேவையைத் தீர்க்கமாக அதன் செயலாளர்கள் உணர்கின்றனர்.

அடுத்தது கற்றல் - கற்பித்தல் முறை (Pedagogy) தொடர்பான பிரச்சினை. இது அதிகச் சவாலான பிரச்சினை. புரட்சிகரக் கல்விக்குப் புரட்சிகரக் கற்றல் முறைகள் தேவை. இன்றைய இந்திய வகுப்பறைகள் மாணவர்கள்மீது அதிகாரம் செலுத்தும் ஆசிரியர்களைக் கொண்டவை. மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையே நிலவும் உறவுகள், பாடத் திட்டம், தேர்வு முறைகள், ஒழுக்க விதிகள் ஆகியவை மனித உரிமைக் கலாசாரம் வளருவதற்குத் தடையாக உள்ளன. மனித உரிமைக் கல்வி குழந்தையை மையமாகக் கொண்ட கல்வியாக இருத்தல் அவசியம். மௌனமாக விவரங்களை வாங்கிக்கொள்ளும் ஜடப்பொருளாகக் குழந்தையைப் பார்க்காமல், அவளை அறிவைப் படைப்பவளாகப் பார்த்தல் வேண்டும். அப்படியென்றால், *கல்வியின் மூலம் மனித உரிமை (Human rights Through Education) என்பதற்கு இணையாக கல்வியில் மனித உரிமை (Human Rights in Education) என்று செல்ல வேண்டும்.*

மனித உரிமைக் கல்வியை அனைத்துக் குழந்தைகளுக்கும் கற்பிக்க வேண்டும். உரிமை மறுக்கப்பட்டு, சமூக நீதி மறுக்கப்பட்டு விளிம்பு நிலையில் இருத்தப்பட்ட குழந்தைகளின் இயல்பான ஆற்றலை மீட்டெடுக்க இக்கல்வி தேவை. மனித உரிமைக் கல்விக்கான வகுப்பறைகள் அதற்கான பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும்.

கல்வி ஒரு மாணவர் மீது உருவாக்கும் தாக்கங்களின் விளைவுகளை உடனடியாகக் கணிக்க முடியாது. குறிப்பாக நெறிமுறைகளை வளர்க்கும் கல்வி நீண்ட காலப் பயிர். அதை - அளவைகளைக் கொண்டு மதிப்பிடவும் கூடாது.

ஆயினும், இத்தருணத்தில் நாங்கள் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கிறோம். நாம் செய்தது என்ன, செய்யத் தவறியது என்ன, என்பவற்றை உணர அது வாய்ப்பாக அமையும். மனித உரிமைக் கல்வி மாணவர்களின் நடத்தைகளில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களையும் அவர்களது மனங்களில் ஏற்பட்டுள்ள சலனங்களையும் அதன் மூலம் உணர்வது தொடர்ந்த செயல்பாடுகளுக்கு அவசியம். நூற்றுக்கணக்கான கதைகள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. ஒன்று, இரண்டு என மாணவர்களின் மனங்களிலிருந்து மெல்ல மெல்லக் கசிந்துவந்த கதைகள் அவை.

மாணவர்களைச் சந்தித்து, இப்புதிய பாடம் குறித்து அளவளாவும் போது பல பதில்கள் - நாட்கள் செல்லச் செல்ல மாறிவரும் பதில்கள் - கிடைக்கின்றன. அனைத்து மாணவர்களிடமிருந்தும் பொதுவாகக் கிடைக்கும் பதில் எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு என்பதுதான். முதலில் இந்தப் பாடத்துக்குத் தேர்வு இல்லை என்பதால் பிடித்திருப்பதாகச் சொன்னார்கள். மனித உரிமைக் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களை அடிப்பதில்லை. கற்பிக்கும் ஆசிரியர்களிடமுங்கூட மாற்றங்கள் தென்படுவதாய் மாணவர்கள் சொல்கிறார்கள். மனித உரிமைக் கல்வி வகுப்புகளில் மட்டு மல்லாமல் வேறு எந்த வகுப்புகளிலும் எந்த மாணவரையும் அடிக்கக் கூடாது என நினைக்கிறார்கள். முதல்முறையாக எங்களைப் பற்றிப் படிக்கிறோம் என மாணவர்கள் பலர் செல்வதைக் கேட்கிறோம். மனித உரிமைக் கல்வி அவர்களது ஊரில், தெருவில், வீடுகளில் என்ன நடக்கிறதோ அதைப் பற்றிப் பேசுகிறது. குடித்துவிட்டு வந்து தாயை அடிக்கும் தந்தையைப் பற்றி, நண்பனொருவன் படிப்பைப் பாதியில் விட்டுவிட்டுக் கூலி வேலைக்குப் போனதைப் பற்றி, தங்கள் ஊரின் கோயிலுக்குள் தாங்கள் நுழைய முடியாததைப் பற்றி, தங்களுடைய ஆறுகளும் குளங்களும் நீர்நிலைகளும் வற்றிப் போனதைப் பற்றிப் படிக்கிறார்கள் மாணவர்கள்.

சரி. இதெல்லாம் தெரிஞ்சுக்கறதுல என்ன பிரயேஜனம்? மாத்த முடியுமுன்னு நம்பறீங்களா? எனக் கேட்கிறோம். நம்பிக்கையூட்டும் பதில்கள் எங்களுக்குக் கிடைக்கின்றன. தாயை அடிக்கும் தந்தையை மனித உரிமைக் கல்விபயிலும் மகன் தட்டிக் கேட்கிறான். மாணவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் தோழிக்கு நடக்கவிருந்த பால்ய விவாகத்தைத் தடுத்து நிறுத்துகிறார்கள். மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து குழந்தைத் தொழிலாளர் ஒருவரை மீட்கிறார்கள். கட்டடத் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த 75 குழந்தைகள் பள்ளிக்குச் சொல்லவியலாமல் பரிதவித்தபோது, அருகிலிருந்த பள்ளியின் மனித உரிமைக் கல்வி மாணவர்கள் அவர்களுக்காக அதிகாரிகளை அணுகி புதிய பள்ளி ஒன்றைத் தொடங்கச் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெல்லாம் இத்திட்டத்தைக் கொண்டு சென்றிருக்கின்றோமோ அங்கிருந்தெல்லாம் இப்படிப்பட்ட நம்பிக்கை அளிக்கும் கதைகள் வருகின்றன. இக்கதைகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த அடக்குமுறைகளின் குட்டையில் வீசப்பட்ட கல்.

இப்பாதையில் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிற சவால்களும் அதிகம்.

முறைசார் கல்வி அரசின் பொறுப்பில் நடப்பது. ஒரு குடிமைச் சமூக நிறுவனமான மனித உரிமைக் கல்வி நிறுவனம் அரசுக்குரிய களத்தில் தலையிட்டிருக்கிறது. சில சமயங்களில் இது அரசுக்கும் குடிமைச் சமூகத்திற்கும் இடையிலான எல்லையை மீறும் செயலாகப் பார்க்கப்படுகிறது. கல்வியாளருக்கான தகுதி இவர்களுக்கு இருக்கிறதா? என்றும் கேள்வி சில சமயங்களில் எழுப்பப்பட்டு, எங்கள் பணிகள் சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய விமர்சனங்கள் பலவீனமடைந்து வருவதையும் பார்க்கிறோம். காரணம் எங்கள் நிறுவனம் கல்வித் துறையில் உயர் பதவி வகித்த பலரின் தலைமையில், வழிகாட்டுதலில் செயல்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்தின் ஆலோசனைக் குழுக்களிலும் புகழ்பெற்ற கல்வியாளர்களும் தேசிய அளவில் மதிக்கப்படும் பெரியோரும் உறுப்பினராக உள்ளனர்.

எல்லாச் சமூகங்களிலும் ஆதிக்கப் பிரிவினரே அரச அதிகாரத்தைக் கையில் வைத்துள்ளனர். இவர்கள் நாம் அங்கு நிலவுகின்ற சமத்துவமற்ற சுரண்டல் சமுதாயத்தின் பயனாளிகள். இத்தகைய ஆதிக்கங்களை விமர்சிப்பதும் சவாலுக்கு உள்ளாக்குவதும் இறுதியில் அவை தூக்கி எறியப்படும் என்று நம்புவதும் மனித உரிமைக் கல்வியின் பணி. ஆகவேதான் டால்ஸ்டாய் ஒருமுறை சொன்னார், உண்மையான கல்வி, விடுதலை அளிப்பது. புத்தியுள்ள எந்த அரசும் அதை அனுமதிக்காது. அரசாங்கங்கள் புரட்சிகரக் கல்விக்கு ஆதரவு அளிக்குமென எதிர்பார்ப்பது எந்த அளவு சாத்தியம்? இங்கு, ஒரு நவீன, ஜனநாயக நாட்டின் சித்தாந்தத்திற்கும் நிதர்சனத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு நமக்குச் சாதகமாகிறது. இந்திய அரசியல் சாசனம் மனிதநேயத்தை வலியுறுத்துவது. அதன் ஜனநாயகக் கோட்பாடுகளை நிறைவேற்ற வேண்டிய கடமை அரசுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரம், சமத்துவம் என்ற முழக்கங்கள், மேடைப் பேச்சுகள், வார்த்தை ஜாலங்கள் ஒரு வர்க்க - சாதிய சமுதாயத்தின் கொடூரங்களை மூடி மறைக்கின்றன. ஆகவேதான், மனித உரிமைக் கல்வி வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான் என்கிற நம்பிக்கையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதன் புரட்சிகரத் தன்மை வெளிப்படையாகத் தெரியவரும்வரை வகுப்பறைக்குள் அது அனுமதிக்கப்படும்.

ஆயினும், சில மாநில அரசுகளுக்கு எங்கள் மனித உரிமைக் கல்வியின் உள்ளடக்கம் உறுத்தலாக இருக்கிறது. மாணவரிடையே ஏற்றத் தாழ்வுகள் குறித்தும் பாகுபாடுகள், மனித உரிமை மீறல்கள் குறித்தும் பேச வேண்டிய தேவையென்ன என்று அந்த அரசுகள் கேட்கின்றன. பாகுபாடுகள் பாடமாகலாமா என்று கேட்கின்றன.



பாடத்திலிருந்து சாதியை எடுத்து விடுங்கள், தீண்டாமையை எடுத்து விடுங்கள் எனச் சிலர் எங்களிடம் வலியுறுத்துகின்றனர். இவை மனித உரிமைக் கல்வியை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சி. நாங்கள் அவர்களிடம் எடுத்துச்சொல்லி எங்கள் பாடத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய முயல்கிறோம். நாம் இன்று வாழும் உலகமயதாராளமயக் காலம் மனிதாபிமானத்தைக் கொன்று கொண்டிருக்கும் காலம். கல்வி அமைப்பு மூலதனத்தின் தேவைக்காக உருவாக்கப்படுகிறது. அரக்கத்தனமான, ஈவிரக்கமற்ற, மனிதனை மனிதன் விழுங்கும் போட்டிகளில் பங்குபெறுவதையே கல்வியின் இலட்சியமாகக் கற்பிக்கிறது. உலகை வெல்லும் குறிக்கோளுடன் நம் குழந்தைகளின் மனம் புரோகிராம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு தனிமனிதன் தன்னந்தனியாக முயன்று போட்டியில் வெல்ல வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் கடுமையாக உழைப்பதுதான் இன்று ஆதர்சமாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கு எதிர்மாறாக, மனித உரிமைக் கல்வி ஒன்றுபடுவதன் உயர்வையும் அதனால் கிடைக்கப்பெறும் சக்தியையும் ஒற்றுமையைக் காட்டுவதையும் கொண்டாடுகிறது. இன்றைய சித்தாந்தம் எப்படி இதை ஏற்றுக்கொள்ளும்?

போட்டிக் கல்வி உருவாக்கியிருக்கும் கேடுகளில் ஒன்று கடுமையான பாடத் திட்டச் சுமை. வசதி படைத்த பெற்றோரின் வானளாவிய கனவுகளை நிறைவேற்றி வைப்பதான வாக்குறுதிகளுடன் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சுமக்க முடியாத புத்தகங்கள், அச்சுறுத்தும் தேர்வுகள். சில பள்ளிகள் எங்களிடம் கேட்கின்றன, மனித உரிமைக் கல்விக்கெல்லாம் எங்களுக்கு நேரம் ஏது? தேர்வில் முதலிடத்தைப் பிடிப்பதற்காக மாணவர்களைத் தயாரிப்பதற்கு ஒவ்வொரு நிமிடமும் தேவைப்படுகிறதே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை மீறல்களின் ஒரு பகுதியான அரச வன்முறையைப் பற்றிப் பேசலாமா? அனைத்து மாநிலங்களிலும் மனித உரிமைக் கல்வி பயிலும் மாணவரில் மிகப் பெரும்பாலோர் அரச வன்முறைக்குப் பலியாகும் குடிமக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அரசின் அத்து மீறல்களைக் கண்கூடாகக் காண்பவர்கள். ஏழ்மையில் மூழ்கிக் கிடக்கும் அவர்களது வீடுகளின் மீது காவல் துறை தாக்குதல் நடத்துவதும் தந்தை அல்லது தாயின் மீது பொய்க் குற்றம் சுமத்தி, அவர்களை இழுத்துக்கொண்டுபோவதும் அவர்கள் காணும் வாழ்வியல் காட்சிகள்.

பழங்குடியினர் பள்ளிக் குழந்தைகளே சட்டத்தின் காவலர்கள் காடுகளை ஆக்கிரமிக்கும் கிரிமினல்களுடன் சேர்ந்துகொண்டு பூர்வீக நிலங்களிலிருந்து தங்கள் இன மக்களை எலிகளைப் போல் விரட்டியதால் அனைத்தையும் இழந்து அகதிகளான தவிப்பையும் துயரத்தையும் அனுபவித்தவர்கள். இத்தகைய உரிமை மீறல்கள் குறித்து மனித உரிமைக் கல்வி வகுப்புகளில் பேசுவதா? பேசாவிட்டால், நாம் போலித்தனமானவர்கள் (Hypocrites) என்ற குற்றத்திற்கு ஆளாகமாட்டோமா? பேசினால், அரசின் ஆதரவு கிடைக்கும் என்று நம்ப முடியுமா?

உரிமை மீறல்களை வகுப்பறையில் பேசாப் பொருளாக்கிவிடுவதால் மாணவர் கண்களிலிருந்து அவற்றை மறைத்துவிட முடியுமா? உண்மைக்குத் திரைபோட முடியுமா? திரைக்கு அப்பால் நிதர்சன உலகில் வாழும் மாணவன் இவ்விரு உலகங்களில் எது உண்மை உலகம் என்று நம்புவான்? வகுப்பறை உலகம் போலி உலகம், ஏமாற்று உலகம். வாழ்க்கைக்கும் வகுப்பறைக்கும் தொடர்பு இல்லை என்று தானே நம்புவான்? தீவிரவாதம் பிறப்பது இந்த விலகலிலிருந்தும் மறுப்பிலிருந்தும்தான். உரிமைக் கல்வியைக் கற்றுக்கொள்வதிலிருந்தல்ல.

மற்றொரு பெரும் சவால் ஆசிரியர்கள். குழந்தைகளின் உரிமைகள் பற்றி விவாதித்தால் இன்றைய ஆசிரியரில் பலர் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட வேண்டியவர்கள் என்பது தெரிய வரும். ஆசிரியர்கள் இன்றைய வர்க்க, சாதி, பெண்ணடிமைக் கலாச்சாரத்தின் வார்ப்புகள். இவர்கள் உரிமைக் கல்வியைக் கற்பிப்பர் என்று எப்படி நம்புவது? ஆசிரியர் பயிற்சிகளிலெல்லாம் மிகுந்த சூட்டை எழுப்பும் விவாதம் குழந்தைகளை அடிக்காமல் எப்படிச் சொல்லிக் கொடுப்பது? அடிக்காவிட்டால் அவன் படிப்பானா உருப்படுவானா? அடியாத மாடு படியுமா? இத்தகைய மனநிலையிலிருந்து சிறிது சிறிதாகப் பல பயிலரங்கங்கள் வழி ஆசிரியர்களை மீட்டெடுக்க வேண்டியுள்ளது.

சாதிப் பாகுபாடுகளைப் பல ஆசிரியர்கள் அணுகும் முறை சாதியச் சித்தாந்தம் இச்சமுதாயத்தை



முழுமையாக ஆட்கொண்டிருப்பதற்கு சாட்சி. தலித், தலித் அல்லாத ஆசிரியரிடையே பயிலரங்குகளில் வெளிப்படும் நம்பிக்கையின்மைகள், இட ஒதுக்கீட்டால் முன்னேறியிருக்கும் பிற்படுத்தப்பட்டோரிடையே தலித் மக்களுக்கான சட்டங்கள், சலுகைகள் உருவாக்கும் காழ்ப்புணர்ச்சி இவற்றையெல்லாம் உடைத்துத்தான் இவர்களை மனித உரிமை கற்பிக்கும் ஆசிரியர்களாக மாற்ற இயலும். இது பிரம்மப் பிரயத்தனம்தான். ஆனால் இவற்றையும் கடந்து சிறந்த, அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட ஆசிரியர்கள் பலர் உருவாகியுள்ளனர் என்பது நம்பிக்கையூட்டும் நற்செய்தி.

நாங்கள் சந்திக்க வேண்டியுள்ள சவால்களும் கேள்விகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன. எல்லாக் கேள்விகளுக்கும் எங்களிடம் விடைகள் இல்லை. மனித உரிமைக் கல்வி ஆசிரியரும் மாணவரும் என்றே ஒரு நாள் விடைகளைக் கண்டுபிடிப்பர் என்னும் நம்பிக்கையில் நாங்கள் எங்கள் பணியைத் தொடர்கிறோம். சக்தி வாய்ந்த விதைகளை எங்கள் சிறிய கரங்களால் எடுத்து இந்த உபகண்டத்தின் மேல் வீசியுள்ளோம். அவை எங்கு விழுந்தாலும், முளைத்தெழும் என்னும் நம்பிக்கையோடு தொடர்கிறோம்.

(முனைவர் வே. வசந்திதேவி, முன்னாள் துணைவேந்தர், சமூகச் செயற்பாட்டாளர், ஆய்வாளர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைக்கான புதிய கல்விச் சட்டம்

சோ.சந்திரசேகரன்

புதிய கல்வி அமைச்சரின் கூற்றின்படி, புதிய கல்விச் சீர்திருத்தங்கள் கலாநிதி பந்துல குணவர்தன தயாரிந்த கல்வி அறிக்கையைக் கருத்திற் கொண்டமையும், குணவர்தன தயாரித்த கல்வி அறிக்கையின் பின்புலம், உள்ளடக்கம் பற்றி இச் சந்தர்ப்பத்தில் தெரிந்து கொள்வது பயனுடையதாகும். முன்னை நாள் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவியிலிருந்த போது, நாட்டிற்குத் தேவையான ஒரு புதிய கல்விச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சித்தார். அதற்கு உதவு முகமாக, அப்புதிய கல்விச் சட்டத்துக்கான வழிகாட்டல் தத்துவங்களை வழங்கு முகமாக அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் பெற்று 63 ஆண்டுகளாகி விட்ட போதிலும், ஒரு சுதந்திர நாட்டுக்குத் தேவையான கல்விச் சட்டமொன்று உருவாக்கப்படவில்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1939 ஆம் ஆண்டு அரசாங்க சபையில் நிறைவேற்றப்பட்ட கல்விச் சட்டமே இன்றும் நாட்டின் அடிப்படைக் கல்விச் சட்டமாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இச் சட்டம் இன்றைய கல்வித் தேவைகளைப் பொறுத்தவரையில் பயனற்றது என்பதோடு காலத்துக்கு ஒவ்வாதது என்ற விமர்சனமும் உண்டு. இலங்கையின் கல்வி முறையின் ஒரு பிரதான குறைபாடு, ஒரு சுதந்திர நாட்டுக்குத் தேவையான விரிவான புதிய கல்விச் சட்டமொன்று இன்னும் உருவாக்கப்படாமையாகும். ஏனைய உலக நாடுகளின் அனுபவங்களுடன் நோக்குமிடத்தும் இது ஒரு குறைபாடான அம்சமாகும்.

எனவே புதிய கல்விச் சட்டமொன்றை உருவாக்க வேண்டிய தேவை ஒன்றுள்ளது. இவ்வாறான சட்டமொன்று இல்லாவிடில் எதிர்காலக் கல்வி வளர்ச்சி தடைப்படலாம் என்றும் கல்வித்துறையில் இன்று காணப்படும் பிரச்சினைகளுக்கு இதுவும் ஒரு காரணம் என்றும் கருதப்படுகின்றது.

மேலும், 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க, கல்விக்கான அடிப்படைச் சட்டம் ஒன்றும் தேவைப்படுகின்றது. இத் தேவை இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. இவ்வரசியல் யாப்பின் "அரசுக் கொள்கை வழிகாட்டல் தத்துவங்களும் மற்றும் அடிப்படைக் கடமைகளும் 27 என்ற அத்தியாயத்தின்படி, அரசாங்கமானது எழுத்தறிவின்மையை முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டும், எல்லா மட்டங்களிலும் யாவரும் கல்வி பெறுவதற்கான உரிமையை உறுதி செய்ய வேண்டும். அதாவது கட்டாய இலவசக் கல்வி என்னும் தத்துவம் இவ்வத்தியாயத்தில் வலியுறுத்தப்படுகிறது. இந்நிலையில் தேசிய அபிவிருத்தி துரிதப்படுத்தப்பட, நன்கு வரையறுக்கப்பட்ட, அபிவிருத்தி நோக்கிய, பரந்த தன்மையுடைய புதிய கல்விச் சட்டமொன்று தேவைப்படுகின்றது.

மேலே கூறப்பட்டவாறான விரிவான சட்டவாக்கமொன்று சுதந்திர இலங்கையினால் உருவாக்கப்படாவிட்டாலும், தேவைக்கேற்ப சில சட்டங்கள் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டதைச் சுட்டிக் காட்ட வேண்டும். 1939 ஆம் ஆண்டின் கல்விச் சட்டம் 1945, 1946, 1947, 1951, 1956, 1973 ஆகிய ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பட்டு, அவை அனைத்தும் இன்றைய பொதுக் கல்வியை நிருவகிப்பனவாக உள்ளன. 1960 ஆம் ஆண்டின் உதவி பெறும் பாடசாலைகள், பயிற்சிக் கல்லூரிகள் சட்டமானது, உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கச் செய்தது. சில பாடசாலைகள் மட்டுமே தனியார் பாடசாலைகளாக இயங்க அனுமதிக்கப்பட்டன. தற்போது அரசாங்க உதவி பெறும் தனியார் பாடசாலைகளும் தனியாரின் சர்வதேச பாடசாலைகளும் இயங்குகின்றன. இவற்றில் சர்வதேச பாடசாலைகளுக்கான சட்டமேதுமில்லை.

1981 ஆம் ஆண்டின் இச் சட்டம் திருத்தப்பட்டு உதவி பெறாத தனியார் பாடசாலைகளுக்கு அரசாங்கம் நிதி வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1968 ஆம் ஆண்டின் பொதுப் பரீட்சைகள் சட்டத்தின்படி, பொதுப் பரீட்சைகள் முறையாக நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன, பரீட்சைச் சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. பொதுப் பரீட்சைகளின் போது இழைக்கப்படும் குற்றங்களுக்கான தண்டனைகளும் அச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டன. 1979 ஆம் ஆண்டின் பிரிவேனாக் கல்விச் சட்டமானது, பிரிவேனாக் கல்வியை மறுசீரமைத்தது. பிரிவேனாக் கல்விச் சபை, பிரிவேனா பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம் என்பவற்றை நிறுவியது. பௌத்த மதச் சூழலில் கல்வி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது இச் சட்டத்தின் நோக்கமாகும். 1985 ஆம் ஆண்டின் தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின்படி தேசிய கல்வி நிறுவகம் (மகரகம) அமைக்கப்பட்டது. பொதுக் கல்வியை மேம்படுத்த உதவுதல், கல்வித் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல், கல்வியியல் ஆய்வுகளில் ஈடுபடல், கல்வித்துறை ஆளணியினரின் (ஆசிரியர், அதிபர், நிர்வாகிகள்) தொழில் தகைமைகளை மேம்படுத்தல் போன்ற பணிகளும் கடமைகளும் இந்நிறுவகத்துக்குரியவை.

1986 ஆம் ஆண்டின் கல்வியியல் கல்லூரிகள் சட்டத்தின்படி, தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டங்கள், டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கப் பயிற்சி வழங்கும் வகையில் கல்வியியல் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன. இக்கல்லூரிகள் தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டன. இக்கல்லூரிகளை நிர்வகிக்கும் அதிகாரபீடம் "கல்வியியல் கல்லூரி சபை 27யாகும். 1991 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டமானது, காலத்துக்குக் காலம் தேசியக் கல்விக் கொள்கையைப் பிரகடனம் செய்யும் அதிகாரத்தைச் ஜனாதிபதிக்கு வழங்கியது. கல்வி தொடர்பான சகல விடயங்களிலும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க ஒரு தேசிய ஆணைக்குழு நிறுவப்பட இச் சட்டம் வழி வகுத்தது. கல்விக் கொள்கையில் தொடர்ச்சியை உறுதி செய்யவும் புதிய தேவைகளைக் கருத்திற் கொண்ட முறையில் கல்விக் கொள்கைகளைத் திருத்தி அமைக்கும் பணியிலும் இவ்வாணைக்குழு ஈடுபடும். 1987 ஆம் ஆண்டின் 13 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தமானது, கல்விப் பொறுப்பை மாகாண சபைகளிடம் ஒப்படைத்தது. மத்திய அரசாங்கம் கல்விக் கொள்கையை வரையும் பொறுப்பைக் கொண்டது.

தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல அரசாங்கப் பாடசாலைகளும் மாகாண சபைகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. கல்வித் துறையைப் பொறுத்தவரையில் மாகாண சபையின் பணிகளும் கடமைகளுமாவன; சகல அரசாங்கப் பாடசாலைகளுக்கும் வளங்களை வழங்குதல், (தேசிய பாடசாலைகள் தவிர்ந்த) முன்பள்ளிகளையும் அரசாங்கப் பாடசாலைகளையும் மேற்பார்வை செய்தலும் நிருவகித்தலும், ஆசிரியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு, 1அஆ, 1இ பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமித்தல், மாகாணக கல்விச் சபைகளை நியமித்தல், வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும். ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் செயலாற்றத்தை மதிப்பீடு செய்தல், தேசிய கல்வி நிறுவகத்தின் அனுமதியுடன் சேவை காலப் பயிற்சியை வழங்கல், பரீட்சை ஆணையாளரின் ஒப்புதலுடன் உள்ளூர் மாகாண மட்டப் பரீட்சைகளை நடத்துதல், முறைசாராக் கல்வி ஏற்பாடுகளைச் செய்தல், முன்பள்ளிகளைப் பதிவு செய்து மேற்பார்வையிடல். பாடசாலைக் கட்டிடங்கள், நூல் நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள் என்பவற்றை நிர்மாணித்தலும் பராமரித்தலும்.



மேலே தரப்பட்டுள்ள சுதந்திரகால இலங்கையின் சட்டவாக்கங்கள் முழுமையான தன்மையைக் கொண்டவையல்ல, அவை வெவ்வேறு காலப்பகுதிகளில் எழுந்த கல்வித் தேவைகள் காரணமாக எழுந்தவை, அச்சட்டங்களின் பல ஏற்பாடுகள் இன்றைய கால கட்டத்துக்கும் தேவைகளுக்கும் பொருத்தமானவையல்ல. அத்துடன் காலத்துக்கொவ்வாதவை. பல ஏற்பாடுகள் தற்போது பயனற்றவை. இவற்றை அகற்றுவதோடு, தற்போதைய சவால்களை எதிர்கொள்ளப் பல புதிய ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

கல்வித்துறை சார்ந்த புதிய சவால்கள் தேவைப்படுத்தும் புதிய சட்ட ஏற்பாடுகளுக்குச் சில உதாரணங்களைக் கூறலாம். சுதந்திரத்துக்குப் பின்னரான தேசிய கல்விக்கு அமைய, சகல பாடசாலைகளும் தேசிய மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொள்ள வேண்டியதாயிற்று. 1950கள் தொடக்கம் படிப்படியாக 6 ஆம் வகுப்பு தொடக்கம் 12 ஆம் வகுப்பு வரை சகல பாடங்களும் தாய்மொழியில் கற்பிக்கப்பட்டன. தனியார் பாடசாலைகளும் இக் கொள்கையைப் பின்பற்ற வேண்டியிருந்தது. உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானக் கல்வியும் தாய்மொழியில் கற்பிக்கப்பட்டது. இதனால், பாடசாலை மட்டத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க முடியாது என்பது தேசிய பயிற்று மொழிக்கல்வியின் ஒரு அம்சமாயிற்று.

ஆனால், இன்று அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கில மொழியில் கற்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 40,000 மாணவர்கள் வரை (மட்டுமே) ஆங்கில மொழியில் பயிலுவது அரசால் அனுமதிக்கப்பட்ட விடயம். க.பொ.த உ நிலை வகுப்புகளில் விஞ்ஞான பாடங்களும் கீழ் வகுப்புகளில் கணிதம், விஞ்ஞான பாடங்களும் ஆங்கில மொழி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யில் கற்பிக்கப்படுகின்றன. சில தனியார் பாடசாலைகளில் முதலாம் வகுப்பிலிருந்து ஆங்கில வழிக் கல்வி நடைபெறுகின்றது. உள்ளூர் பிள்ளைகள் பயிலும் சர்வதேசப் பாடசாலைகளிலும் ஆங்கில வழிக் கல்வியே நடைபெறுகின்றன.

இன்றைய நிலையில் ஆங்கில மொழி பல்வேறு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெற்று விட்டமையால், அரசாங்கத்தின் கல்வி மொழிக் கொள்கைக்கு முரணாக இவ்வாறு ஆங்கிலக் கல்வி முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இப்பின்புலத்தில் கல்வி மொழி பற்றிய பழைய சட்ட ஏற்பாடுகள் பயனற்றவையாகவும் காலத்துக்கொவ்வாததாகவும் உள்ளன. மற்றொரு உதாரணம் பாடசாலைக் கல்வியில் அரசாங்கத்துக்குள்ள ஏகபோக உரிமை, பழைய கல்வி ஏற்பாடுகளின்படி, 13 ஆண்டுக் கல்வியை அரசாங்கம் மட்டுமே வழங்க முடியும். ஆனால், இன்று அரசாங்கமும் தனியார் துறையும் கல்வித்துறையில் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேசப் பாடசாலைகள் இயங்குவதற்கான எது விதக் கல்விச் சட்ட ஏற்பாடுகள் இல்லாத நிலையில், அவை வியாபார நிறுவனங்களாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இலங்கையின் கல்விச் சட்ட ஏற்பாடுகளின்படி (1961) ஆம் ஆண்டின் 8 ஆம் இயக்கத் திருத்தச் சட்டம்) கல்விப் பணிப்பாளர் தவிர்ந்த வேறு எவரும் 514 வயதுப் பிள்ளைகளுக்கான பாடசாலைகளை ஏற்படுத்த முடியாது. இவ்வகையில் இப்பாடசாலைகளுக்குக் கல்விச் சட்ட அடிப்படை எதுவுமில்லை. மேலும், 1945 இன் கல்வித் திருத்தச் சட்டப்படி, பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி நிலையில் தாய் மொழியே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும்.

அத்துடன், வெளிநாட்டுப் பரீட்சைகளுக்குப் பிள்ளைகளை ஆயத்தம் செய்யும் சர்வதேசப் பாடசாலைகள், இலங்கைக் கொள்கை வகுப்பாளர் எடுத்துக் கூறியுள்ள தேசிய இலக்குகளை வலியுறுத்திக் கற்பிப்பதில்லை. தற்போது இயங்கி வரும் ஏறக்குறைய 300 சர்வதேசப் பாடசாலைகள் பலவற்றில் அடிப்படை வசதிகள் குறைவு என்ற முறைப்பாடுண்டு. இந்நிலையில், இத்தகைய தனியார் கல்வியைச் சட்டரீதியாக ஒழுங்குபடுத்தப் புதிய கல்விச் சட்ட ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

இவையாவும் விரிவான, தெளிவான புதிய கல்விச் சட்டமொன்றின் தேவையை நன்கு உணர்த்துவதால், சென்ற ஆண்டு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இலங்கையின் பொதுக் கல்விக்கான புதிய சட்டமொன்றுக்கான அடிப்படைத் தத்துவங்களை உருவாக்கும் நோக்குடன் ஒரு தேசியக் குழுவை நியமித்தார். பல கல்விமான்களைக் கொண்ட இக் குழுவில் பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர், ஜிப்ரி, கலாநிதி ஜெசிமா இஸ்மாயில் மற்றும் இக் கட்டுரையாளர் ஆகியோர் பணியாற்றினர். இக் குழுவானது, கல்வித் துறை நிபுணர்களைக் கொண்ட ஆறு துணைக் குழுக்களை அமைத்தது.



இத் தேசிய குழுவின் பத்திரிகை அறிவித்தலுக்கமைய, 246 எழுத்துருவ அறிக்கைகள் பலராலும் சமர்ப்பிக்கப்பட்டன. பல நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் 36 இடங்களில் கலந்தாய்வுகள் நடாத்தப்பட்டன. சகல மாகாணங்களிலும் மக்கள் கருத்து கேட்டறியப்பட்டது. கல்வி அமைச்சின் திணைக்களங்கள், பல்கலைக்கழகங்களின் கல்வியியல் துறைகள், தேசிய கல்வி நிறுவகம், கல்வியியல் கல்லூரிகள், வர்த்தகர் கழகம், சர்வதேசப் பாடசாலை அதிபர்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

இவ்வாறு பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் கலாநிதி குணவர்தன தலைமையிலான தேசிய குழு, "இலங்கையின் பொதுக் கல்விக்கான புதிய கல்விச் சட்டம் 27 ஒன்றைத் தயாரித்தது. 224 பக்கங்களைக் கொண்ட இவ்வறிக்கையானது, ஏழு பிரதான தலைப்புகளின் கீழ், பல்வேறு விடயங்களில் புதிய கல்விச் சட்டமொன்றுக்கான அடிப்படைத் தத்துவங்களையும் முன்மொழிவுகளையும் வழங்கியுள்ளது.

2003 ஆம் ஆண்டின் தேசிய ஆணைக்குழுவின் கல்வி அறிக்கை, 2008 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கலாநிதி குணவர்தன குழுவின் அறிக்கை என்பன, எதிர்காலத்தில் இலங்கையின் பொதுக் கல்விக்கான திட்டவட்டமான வழிகாட்டல் தத்துவங்களைக் கொண்டுள்ளன. புதிய கல்வி அமைச்சரின் கல்விச் சீர்திருத்தப் பணியை இவ்வறிக்கைகள் இலகுபடுத்தும் என்பது எமது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியரும் மாணவனும்

மா.செல்வராஜா

## அரிஸ்ரோட்டில் எனும் ஆசிரியரும் அலெக்ஸ்சாண்டர் எனும் மாணவனும்

மஸிடோனியா அரசின் தலைநகரான பெல்ல (Pella) என்னும் இடத்தில் பின்னிரவு நேரத்தில் யூலை 26ம் திகதி கி.மு 356ம் ஆண்டில் இளவரசி ஒலிம்பியா ஓர் ஆண் மகனைப் பெற்றாள். அப்பிள்ளைக்கு 3ம் அலெக்ஸ்சாண்டர் என்ற பெயரிடப்பட்டது. பின்னாளில்அவன் மகா அலெக்சாண்டர் என்னும் பெயரினால் அழைக்கப்பட்டான். இவன் பிறக்கும் போது கடும்புயற்காற்று மின்னலுடன் தோன்றி மாளிகையின் சுவரை உடைத்ததாகக் கூறப்படுகின்றது.

அதிகாலையில் புயல் அடங்கியதும் இளவரசி ஒலிம்பியாவின் கணவன் 2ம் பிலிப் மன்னன் கிரேக்கக் கரையோரப்பட்டினம் மீது படையெடுக்க ஆயத்தமானான். கடல் ஓரமாகப் புயல் மரங்களை வீழ்த்தியது. கப்பல்கள், ஓடங்களை உடைத்தது. நூற்றுக்கணக்கான வீடுகள் புதையுண்டன. ஆனால் மஸிடோனிய மக்களது உறுதியை அது அசைக்கவில்லை. பிலிப்-படையெடுத்து வெற்றியுடன் மீண்டும் தலைநகரை அடைந்தான்.

அலெக்ஸ்சாண்டருக்கு 13 வயதான போது அதுவரை அலக்ஸ்சாண்டருக்குக் கற்பித்த மொழியியலாளர்கள், இலக்கண ஆசிரியர்கள், புலவர்கள், உடற்பயிற்சியாளர்கள் அனைவரது போதனைகளையும் விடச் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு மிகச் சிறந்த தரமான கல்வியை அலக்ஸ்சாண்டருக்கு அளிக்க வேண்டுமென அவனது தந்தை பிலிப் மன்னன் தீர்மானித்தான். சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்றிருக்க பிலிப் மன்னன் நல்ல கல்வியை அலெக்ஸ் சாண்டருக்கு கொடுப்பது மட்டும் போதாது எனவும், அரசனான போது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கல்வியையும் வழங்க வேண்டும் எனவும் விரும்பினான். பொதுப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கொடுக்கும் கல்வியை அலெக்ஸ்சாண்டருக்குக் கொடுப்பதை விரும்பாது பிரச்சினைகள் எழும் போது அதனை எதிர்கொள்ளும் உள அமைப்பை ஏற்படுத்தவும், அணுகுமுறைகளைக் கற்பிக்கவும் பிலிப் விரும்பினான். அலெக்ஸ்சாண்டர் தனது உடல் சார் யதார்த்தத்தின் மட்டுப்பாடுகளை அறிதலும் மனத்தின் ஆற்றல்களை விளங்குதலும் அவசியம் என பிலிப் உணர்ந்தான்.

இறுதியாகப் பிலிப் மன்னன் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவுக்குத் தகுதியான ஓர் ஆசிரியரைத் தேர்ந்தெடுத்தான். அவரே அரிஸ்ரோட்டில் ஆவார். அரிஸ்ரோட்டில் மஸிடோனிய நாட்டவர். ஸ்ரகிரா (Stagira) தீவில் பிறந்தவர். மஸிடோனியாவின் அரச குடும்பத்திற்கு அரிஸ்ரோட்டிலின் குடும்பம் நன்கு அறிமுகமானதாகும். அரிஸ்ரோட்டிலின் தந்தை பிலிப்பின் தந்தை அமின்ராசின் வைத்தியராவார். அரிஸ்ரோட்டில் பிளேட்டோவின் அக்கடமியில் உயர் பதவியில் 20 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றியிருந்தார். அறிவாற்றலில் மலட்டுத்தன்மையான லெஸ்பொஸ் தீவில் நல்ல வாழ்க்கையை நடாத்தி வந்தார். அரிஸ்ரோட்டில் பிலிப் மன்னனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். பெல்ல என்னும் மஸிடோனியாவின் தலைநகருக்கு வெளியே பல வசதிகளுடன் கூடிய கல்லூரி ஒன்று அரிஸ்ரோட்டிலுக்காகக் கட்டப்பட்டது. இக் கல்லூரி மலைப்பாங்கானதும் இயற்கை அழகு வாய்ந்ததுமான மியெசா (Mieza) என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது. இங்கே மாணவர்கள் அமர்ந்து உரையாடுவதற்கு ஏற்ற வகையில் நிழல் மரங்களும், மாணவர்களுக்கான நடைபாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

தாவரவியல், விலங்கியல் தோட்டங்களும் அரிஸ்ரோடிலின் தாவரவியல் நாட்டத்திற்கு தக்கபடி கல்லூரியைச் சூழ அமைக்கப்பட்டன. பிலிப் மன்னன் தளபதிகள், படைவீரர்கள், தொடர்பான கல்வியில் நிபுணத்துவம் பெற்றிருந்தார். மியெசாவின் மாணவர்கள் எதிர்காலத் தலைமுறை ஆட்சியாளர்களாக வர வேண்டும் என மன்னன் விரும்பினான். எனவே மஸிடோனியப் பிரபுக்களை அலக்ஸ்சாண்டனின் வயதை ஒத்த மாணவர்கள் அனைவரையும் கல்லூரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டான். கல்லூரி இராணுவ, கலாசார, மற்றும் தத்துவக் கற்கைகள் இடம் பெறும் இடமாக வடிவமைக்கப்பட்டது. அதன் தொழிற்பாடானது அதிகளவு இராணுவ நிபுணத்துவத்தை விருத்தி செய்யும் இடமாகவும் ஆளும் வர்க்கத்தைப் பயற்றுவிக்கும் இடமாகவும் விளங்கியது. அது மஸிடோனியாவையும் அதன் எல்லைப் புறங்களையும் எதிர் காலத்தில் ஆட்சி செய்யும் வர்க்கமாக விளங்குமென எதிர்பார்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மஸிடோனியாவின் எதிர்காலத் தலைவர்கள் என்ற வகையில் சிக்கலானதும், கடினமானதும், வெளியே தோற்றுமான பிரச்சினைகளைத் (Unforseen) தீர்க்கக் கூடிய திறன்களைக் கொண்டவர்களாக இவர்களைத் தயார்ப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அப்படிப்பட்ட பிரச்சினைகள் நன்கு வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பாட விடயங்கள் அல்லது விசேட பரப்புக்களில் இல்லாதவையாக இருக்கும்.

மாணவர்கள் தமது சொந்தக்காலில் நின்று சிந்திப்பவர்களாகவும், கடினமாக தெரிவுகளைச் செய்யக்கூடியவர்களாகவும், வித்தியாசமான பிரச்சினைகளின மாதிரிகளை (Patterns) இனங்காணக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். எடுகோள்களை நிராகரிக்க அல்லது ஏற்றுக்கொள்வதற்கான தகவல்களைத் தேடக்கூடியவர்களாகவும் அவர்களது அறிவையும் பிறரது அறிவையும் பெறக்கூடியவர்களாகவும் கற்பனை செய்வதில் சேர்ந்து கருமமாற்றுபவர்களாகவும் பின்னர் தமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டியது அன்றைய தேவையாக இருந்தது.

உலகின் குறுகிய நோக்கில் அவர்கள் வளர்ந்து விடக்கூடாது என்பதை உறுதிப்படுத்த எகிப்திலிருந்து ஆசிரியர்களையும், கவிஞர்களையும், விஞ்ஞானிகளையும் பிலிப் வரவழைத்தான். பேர்சியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் மியெசாவின் வருகை தருவிரிவுரையாளர்களாக வரவழைக்கப்பட்டனர்.

அரிஸ்ரோட்டில் தனது மாணவர்களது தெரிவு செய்யப்பட்ட துறைகளின் விசேட நிபுணத்துவத்திற்கான கலைத்திட்டத்தைச் சிறப்பாக வடிவமைத்தார். அதேநேரம் அலெக்ஸ்சாண்டரும், பிற மாணவர்களும் பொதுவான விடயங்களை அறியவும் அனுபவம் பெறவும் ஒழுங்குகளை மேற்கொண்டார். இதனால் படித்த முறைகளில் பிரச்சினைகளின் ஒருங்கிணைந்த வழிவகைகளை அவர்கள் மேற்கொள்ளக் கூடிய தகைமைகளைப் பெற்றனர். அரசியும் நிர்வாகம், பொது நிர்வாகக் கொள்கைகள் (Public Policy) என்பவற்றிலும் ஓர் ஒருங்கிணைந்த அணுகு முறைகளைப் பிரயோகிக்கக் கூடிய ஆற்றலைப் பெறுவதற்குத் தயார்ப்படுத்தப்பட்டனர். மஸிடோனியாவின் எதிர்காலத் தலைவர்கள் என்ற வகையில் அவர்கள் இத்தகைய திறன்களைப் பெறக் கூடியவைப்பட்டவர்களாக விளங்கினர்.

அரிஸ்ரோட்டில் பல்வகைப் பாடநெறிகளில் அலக்ஸ்சாண்டருக்குப் பெரிய ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகையில் பாட போதனைகளை மேற்கொண்டார். ஏதேனியக் கல்லூரி ஆசிரியர்களில் அரிஸ்ரோட்டில் தான் பல்வகை பாடநெறிகளில் அதிக ஆர்வம் கொண்டு விளங்கினார். உண்மையில் அவருக்கு வெறுமையான நாட்டமல்ல, ஆழமான விளக்கம்



இருந்தது. அவர் காலநிலையியல், அதிக பௌதிகம், பௌதிகம் எனப் பல்வேறு வேறுபட்ட துறைகள் தொடர்பாக 160 நூல்கள் அளவில் வெளியிட்டிருந்தார். அரிஸ்ரோட்டில் ஒரு நரி எனக் கருதப்பட்டார்.

## 01. மனதைச் சிந்திக்கப்பயிற்றுதல்.

மியெசாவில் அலெக்ஸ்சாண்டரின் மனம் தகவல்களையும் மாதிரிகளையும் (Patten) பல்வேறு மூலகங்களிலிருந்தும், இடங்களிலிருந்தும் பெற்றுக் கொள்வதற்குப் பயிற்றப்பட்டது. யுத்த முனையில் ஒரு தளபதி என்ற வகையில் அலெக்ஸ்சாண்டரின் ஒரு திறன் என்னவெனில் ஒரு பிராந்தியத்தில் இருந்து தகவல்களைப் பெறுவது. பல்வேறு மூலகங்களில் இருந்து அதாவது காலநிலையியல் நிபுணர், விவசாய நிபுணர், தாவரவியல் நிபுணர், விலங்கியல் நிபுணர், சிவில் என்ஜினியர், நீரியல் நிபுணர், வரலாற்றாசிரியர், மேலும் வேறுபாடான ஆபாசவாதிகளிடமிருந்தும் (Sophist) தகவல்களைப் பெற்றுத் தொகுத்து ஒரு நோக்கிற்கு வருதல் இத்தகைய தகவல்களை நிபுணர்களிடம் இருந்து மட்டுமல்ல உள்ளூரில் தகவல்களை தரக்கூடியவர்களிடம் இருந்து பெற்று அவற்றை ஏற்கனவே உள்ள அறிவுடன் அலக்ஸ்சாண்டர் இணைத்தான். தான் படையெடுக்கும் நாடு பற்றிய தகவல்களை நிபுணர்களிடம் இருந்து பெற்ற அறிவைக் கொண்டு மட்டும் அவன் பகுத்தாராயவில்லை. அந்த நாட்டில் தகவல் தரக்கூடியவர்களிடமிருந்தும் பெற்றான்.

உதாரணமாகப் படையெடுக்கும் போது மந்தை மேய்க்கும் சிறுவனின் கருத்தையும் அவன் பெற்றான். ஏனெனில் அவன் மந்தைகளை மேய்க்கும் போது மலைப்பாங்கான இடங்களுக்கும், பல்வேறு மூலை முடுக்குகளுக்கும் கூட்டம்கூட்டமாக அவற்றை நடத்திச் சென்றிருப்பான். இதனால் அப்பிரதேசத்தின் தன்மை எல்லாவற்றையும் அவன் அறிந்திருப்பான். மியெசாவின் ஒரு பணி சிறுவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றப் பயிற்றுவதாகும். 42 வயதுள்ள அரிஸ்ரோட்டில் இச்சிறுவர்கள் இணைந்து செயற்பட வழிகாட்டினார், பயிற்றுவித்தார். இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றும் போது ஒருவரில் ஒருவர் நம்பிக்கை கொள்ளும் நிலை தோன்றும்.

சோக்கிரட்டீஸ் தன் மாணவர்களை உரையாடலில் முதலில் சம்பந்தப்படுத்திக் கற்பித்த ஏதேனியக் கல்லூரி ஆசிரியராவார். அவ்வுரையாடல் கடுமையானதாகவோ, கட்டுப்பாடானதாகவோ அது அமைந்திருக்கவில்லை. அவர் உரையாடலை எவருடனும் எந்த இடத்திலும் ஆரம்பிப்பார். முக்கியமாக உடற்பயிற்சிக் கூடத்தில் இடம்பெறும். சோக்கிரட்டீசின் உரையாடல் முறையைக் கட்டுப்பாட்டுக்குள்ளாகியும், கடினமான முறையிலும் முறைசார் கற்பித்தல் சூழலில் அரிஸ்ரோட்டில் பிரயோகித்தார். மாணவர்கள் ஆழமான அறிவுசார் உரையாடலில் ஆழ்ந்திருக்கும் போது மாணவர் குழுக்களைச் சுற்றி வருவது அரிஸ்ரோட்டிலின் பொதுவான செயற்பாடாகும். இதனை அரிஸ்ரோட்டிலை பின்பற்றியோரும் பின்பற்றினர். (Peripatetic Style of Teaching)

அரிஸ்ரோட்டிலின் இக்கற்பித்தல் முறை கவார்ட் பல்கலைக்கழகத்தின் சட்டபீடக் (School of Law) கற்பித்தலில் 1870ல் பின்பற்றப்பட்டது. கோட்பாட்டு, மற்றும் செயற்பாங்கான விடய ஆய்வுகளில் சட்ட பீடத்தில் சட்டம் போதிப்பதில் கவார்ட் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இம்முறையைப் பின்பற்றுவது இம்முறையின் செல்வாக்கிற்கு ஒரு தக்க எடுத்துக்காட்டாகும். 1924ல் கவார்ட் வர்த்தகபீடம் சட்ட பீட அணுகுமுறையைப் பின்பற்றியது. விடய ஆய்வு அணுகுமுறை இங்கும் கற்பித்தலில் பின்பற்றப்பட்டது.

### 02. ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புதல் (Building Character)

அரிஸ்ரோட்டில் உண்மையில் நடப்பனவெல்லாம் நமது நன்மைக்கே என்ற நம்பிக்கை உடையவர். (Optimist) ஒருவர் நேர்மையாகச் செயற்படும் போது வாழ்க்கையில் வெகுமதிகளையும் நம்மைகளையும் பெறுவார், என்ற வாக்கியத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். ஒழுக்கவியலில் கூறப்படுவது போன்று (As in the works on ethics) அரிஸ்ரோட்டில் ஒவ்வொரு பிரச்சினையையும் ஒழுக்க அம்சங்களுடன் இணைக்கும் போது அலக்ஸ்சாண்டரின் நண்பர்களுக்கும் மிகத் தெளிவாக விளங்கும் வகையில் ஒழுங்கு அமைத்தார். (Framed) உண்மையில் ஒழுக்க விடயங்களை அவர் திணிக்கவில்லை.

அரிஸ்ரோட்டிலின் நம்பிக்கைப் படி பூரணமான ஒழுக்கம் என்பது இல்லை. (Aristotle Believed there were no Moral Absolutes) கணிதம் போன்று இதைக் கருத முடியாது. ஒழுக்க விடயங்கள் எந்தச் சூழ்நிலையில் பிரயோகிக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்து அமையும். எனவே அரிஸ்ரோட்டில் இரண்டு உச்சமான அந்தங்களுக்கிடையில் (Extreme) உள்ள ஒரு மத்திய நிலையைத் தேடுமாறு மாணவர்களை ஊக்குவித்தார்.



(In matters of bravery, according to Aristotle, the mean lies somewhere in between the extreme of fear or cowardice and reckless confidence)

ஒரு மத்தியான அல்லது நடுவான நிலையைக் கண்டறிவற்கு (mean) அரிஸ்ரோட்டில் மீண்டும் மீண்டும் சுய விசாரணை செய்யுமாறு (Self Inquiry) தனது மாணவர்களைக் கட்டாயப்படுத்தினார். பிளேட்டோவின் அக்கடமியில் கற்பித்துக் கொண்டிருக்கும் போது பின்பற்றிய முறையை இங்கும் மாணவர்களுக்குப் போதிப்பதில் பின்பற்றினார். ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகளில் எதனை மாணவர்கள் அறிய வேண்டும் என்பதனை உளங்கொண்டு ஒழுக்கப் போதனைகளில் அரிஸ்ரோட்டில் ஈடுபட்டார்.

அறக்கருத்துக்களைப் பியோகித்தல், பயிற்சியளித்தல், என்பனவற்றில் அரிஸ்ரோட்டில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். ஒழுக்கப் பண்புகள் பயிற்சியின் மூலமே உருவாகின்றன. ஒரு விளையாட்டு வீரன் பயிற்சியின் மூலமே மேம்பாடு அடைகின்றான். வீரச் செயல்களைச் செய்வதன் மூலமே வீரனாக முடியும். இதில் திரும்பத் திரும்பச் செய்தல் முக்கியம். அலெக்ஸ்சாண்டனின் தீர்மானம் செய்யும் திறன் காலத்தினூடே மேம்பாடடைந்திருப்பதைக் காணலாம். அதாவது திரும்பத்திரும்ப இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதால் அச் செயலில் ஆற்றல் வளர்கின்றது. செயற்பாடு மேம்படுகின்றது. அலெக்ஸ்சாண்டர் சிறந்த தீர்மானங்களையே செய்தான்.

எந்தளவுக்குச் சிறந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் அனுபவங்களை அரிஸ்ரோட்டில் வடிவமைத்தாரோ அந்தளவுக்கு மாணவர்கள் சிறப்பாகக் கற்கிறார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். கி.மு 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த தத்துவஞானி லோகு பின்வருமாறு குறிப்பிட்டார்.

'நீ கூறினால் நான் கேட்பேன். நீ காட்டினால் நான் பார்ப்பேன். ஆனால் நீ எனக்கு அனுபவப்படும்படி செய்தால் நான் கற்பேன்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'If you tell me I will listen if you show me I will see. But if you let me experience I will learn.'

மீஸெசாவின் மாணவர்கள் கோட்பாட்டுடன் மட்டும் வளரக்கூடாது என்பதை உறுதிப்படுத்த அவர்களில் ஒரு பிரிவினரை பிலிப் மன்னன் யுத்தகளத்திற்கு இட்டுச் சென்று அங்கு நடப்பனவற்றுக்கும் வகுப்பறையில் கற்றவற்றுக்கும் இடையில் உள்ள தொடர்பை அறிய ஒழுங்கு செய்தான். சமாதான காலத்தில் மாணவர்கள் அரசு தொடர்பான தீர்மானங்கள் எடுத்தலை அவதானிக்கவும் அவற்றில் பங்குபற்றவும் அவர்கள் அழைக்கப்பட்டார்கள். தளபதிகள் போர் முனையில் செயற்பட்டது தொடர்பான மறைவான விடயங்கள் இருக்கும். எனவே மாணவர்கள் தளபதிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுதல், அவர்கள் பணியில் ஈடுபடுதலை அவதானித்தல் என்பனவற்றால மறைவான விடயங்களை அறியக் கூடியதாக இருக்கும்.

அரிஸ்ரோட்டில் தகைசால் மாணவர், அலக்சாண்டர் தனது காலில் நின்று சிந்திப்பது அவசியம் என்றும் மேலும் வெற்றி தோல்வி, மரண வாழ்வு தொடர்பாக அவன் சிந்திக்க வேண்டும் என்றும் சிந்தித்தார். இவ்வாறான சிந்தனை தனது மாணவனில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அவர் அறிந்திருந்தார். விரைவாகவும் தெளிவாகவும் சிந்திப்பது ஒருவரது சூழல் தொடர்பாக அவசியமானது. சூழ்நிலைக்குத் தக்க வகையில் இசைவு பெறுவது இலக்கை அடைய உதவும்.

## 03. நல்ல வினாக்களை வினாவுதல் (Asking Good Question)

அரிஸ்ரோட்டில் அடிக்கடி ஏதென்சின் மரங்களின் கீழ் அமர்ந்திருப்பதையும் மாணவரிடம் குறிப்பான வினாக்களை வினாவுதலையும் காண முடியும். சில வேளை விருப்பமின்மை போலவும் மறப்பது போலவும் அவரது குரலில் இருந்து அறிய முடியும். வேறு சில நேரங்களில் சில சொற்களை மட்டும் பிரயோகிப்பார் அது நட்பு அல்லாத பாங்கில் இருக்கும். கட்டளையுமிடுவார். பொதுவாக அவர் ஆழமான சிந்தனையில் காணப்படுவார். (His Voice had a kind. Mellifluous Timbre) அவரது குரல் அன்பானதும், இனிமையானதுமாகும்.

மக்களுக்காக தலைமை தாங்கும் போதும், படையெழுப்புக்களின் போதும் பொருத்தமான வினாக்களை வடிவமைப்பதற்கு அலக்சாந்தருக்குப் பெருமதி வாய்ந்த திறனாக விளங்கி அவரது தகவல்கள் உள்நோக்கு தீர்ப்புக் கூறும் திறன் என்பனவற்றுக்குப் பேருதவியாக விளங்கியது. அலக்சாண்டர் சில குறிப்பிட்ட வழியில் வினாக்களை வடிவமைப்பார். அவருக்கு கிடைக்கும் நூலங்கல்களைப் பொறுத்துக் குறிப்பிட்ட நபரை நம்புவதா எனத் தீர்மானிப்பார்.

தகவல் வினாக்கள் (Question of Information)



விளக்க வினாக்கள் (Question of Interpretation)

விரிக்கும் வினாக்கள் (Question of Extension)

எடுகோள் வினாக்கள் (Question of Hypothetical)

என்றவாறு வினாக்களை அவன் வகைப்படுத்தினான்.


## 04. ஆபத்தை எதிர் கொள்ளல் (Atmosphere of Irony)

ஆபத்தை எதிர்கொள்ளுதல் மீஸெசா எடுத்துக் கொண்ட பண்பாகும். மாணவர்கள் (The Companions were risk takers) ஆபத்தை எதிர்கொள்பவர்களாக காணப்பட்டார்கள். மீஸெசா மஸிடோனியாவின் அடுத்த தலைமுறைத் தலைவர்களுக்கு இப் பண்பை ஊக்குவித்தது. ஆபத்தை எதிர்கொள்ளுதலின் திறவுகோலானது ஒரு திறந்த சூழலாகும். அரிஸ்ரோட்டிலுக்கும் இது பொருந்தும். ஒரு வெளிநாட்டவர் என்ற வகையில் ஏதென்சின் பிளேட்டோவின் அக்கடமியில் எப்பொழுதும் தனது மனதைத் திறந்து சுதந்திரமாகப் பேச முடியாமல் அமுக்கப்படுவதாக உணர்ந்தார். சோக்கிரதீஸ் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதால் தத்துவ ஞானிகள் தமது உணர்வை வெளிப்படுத்துவது கடினமானதாக இருந்தது. அரிஸ்ரோட்டில் ஒரு பயன்பாட்டுவாதியாகத் திகழ்ந்தார். தனது உணர்வுகளைத் தன்னுடனேயே வைத்திருந்தார். ஒவ்வொருவரும், ஒவ்வொரு விடயமும் விமர்சனத்துக்குள்ளாகக் கூடியவை என்பதை அலெக்ஸாண்டரும் அவரது சக மாணவர்களும் விளங்கிக் கொள்வதை உறுதி செய்யும் வகையில் எல்லாவற்றையும் அரிஸ்ரோட்டில் ஒழுங்கமைத்தார். அரசன் கூறும் விடயம் கூட விமர்சனத்துக்குள்ளாக்கப்படும் என்பதை அரிஸ்ரோட்டில் தனது மாணவர்கள் மூலம் விளக்குமாறு செய்தார். அலெக்ஸாண்டருக்கும் அரிஸ்ரோட்டிலுக்கும் இடையிலுள்ள உறவு அலெக்ஸாண்டரில் படையெடுப்புக்கள் முடிவடையும் கட்டத்தில் சரியத் தொடங்கியது.

அரிஸ்ரோட்டிலின் கீழ் இருந்து பயிற்சி பெற்ற மூன்று ஆண்டுகளும் மீஸெசா மிகவும் திறமையாகச் செயற்பட்டது. அறிவு, உடல் என்பவை ரீதியாக ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்ந்த ஆட்சிக்கான ஊக்கத்தை அது உருவாக்கியது. மியெசா உலகு பற்றிய ஓர் விரிவானதும் ஒருங்கிணைந்ததுமான நோக்கை அலெக்ஸ்சாந்தருக்கும் அவரது சகாக்களுக்கும் வழங்கியது. இது எந்தக் கல்வி நிலையங்களாலும் கொடுத்திருக்க முடியாததாகும்.

1. சோக்கிரதீஸ்சின் கற்பித்தல் முறையைப் பிரயோகித்து அலெக்ஸ்சாந்தருக்கும் அவரது சகாக்களுக்கும் அரிஸ்ரோட்டில் கற்பித்தார்.

   கருத்துக்களை பல்வேறு மூலகங்களில் இருந்து ஆராயப் பயிற்றுவித்தார். அவற்றை ஒருங்கிணைக்கக் கற்பித்தார். உள்ளார்ந்த நோக்கை விருத்தியாக்கினார்.

2. ஒழுக்கத்தைக் கட்டியெலுப்புதலின் முக்கியத்துவம். (The Importance of Character Building) ஒழுக்கம் தொடர்பான அவர்களது தீர்மானங்கள் ஊடாகச் சிந்தனை செய்தவற்கு அலெக்ஸ்சாந்தரை வற்புறுத்தினார். அரிஸ்ரோட்டில் அலெக்ஸ் சாண்டரையும் சக மாணவர்களையும் பிறரை பன்முறை சுயவிசாரணை செய்யுமாறு (Self Inquirys) கூறினார். அரசியல் தலைவர்கள், தளபதிகள், சாம்ராச்சியத்தை உருவாக்குபவர்கள் என்ற வகையில் ஒரு நோக்கை வலியுறுத்தினார். இதனால் அவர்களது வகிபங்கை மேற்குறிப்பிட்ட பதவிகளில் வலியுறுத்தினார்.

3. சாம்ராச்சியத்தை கட்டியெழுப்புவதற்கான பாடங்கள்.

   மியெசாவில் சிறந்த மாணவர் குழுவொன்று அன்று அறியப்பட்ட உலகத்தை எவ்வாறு வெற்றி கொள்வது என்பது பற்றிய தீர்மானங்களை எடுத்ததுமட்டுமன்றி ஆசியா எகிப்து போன்றவற்றில் சாம்ராச்சியங்களை அமைப்பதற்கும் அவர்கள் கற்ற விடயங்களை பிரயோகித்தார்கள்.

4. ஆபத்தை எதிர் கொள்வதற்கான ஒரு கலாசாரம். (A Culture of Risk Taking)

   காரணப்பகுப்பாய்வு, சுய விமர்சனம், அறிவாற்றல் மேன்மை, விமர்சனச் சிந்தனை ஆபத்தை எதிர் கொள்ளல் என்பனவற்றை ஒவ்வொருவரிடமும் வளர்த்தல். இதனால் ஒருவர் சவால்களை எதிர் கொள்ளவும், வினாக்களுக்கு உள்வாங்கப்படவும் முடியும்.

5. நல்ல வினாக்களை வினாவும் கலை. (The art of asking good question)

   அரிஸ்ரோட்டில் இத்திறனை மாணவர்களிடம் (Taxonomy of Question) விருத்தியாக்கினார். இவ் வினாக்கள் மாணவர்களை தளபதிகளாக, தலைவர்களாக தகவல்களை முக்கோணப்படுத்தவும் புதிய தகவல்களைப் பெறவும் சரியான தகவல்களைத் தேடவும் அவர்களுக்கு உதவியது. கவாட் பல்கலைக்கழகத்தில் இவ்வினாக் கேட்கும் முறை ஆசிரியர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. இவ் வினாக் கேட்கும் முறை முகாமைத்துவப் பணிகளில் முக்கியமான மூலகங்களாக அமைந்தன.

இந்தச் சிந்தனைகள் நமது கல்வி மரபில் புத்தாக்கமாக உள்வாங்கப்பட வேண்டும். மாற்று ரீதியிலான சிந்தனைக்கான புள்ளிகள் அடையாளம் காணப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமைத்துவமும் விழிப்புணர்வும்

கி. புண்ணியமூர்த்தி

**கல்வி நிர்வாகத் தலைமைத்துவம் தொடர்பாகச் சமூக விழிப்புணர்வின் அவசியம்**

ஒரு நல்ல தலைவர் தேசத்தின் சொத்தாகும். ஒவ்வொரு மனிதனும் ஒரு மக்கள் கூட்டத்திற்குத் தலைமைத்துவம் வழங்குகின்றான். காலாகாலமாகத் தலைவர்கள் தோற்றம் பெற்றுள்ளார்கள். அவர்கள் முறைசார்ந்தோ, சாராமலோ தலைமைத்துவம் வகித்துள்ளனர். ஒரு தலைவன் ஏனையவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டியவனாவான்.

நாம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் தலைமைத்துவப் பொறுப்பிலிருக்கும் கல்வி நிர்வாகத் தலைவர்கள் பல்வேறு தகுதியினராக உள்ளனர். இவர்களில் பலர் பின்பற்றப்படக்கூடியவர்களாகவும் சிலர் ஒரு தலைவருக்குரிய அடிப்படைப் பண்புகள் அற்றவர்களாகவும் உள்ளனர். பல பாடசாலை அதிபர்கள் எழுத்துப் பரீட்சைகளிலும் நேர்முகப் பரீட்சைகளிலும் அதிக புள்ளிகளைப் பெற்று அதிபர்களாக நியமனம் பெறுகின்றனர். இன்னும் சிலர் எழுத்துப் பரீட்சைகளில் புள்ளிகளைப் பெறாததால் அதிபர் நியமனம் கிடைக்காதவர்களாக உள்ளனர். ஆனால் எழுத்துப் பரீட்சைகளிலோ அல்லது நேர்முகப் பரீட்சைகளிலோ அதிக புள்ளிகளைப் பெறுவதால் மாத்திரம் ஒரு அதிபர் நல்ல தலைமைத்துவப் பண்பினைக் கொண்டவராக மிளிர முடியாது. நல்ல தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட பல ஆசிரியர்கள் அதிபர் நியமனம் கிடைக்காமல் நம் மத்தியில் இருப்பதைக் காண முடிகிறது.

பல கல்வி நிறுவனங்களில் தலைமைப் பதவி வகிப்பவர்கள் பதில் தலைமைத்துவம் வகிப்பதைக் காண முடிகிறது. இவர்கள் சேவை மூப்பு அடிப்படையில் பதில் அதிபர்களாகக் கடமை வகிக்கிறார்கள். இச் சேவை மூப்பு சிலருக்கு அதிஷ்டமாகக் கொள்ளத் தக்கதாகவே உள்ளது. சேவை மூப்பைத் தவிர அவர்களிடம் வேறு சிறப்புத் தகைமைகள் கிடையாது. தேவையானளவு கல்வித் தகைமையோ, தொழில் தகைமையோ இன்றி இவர்கள் சேவை மூப்பை மாத்திரம் தகைமையாகக் கொண்டு தலைவர்களாகத் தொழிற்படும்போது அவர்களின் கீழ் பணியாற்றுபவர்கள் தலைவர்களைவிடக் கல்வித் தகைமையும் தொழில் தகைமையும் அதிகம் கொண்டவர்களாக விளங்குகிறார்கள்.

இச் சந்தர்ப்பங்களில் தன்னைவிடத் தகைமை படைத்தவர்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியாமல் தலைமைத்துவம் தடுமாறுவதைப் பல்வேறு இடங்களில் அவதானிக்க முடிகிறது.

பாடசாலைகளிலும் ஏனைய கல்விசார் நிறுவனங்களிலும் கல்வி நிர்வாகத் தலைமைத்துவப் (Leadership in Educational Administration) பதவிகளை வகிப்பவர்கள் போதுமானளவு தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிராதவர்களாக உள்ளனர். அதேவேளை அவர்கள் பல வருடங்கள் தொடர்ந்து குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைவர்களாகவும் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. பல பாடசாலைகளின் தரம் அடிமட்டத்துக்குச் சென்ற பின்பும் சில பாடசாலை அதிபர்கள் ஓய்வு பெறும் வரை அப் பாடசாலையை ஆட்சி செய்வதை அவதானிக்க முடிகிறது. இதற்குக் காரணம் என்ன என ஆராயும் வண்ணம் சிலரிடம் பின்வரும் வினா வினவப்பட்டது.

**வினா:-**

ஒரு செயல்திறனற்ற அதிபர் தொடர்ந்து ஒரு பாடசாலையில் கடமையாற்றுவதற்குக் காரணம் என்ன?

**பதில் -1**

நான் ஒரு பெற்றார். எனது பிள்ளை கற்கும் பாடசாலை அதிபர் ஒரு செயற்திறன் அற்றவர். அவர் தொடர்பாகப் பல தடவைகள் கல்வித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளோம். ஆனால் கல்வித் திணைக்களம் அது தொடர்பாக எந்தவித அக்கறையும் செலுத்தவில்லை. அவரை வெளியே எடுத்து எங்கே போடுவது? வேறொரு பாடசாலையைப் பாழாக்குவது பொருத்தமானதா? எனக் கேட்கிறார்கள்.

**பதில் -2**

குறிப்பிட்ட அதிபரால் சுகம் பெறும் சில ஆசிரியர்கள் சில பெற்றோரினதும், அரசியல்வாதிகளினதும் துணையுடன் தொடர்ந்து அவரையே வைத்திருக்கிறார்கள்.

**பதில் -3**

நான் ஒரு ஆசிரியர். எனது அதிபரின் தலைமைத்துவம் பொருத்தமானதல்ல. அவர் ஒரு பக்கச் சார்பாக நடந்து கொள்பவர். ஊழல் நிறைந்தவர். கல்வித் தகைமை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ, தொழில் தகைமையோ அற்றவர். நான் அவரது குறைபாடுகளை ஆசிரிய கூட்டங்களில் சுட்டிக் காட்டினால் உள்ளார்ந்த ரீதியாகவும், வெளிவாரியாகவும் பழிவாங்கப்படுகிறேன். அதனால் இப்போது நமக்கு ஏன் வம்பு? எனப் பேசாதிருக்கிறேன். ஏனைய ஆசிரியர்களும் இது தொடர்பாக அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

**பதில் -4**

நான் ஒரு பெற்றார். நான் எனது பிள்ளையைப் பாடசாலையை முழுவதுமாக நம்பிஇப்படைத்துள்ளேன். அதிபரைப் பற்றிப் பாடசாலை ஆசிரியர்களும் பாடசாலை அபிவிருத்திச் சபை ஆட்களும் பார்த்துக் கொள்வார்கள். நாம் தலையிட்டுக் காரியம் ஆகப் போகிறதா? ஏழை சொல் அம்பலம் ஏறுமா?

**பதில் -5**

நான் ஒரு பெற்றார். அதிபரைப் பற்றிப் பார்ப்பதற்குத் தானே கல்வித்திணைக்களம் இருக்கிறது. ஏராளமான பதவிநிலை அதிகாரிகள் உள்ளனர். அடிக்கடி பஸ்ஸில் ரிக்கெற் பரிசோதகர்கள் பாய்வது போல் தனியாகவும், குழுவாகவும் பாய்ந்து பரிசோதனை செய்கிறார்கள். பிழையிருந்தால் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் தானே?

**பதில் -6**

நான் ஒரு கல்வி அதிகாரி. எங்களால் ஒரு எல்லைக்கப்பால் எதுவுமே செய்ய முடியாது. அரசியல்வாதிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையில் நாங்கள் தான் அடிபடுகிறோம். ஏதோ ஒரு காரணத்தால் அல்லது அதிபரின் குறைந்த நிர்வாகத்திறன் காரணமாக ஒரு பாடசாலையின் பெயர் கெட்டு விட்டால் அப்பாடசாலையைப் பொறுப்பெடுக்க வேறொரு அதிபர் முன் வருகிறரார் இல்லை. இச் சந்தர்ப்பங்களில் எங்களால் என்ன செய்ய முடியும். அவ்வாறு கட்டாயப்படுத்திப் போட்டால் ஓய்வில் சென்றுவிடுவதாக மிரட்டுகின்றனர். அது தவிர நல்ல பாடசாலையிலிருந்து ஒரு அதிபரை மாற்றி பின்தங்கிய பாடசாலைக்குப் போட்டால் அப்பாடசாலையின் கல்வித்தரம் குறைவதற்கு இடமுள்ளது. அப்பாடசாலைப் பெற்றோர்கள் மனித உரிமை அமைப்புகளிடம் சென்றுவிடுகின்றனர்.

**தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்கள்**

- டியூபின் (Dubin) என்பவர் ஒருவருக்குத் தலைமைத்துவம், தீர்மானம் மேற்கொள்வதற்கான அதிகாரத்தை வழங்குகிறது என்கிறார்.
- பெக் (Beck) - அங்கத்தவர்களுக்கிடையிலான இடைத்தொடர்பை ஏற்படுத்துபவராகவும் அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பவராகவும் ஒரு தலைவர் தொழிற்படுதல் வேண்டும் என்கிறார்.



- ரீட் (tead) - ஓர் குறிக்கோளை அடைவதற்காக மக்களுடன் இணைந்து செயற்படுபவராகத் தலைவர் காணப்படுவார்.
- ஸ்புரொட் (Sprott) யாராவது ஒருவர் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாகத் தொழிற்பட்டால் அவர் தலைவர் என அழைக்கப்படுவார்.
- சன்போட் (Sanford) ஓர் தலைவர் அவரைப் பின் பற்றுபவர்களால் இனங்காணப்படவும் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும்.
- ஹெயித் டேவிஸ் (Keith Davis) குறிக்கோள்களை நோக்கி மற்றவர்கள் ஆர்வத்துடன் செயற்படுவதற்கு ஊக்கப்படுத்துகின்ற, உதவுகின்ற செயன் முறைதான் தலைமைத்துவமாகும். என்கிறார்.

**தலைமைத்துவப் பண்புகள்**

கிரேச் மற்றும் குறூச்பீல்ட் (Kretch and Crutchfield) ஆகியோர் தமது "சமூக உளவியல் கோட்பாடுகளும் பிரச்சினைகளும்" எனும் நூலில் ஒரு தலைவரது செயற்பாடுகளாகக் குறிப்பிட்டவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. தலைவர் ஒரு நிறைவேற்று அதிகாரியாவார் குழுவிலுள்ள பல்வேறு அங்கத்தவர்களுக்கும் வேலைகளைப் பகிர்ந்தளிப்பதுடன் அவ் வேலைகளை அவர்கள் சரியாக நிறைவேற்றுகிறார்களா? என்பதையும் கண்காணித்தல் வேண்டும்.
2. தலைவர் ஒரு திட்டமிடலாளராவார். திட்டங்களைத் தீர்மானிப்பதற்கும் அவற்றை நிறைவேற்றுவதற்குமுரிய வழிமுறைகளைத் திட்டமிடுபவராகவும் ஒரு தலைவர் தொழிற்படுதல் வேண்டும்
3. ஒரு தலைவர் குழுவின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும், சட்டதிட்டங்களையும் உருவாக்குபவராகத் தொழிற்படுவார்.
4. தலைவர் ஒரு நிபுணராகத் தொழிற்படுதல் வேண்டும். அதாவது குழு அங்கத்தவர்களுக்கு அறிவையும் திறன்களையும் வழங்குவதற்கேற்ற வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் எவ் வேளையிலும் தயார் நிலையிலுள்ள ஒருவனாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

5. குழுவிலுள்ள அங்கத்தவர்கள் இருவரிடையே அல்லது இரு குழுக்களிடையே ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும்போது தலைவர் பக்கச்சார்பற்ற வகையில் அவர்களிடையே தொழிற்படுவதுடன் நடுவராகத் தொழிற்பட்டு அவர்களது பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தல் வேண்டும்

6. தலைவர் தனது பேச்சாலும் செயற்பாடுகளாலும் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு உதாரண புருசனாகத் தொழிற்படுதல் வேண்டும்.

7. ஒரு தலைவர் வெளித் தொடர்பாடல்களை மேற்கொள்ளும்போது குழுவின் பிரதிநிதியாகத் தொழிற்படுதல் வேண்டும்.

8. ஒரு தலைவர் சில வேளைகளில் தமது குழுவுக்காகப் பலியாடாகத் தொழிற்பட வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அதாவது தனது வெற்றிகளுக்கான புகழைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை தனதும், தனது குழுவினதும் தோல்விகளுக்குரிய முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

9. ஒரு தலைவர் தான் தலைவராக இருந்தாலும் தனக்குக் கீழுள்ள குழுவைப் பொறுத்த வரையில் அவர் குழு அங்கத்தவராகத் தொழிற்படுதல் வேண்டும். குழுவின் விருப்புக்கள் நடத்தைகள், விழுமியங்கள், போன்றவற்றைப் பகிர்ந்து கொள்பவராக இருத்தல் வேண்டும். தலைவரைப் பின்பற்றுபவர்களுக்கு இது ஒரு உளவியல்சார் அடையாளத் தூண்டலாக அமையும். இல்லையேல் தலைவர் தனிமைப்படுத்தப்படுவார்.

10. ஒரு தலைவர் தனது பணியாளர்கள் மீது உண்மையான அன்பு கொண்டவராக இருத்தல் வேண்டும்.

11. ஒரு தலைவர் எப்போதும் ஒரு முன் மாதிரியானவராக இருத்தல் வேண்டும். அவர் தனது நடவடிக்கைகள் மூலம் ஏனையவர்களைத் தன்னை நோக்கித் திருப்புபவராகவும், தன்னைப் பற்றிச் சிந்திக்கச் செய்பவராகவும் தன்னைப் பாவனை செய்விக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தனது தனிப்பட்ட வாழ்விலும் அவர் ஒரு முன்மாதிரியானவராகத் திகழ்தல் வேண்டும்.

12. ஒரு தலைவர் குறைந்த சுயநலமுடையவராகவும், அதிகளவு மனத் தைரியமுடையவராகவும் மனவெழுச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியவராகவும் இருத்தல் வேண்டும்.

13. ஒரு தலைவர் சுய நம்பிக்கையுடையவராகவும், நுண்ணறிவுள்ளவராகவும், விரைவில் தீர்மானமெடுப்பவராகவும், ஏனையவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படக்கூடிய குழு மனப்பாங்குடையவராகவும் இருத்தல் வேண்டும்.

### கல்வி நிர்வாகத் தலைவரின் கடமைகள்

1. கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிடுதல்.
2. கல்வித் திட்ட வரைபுகளை உருவாக்குதல்
3. பக்கச் சார்பின்றியும் தயக்கமின்றியும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
4. ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல்.
5. பாடசாலைக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குதல்.
6. தனக்குக் கீழுள்ள ஆளணியினர்களின் அனைத்து வினாக்களுக்கும் பதிலளிப்பவராக இருத்தல் வேண்டும். அதனால் அவர் அனைத்துத் துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
7. ஆளணியினரிடையே எந்தவிதமான சச்சரவுகளும் ஏற்படாதவாறு நிர்வாகத் தலைவர் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அதனால் ஆளணியினர் (Staff) மத்தியில் ஒற்றுமையையும் அமைதியையும் பேணுதல் வேண்டும்.
8. கல்வி நிர்வாகத் தலைவர் தானாகவே தன்னைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.
9. கல்வி நிறுவனத்தின் பணிக்கூற்றுக்கு அமைய இலக்குகளையும் பணியாளர்களின் தேவைகளையும் நிறைவேற்றி அவர்கள் மனதில் திருப்தியை ஏற்படுத்துதல் வேண்டும்.
10. பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் இடையில் தோன்றும் பிணக்குகளைத் தீர்ப்பவராக இருத்தல் வேண்டும்.

பொதுவாக எமது பிரதேசங்களில் கல்வி நிர்வாகத் தலைமைத்துவம் பற்றிய சமூக விழிப்புணர்வு குறைவான நிலையிலேயே காணப்படுகிறது. ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களை ஏதேதோ காரணங்களைக் கூறித் தட்டிக் கழித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது. தமது வசதி வாய்ப்புக்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு அற்ப, சொற்ப சலுகைகளை அநுபவித்துக் கொண்டு எது நடந்தாலும் நமக்கென்ன? என்ற ரீதியில் ஆசிரியர்களும் கல்வி சார்ந்த சமூகமும் இயங்குவதை அவதானிக்க முடிகிறது.

பல ஆசிரியர்கள் முறையான வகைகூறலின்றி பாடசாலையில் பொழுதைக் கழித்துச் செல்கின்றனர். அதிகளவு நேரத்தை ஓய்வறைகளிலும், வாசிகசாலைகளிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் கழிப்பதை அவதானிக்க முடிகிறது. இன்னும் சிலர் ஒரு படி மேலே சென்று காலையில் எல்லோருக்கும் முன் பாடசாலைக்குச் சமுகமளித்து ஒப்பமிட்டுவிட்டு பாடசாலையை விட்டுத் தமது சொந்த வேலைகளுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையொப்பமிட்டுவிட்டு பாடசாலையை விட்டு வெளியேறுபவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் சிறந்த வருகைக்காக வலயக் கல்விப் பணிமனைகளால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர். இதனால் உண்மையான அர்ப்பண சிந்தனையுடன் கடமையாற்றும் ஆசிரியர்கள் மனவிரக்தியடைகின்றனர். தாமும் அவ் வழிகளைப் பின்பற்றத் துணிகின்றனர்.

திடீரென யாராவது கல்வி அதிகாரிகள் வந்து அதிபரிடம் இவர்களைப் பற்றிக் கேட்டால் அலுவலகக் கடமையாக வெளியில் அனுப்பியிருப்பதாகக் குறிப்பிடுவார். இவ்வாறானவர்கள் ஆவணங்களை முறையாகப் பேணுபவர்களாக இருப்பார்கள். ஒரே நாளில் அனைத்து நாட்களுக்குமுரிய பாடப் பதிவுகளைப் பதிவுக் கொப்பியில் (Record Book) எழுதி விடுவார்கள். பாடத்திட்டம், பாடக்குறிப்பு என்பவற்றை முறைப்படி எழுதி வைத்திருப்பார்கள். ஒரே நாளில் கணிப்பீட்டுப் படிவங்களைப் பூர்த்தி செய்து வைத்திருப்பார்கள். மேலதிகாரிகளும் ஆவணங்களைப் பரிசீலனை செய்து விட்டு அவர் ஒரு சிறந்த ஆசிரியர் என முடிவெடுக்கின்றனர். இப்படியானவர்களுக்கு அதிபரே உடந்தையாக உள்ளார்.

அதிபரது பலவீனங்களை, பிழைகளை அறிந்து வைத்துக் கொண்டுள்ள ஒரு சில ஆசிரியர்கள் அவரைத் தமது கைப்பொம்மையாக ஆட்டி வைப்பதையும் அவதானிக்க முடிகிறது. இதனைச் சமூக விழிப்புணர்வின் மூலமே தீர்த்து வைக்க முடியும். இதற்குச் சமூகம் என்ன செய்யலாம்?

### அ. பெற்றோர்

1. பெற்றோர்கள் தினமும் பாடசாலையுடன் தொடர்புகளை வைத்திருத்தல் வேண்டும்
2. பாடசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டத்துக்குத் தவறாது சமூகமளித்துப் பாடசாலை தொடர்பாகவும் அதிபர் தொடர்பாகவும் தமது சந்தேகககங்களை நிவர்த்தி செய்து கொள்ளுதல் வேண்டும்.
3. அதிபரின் குறைபாடுகள் பற்றிக் கல்வி அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.
4. தர உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதில் பல பாடசாலைகளில் முறைகேடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. ஒரு சிலரே தொடர்ச்சியாகப் பொருள் கொள்வனவிலும் கணக்குகளைப் பராமரிப்பதிலும் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது. அது தவிர மாணவர்களிடமும் பெருமளவு பணம் அறவிடப்படுகிறது. அவற்றுக்கான கணக்குகள் முறைப்படி பேணப்படுவதில்லை.

   பெற்றோர் தமது பிள்ளைகளுக்குப் பணம் வழங்கும் போது ஏன்? எதற்காக? எனக் கேள்வி கேட்க வேண்டும். அப்பணத்திற்குப் பாடசாலையில் என்ன நடந்துள்ளது என்பது பற்றிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் விசாரித்தறிதல் வேண்டும்.



5. முறைப்படி கணக்குகள் காட்சிப்படுத்தப்படுகின்றவா எனக் கண்காணித்தல் வேண்டும்.
6. முதலில் பெற்றோர் தமது பிள்ளை தொடர்பான சகல விபரங்களையும், பாடசாலை தொடர்பான சகல நடைமுறைகளையும் கேட்டறிவதற்குரிய பூரண உரிமை தனக்கு உண்டு என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

### ஆ. ஆசிரியர்கள்

1. ஆசிரியர்கள், அதிபரது தவறுகளை தயங்காது சுட்டிக்காட்டுதல் வேண்டும். பாடசாலையில் காணப்படும் குறைபாடுகளுக்கு அதிபர் மாத்திரம் அல்ல தானும் உடந்தையாக உள்ளோம் என்பதை உணர்ந்து பொறுப்புடன் செயற்படுதல் வேண்டும்.
2. பாடசாலையில் தவறிழைக்கும், சுகபோகங்களை அனுபவிக்கும் சக ஆசிரியர்களை சமூகத்தின் முன் கொண்டு வருதல் வேண்டும்.
3. பாடசாலை வளங்களைத் தமது சொந்த வளங்கள் போல் கண்ணும் கருத்துமாகக் கண்காணிப்பதுடன் அவற்றைப் பாதுகாப்பாகவும் பேணுதல் வேண்டும்.

### இ. கல்வித் திணைக்களங்கள்

1. பல பாடசாலைகளில் கணவன் அதிபராகவும் மனைவி உப அதிபராகவோ அல்லது ஆசிரியையாகவோ இருப்பதை அவதானிக்க முடிகிறது. இதுவும் நிர்வாகத்தில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துவிடும். பாடசாலை தொடர்பான முக்கிய தீர்மானங்களில் மனைவியின் செல்வாக்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமையலாம். அதனால் இவ்வாறான நியமனங்களைத் தவிர்த்தல் வேண்டும்.
2. சில பாடசாலைகள் உறவினர்களால் நிரம்பிய குடும்பப் பாடசாலைகளாக இருப்பதை அவ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானிக்க முடிகிறது. இரத்த உறவுகள் ஒரே பாடசாலையில் இருக்கும் போது பல்வேறு பாத்திரக் குழப்பங்கள் ஏற்பட இடமுண்டு. அவ்வாறான சூழ்நிலை உருவாகாமல் கல்வித்திணைக்களங்கள் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. அதிபர் சேவையைச் சேர்ந்த பலர் பாடசாலைகளில் ஆசிரியர்களாகவும் உதவி அதிபர்களாகவும் கடமையாற்ற, அதிபர் சேவையைச் சேராதவர்கள் அதிபர்களாகப் பல பாடசாலைகளில் கடமையாற்றுவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான இடங்களில் பொருத்தமான அதிபர்களை நியமிப்பது கல்வித் திணைக்களத்தின் கடமையாகும்.

4. ஒரு அதிபரை மாத்திரம் ஒரு பாடசாலையிலிருந்து வெளியேற்றினால் அப் பாடசாலை சீர்திருத்தம் பெற்றுவிடும் என்று கொள்ள முடியாது. அவ் அதிபரால் சுகபோகங்களை அனுபவித்த ஆசிரியர்கள் புதியவர் கடமையாற்றுவதற்குப் பல முட்டுக்கட்டைகளைப் போடுவார்கள். அதனால் அவர்களையும் இனங்கண்டு அப் பாடசாலையிலிருந்து வெளியேற்றிவிட்டு புதியவர்களை நியமித்தல் வேண்டும்.

எனவே சமூகம் விழிப்புணர்வு பெறாவிட்டால் கல்வித் திணைக்களமோ உயர் அதிகாரிகளோ இது தொடர்பாகப் பெரிதும் அக்கறை செலுத்தமுடியாத சூழ்நிலையே ஏற்படும். சமூகம் விழிப்புணர்வுடன் இருந்தால்தான் கல்வி நிர்வாகத் தலைமைத்துவங்கள் மிகுந்த அக்கறையுடன் தமது கடமைகளை ஆற்றுவார்கள். இல்லையேல் ஒரு சமூகம் அழிவதை எவராலும் தடுக்க முடியாது.

---

## வகுப்பறை நிலைமைகளை மாற்றியமைத்தல்

புதிதாக அமைக்கப்படும் வகுப்பறைகள் போதியளவு இடவசதி கொண்டவையாக இருத்தல் வேண்டும். தற்காலிகமாக அமைக்கப்படினும் கூட போதியளவு இடவசதி கொண்டவையாக இருப்பது மிகவும் அவசியமாகும்.

போதியளவு எண்ணிக்கையில் மாணவர்களுக்குரிய மேசைகளும், கதிரைகளும் வழங்கப்படல் வேண்டும். வசதியாக அமர்ந்து கொள்வதற்கு வேண்டியதாக இவற்றை வடிவமைப்பதால் பிள்ளைகளது உளரீதியான துன்பங்களைத் தணிக்க முடியும்.

வகுப்பறைகளில் ஆசிரியர் எல்லாப் பிள்ளைகளுடனும் தங்குதடையின்றி தொடர்பு கொள்வதற்கும், அசைந்து சென்று கற்பிப்பதற்கும் ஏற்ற இடவசதி இருத்தல் வேண்டும். ஆரம்ப வகுப்புக்களையின் இடவசதி மேலும் கூடுதலாகத் தேவைப்படும். விளையாட்டு, வகுப்பறைச் செயற்பாடுகள் என்பவற்றுக்கு இவை மிகவும் அவசியமானவை. தனித்தனியாக ஒவ்வொரு பிள்ளையினதும் தேவை மற்றும் பிரச்சினைகளை ஆசிரியர் அறிந்து பிள்ளைகளுடன் அளவளாவி இடைவினையுறவை மேம்படுத்திக் கொண்டு கற்பிப்பதற்கும் ஏற்றதாக வகுப்பறையில் போதிய இடவசதியை ஏற்படுத்துதல் அவசியமாகும்.

பொதுவான வகுப்பறை நிலைமைகளுக்கும் இத்தகைய இடவசதி இன்றியமையாததாகவேயுள்ளது. எனினும் அனர்த்தங்களினால் பாதிப்புக்குட்பட்ட பிள்ளைகளின் வகுப்பறையில் மேலதிக கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் இடவசதியை ஏற்படுத்துவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட பிள்ளைகள் ஆசிரியரின் அந்நியோன்யமான வழிகாட்டல்களையும் உதவிகளையும் வேண்டி நிற்கின்றனர். இதற்கேற்றதாக வகுப்பறை வசதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

நிரந்தரமான வகுப்பறைகள் அமைக்கப்படுமிடத்து வகுப்பறைச் சுவர்களுக்கு மென்மையான வர்ணங்களைப் பூசுதல் விரும்பத்தக்கது. இயன்றளவு அழகிய பூக்கள், பறவைகள் கொண்ட ஓவியங்களையும் பார்வைக்குரியதாக வைத்துக் கொள்ளலாம். பிள்ளைகளின் துயர உணர்வுகளைத் தூண்டச் செய்யாத வகையிலான அழகிய ஓவியங்களைத் தெரிவு செய்து வகுப்பறையை அழகுபடுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

வகுப்பறையில் பிள்ளைகளுக்கு மிருதுவான உணர்வுகளையும், மகிழ்ச்சிகரமான மனோபாவங்களையும் முன்னேற்றக்கூடிய அழகான வர்ணப்படங்களை கொண்ட வாசிப்புக்குரிய துணை நூல்கள் பலவற்றை வகுப்பறைகளில் வைப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

வகுப்பறைகளில் தேவையான அளவுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கச் செய்தல் வேண்டும். குடிநீருக்காக பரபரப்புடன் அலைவதைத் தவிர்ப்பதற்கு இத்தகைய ஏற்பாடு மிகவும் அவசியமானதாகும்.

(மா.சின்னத்தம்பி "பாடசாலைகளை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை" 115/116)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் தேர்ச்சி

கு.பிரதீபன்

## ஆசிரிய வாண்மையில் ஆசிரியர் தேர்ச்சியின் பங்களிப்பு

ஆரம்ப கால ஆசிரியத் தொழிலானது மாணவர்களிற்கு அறிவை வழங்குதலை மட்டும் நோக்காகக் கொண்ட ஆசிரியர் மையக் கற்பித்தல் முறையை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. எனினும காலஓட்டத்தில் நவீன உலக இயங்கியல் ஒழுங்கு முறைமைகளிற்கேற்பவும், உலக கல்வியியல் ஒழுங்கு முறைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் ஆசிரியர்களின் வகிபங்குகள் பெருமளவில் மாற்றத்திற்குள்ளாகின. இன்றும் மாற்றத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில்,

1. ஆசிரியர்மையக் கற்பித்தல் முறையானது குழந்தைமையக் கற்பித்தல் முறையாக மாற்றமடைந்தது.
2. குறிக்கோள் மையக் கல்விமுறைமை, தேர்ச்சி மையக் கல்வி முறைமையாக மாற்றமடைந்தது.
3. செயற்பாட்டு அடிப்படையிலான கற்றல் முறை வலியுறுத்தப்படுகிறது.
4. இவற்றின் காரணமாக ஆசிரியர் வகிபங்கு ஆரம்ப கால கடத்தல் வகிபங்கிலிருந்து கொடுக்கல் வாங்கல வகிபங்கினூடாக இன்று நிலைமாற்று வகிபங்கிற்கு மாற்றமடைந்துள்ளது.

எனவே இன்றைய கல்வி முறைமையில் ஆசிரியரானவர் மாணவர்களிற்கு அறிவை ஊட்டுதலுடன் மட்டும் நின்றுவிடாது, மாணவர்களிடம் தாமே சுயமாகக் கற்கும் திறன்கள், ஆக்கத்திறன்கள், புத்தாக்கச் சிந்தனைகள் என்பவற்றை விருத்தி செய்வதோடு வளவாளராக செயற்பட்டு பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகளைக் கருத்தில் எடுத்து ஒவ்வொரு பிள்ளையும் எதிர்பார்க்கப்படும் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைவதற்காக சரியான திசையில் வழிப்படுத்துபவராகவும், அனுசரணையாளராகவும் செயற்பட வேண்டியவராக உள்ளார்.

இதனை வினைத்திறனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்கள் உயர்ந்த விடய அறிவை மட்டுமன்றி கல்வி, கற்பித்தல் தொடர்பான பல்வேறு வகையான தேர்ச்சிகளையும் உடையவராய் இருத்தல் அவசியமாகிறது. இந்தியாவின் அண்மைய கல்வி ஆணைக்குழு அறிக்கை ஆசிரியர் தேர்ச்சியின் முக்கியத்துவம் குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"கல்வியின் தரத்திலும் அதன் தேசிய அபிவிருத்தியின் மீதான பங்களிப்பிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற அனைத்து விதமான காரணிகளிலும் ஆசிரியர்களின் தரம், தேர்ச்சி, பண்பு என்பன சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரணிகளாக விளங்குகின்றன"

அத்துடன் ஆசிரியத்துவமானது ஆசிரியத் தொழில் என்கின்ற தளத்தில் இருந்து, ஆசிரிய வாண்மை என்ற தளத்தினுள் பிரவேசிக்க முயற்சிக்கின்ற எமது நாட்டில் ஆசிரிய வாண்மையில் ஆசிரியர் தேர்ச்சியின் பங்களிப்பு தொடர்பான விழிப்புணர்வு அவசியமாகிறது. ஏனெனில் வாண்மைத் தொழிலொன்று

- தேர்ச்சிசார் சோதனைகள்
- அத்தொழில் சார் தேர்ச்சிகளைக் கொண்டிருக்காத உறுப்பினர்களை வெளியேற்றுவதற்கான பிரத்தியேக சட்ட உரிமை
- அனுமதி பெற்று தொழில் நடாத்துதல்
- கோட்பாட்டு அறிவு அடிப்படையிலான திறன்கள்
- அமைப்புசார் பயிற்சிகள் என்பவற்றை மையப் படுத்தியதாக அமைகிறது.

## தேர்ச்சி - ஆசிரியர் தேர்ச்சி

தேர்ச்சி என்றால் என்ன? இதற்குப் பலராலும் பல்வேறு கருத்துக்கள் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படுகின்றன. சர்வதேச கல்விக் கலைக்களஞ்சியமானது, தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்கு, ஆற்றுகைத்திறன்கள் என்கின்ற மூன்று தரத்திலான மனித செயற்பாடுகளை குறித்து நிற்பதாகக் கூறுகின்றது. பொதுவாக "தேர்ச்சி என்பது ஒரு குறித்த செயற்பாட்டை விளைதிறன் மிக்க வகையில் ஆற்றுவதற்கான அல்லது விசேட அறிவு மட்டத்தை வழிப்படுத்துவதற்கான ஆற்றல்" என வரையறுக்கப்படலாம்.

ஆசிரியர் தேர்ச்சிகளை வரையறுப்பது தொடர்பில் கல்வியியலாளர்களிடையே பொதுவான உடன்பாடு காணப்படவில்லை. ஏனெனில் ஆசிரிய வாண்மையின் சிக்கல் தன்மை காரணமாக "சிறந்த கற்பித்தல் எது?", "ஆசிரியர் விளைதிறனை கட்டமைப்பது எது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்பனவை வரைவிலக்கணப்படுத்துவதற்கு கடினமானவையாகும் என Brophy, Good, Lanior என்போர் கூறுகின்றனர்.

இக் குழப்பநிலையை தெளிவுபடுத்தும் வகையில் Edmond Short என்பவர் நான்கு எண்ணக்கருக்களை முன்வைத்தார்.

1. தேர்ச்சி என்பது குறித்த ஒரு செயற்பாட்டினை அச் செயற்பாட்டிற்கான காரணத்திலோ நோக்கத்திலோ தங்கியிராது செய்வதற்கான நடத்தை அல்லது ஆற்றுகை ஆகும்.
2. தேர்ச்சி என்பது ஒரு செயலைத் தெரிவு செய்யும் போது அத் தெரிவு ஏன் பொருத்தமானது என்பதை தெரிதல், அறிதல் என்பவற்றை உள்ளடக்கிய அறிவு, திறன் என்பவற்றை கையாளுதல் ஆகும்.
3. தேர்ச்சியை "ஏதோவொரு புத்திசாலித்தனமான, சாதுரியமான அதே சமயம் எல்லோருக்கும் தெரிந்த பொதுவான கருத்தின் படி (பொது நடைமுறைகளின்படி) தனது செயல்களின் ஆற்றல்மட்டம் போதாதா எனப் பார்க்கும் நிலையுள்ளதாயும், அதேசமயம் அச்செயலின் பெறுமதி பற்றிய கருத்து மாறுபாடுடையதாகவும் இருத்தலால் அதனையே போதிய குறிகாட்டியாகக் காணலாம்" எனக் கூறினார்.
4. தேர்ச்சி என்பது ஒருவருடைய பண்பு, தன்மை, சுபாவம் போன்றவற்றுடன் தொடர்புடையது என்பதுடன் ஒருவரின் செயற்திறன், திறன்கள், செயற்பாடுகளின் நிறைவுமட்டம், நோக்கம், மனப்பாங்கு, குறித்த பண்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதான ஒருவரின் பொருத்தமான செயற்பாடுகள் என வரையறுக்கப்படலாம்.

Short இன் நான்காவது வரைவிலக்கணமானது ஆசிரிய தேர்ச்சி என்பது பலவகையில் பொருந்தி வரும் என்பதனையும் அவை அந்தனையும் நியாயப்படுத்தக் கூடியவை என்பதனையும் கூறுவதாக அமைகின்றது. இவற்றிற்கு மேலதிகமாக கற்பித்தல் தொடர்பான பல்வேறு எண்ணக்கருக்கள், விருத்திசார், சூழமைவுசார் வேறுபாடுகள் ஆகியனவும் ஆசிரியர் தேர்ச்சியை வரையறுப்பதில் பங்கு வகிக்கின்றன. ஆசிரியர் தேர்ச்சியை வரையறுத்தல் என்பது பலகாரணிகளில் தங்கியுள்ளதென Ashburn என்பவர் கூறுகின்றார். அவரின் கூற்றுப்படி "தேர்ச்சியானது நியம சோதனைகளில் பெறப்பட்ட அதிகரித்த சராசரிப்புள்ளிகளில் இருந்து மாணவனின் சமூகத்திறன் விருத்தி வரையிலான கற்பித்தல் விளைவுகளில் தங்கியிருக்கும்."

இவற்றிற்கு மேலதிகமாக ஆசிரியர் தேர்ச்சியினை வரைவிலக்கணப்படுத்தல் என்பது ஆசிரியர் வகிபங்கு பற்றிய எண்ணக்கருக்களை ஆசிரியருக்கு கற்பித்த கால அளவு, பாடசாலையின் இயல்புகள், பாடசாலையின் புவி இட அமைவு போன்ற கற்பித்தலுக்கான



சூழமைவு என்பவற்றில் தங்கியுள்ளது. எனவே Short இன் கூற்றுக்கிணங்க தேர்ச்சி என்பது தனியாள் நடத்தையில் இருந்து ஒரு மனிதவளின் நாம் என்பது வரையிலான தேர்ச்சி மட்டங்களில் தங்கியிருக்கும். எனினும் பொதுவாக ஆசிரியர் தேர்ச்சி என்பது "விளைதிறன் மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை விளைத்திறனுள்ள வகையில் நிகழ்த்துவதற்காக ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய அறிவு, திறன், மனப்பாங்கு, பண்பு" என வரையறுக்கப்படலாம்.

## தரமான ஆசிரியர் -ஆசிரியர் தேர்ச்சி

ஒரு தொழிலிற்குத் தேவையான தேர்ச்சிகளை விளங்கிக் கொள்ளுதலின் முக்கியத்துவமானது தொழில் தெரிவிற்கான பண்புக்காரணிக் கொள்கையினால் நிரூபிக்கப்படுகின்றது. இக் கொள்கையின் அடிப்படையில் ஒரு தொழிற்துறையில் ஒரு மனிதனுடைய வெற்றியில் மூன்று காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன.

1. அவனுடைய பண்புகள் : இது உளச்சார்பு, திறன்கள், ஆர்வங்கள், இலட்சியங்கள், வளங்கள், வரையறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அமைகிறது.
2. அத் தொழிலிற்குத் தேவையான தேர்ச்சிகள் அல்லது காரணிகள் பற்றிய அறிவு
3. இவை இரண்டிற்குமிடையிலான நெருக்கமான இணைப்பு

அமெரிக்காவில் 2002 இல் முன்வைக்கப்பட்ட No child left behind act ஆனது தரமான ஆசிரியர்களிற்கான மூன்று நியதிகளை முன்வைத்திருக்கிறது.

1. முழுமையான தராதரப் பெறுதல்
2. இளமாணிப் பட்டப்படிப்பு
3. விடய அறிவு, கற்பித்தல் தொடர்பான தேர்ச்சி,

மேற்கூறிய கருத்துக்களிலிருந்து ஆசிரியத் தொழிலில் ஒருவர் வெற்றி பெறுவதற்கும், தரமான ஆசிரியராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை நிலைநிறுத்துவதற்கும் அவர் பல்வேறு வகையான தேர்ச்சிகளை உடையவராக இருக்க வேண்டும் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகிறது.


### ஆசிரியர் தேர்ச்சியை நிர்ணயித்தலும் மதிப்பிடலும்

பல்வேறு நாடுகளிலும் குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் அந்த நாடுகளின் தேசிய அரசுகளாலும் மாநில அரசுகளாலும் பிரிவுகள் சார்பாகவும் பாடங்கள் சார்பாகவும் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய தேர்ச்சிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஆசிரியர் தேர்ச்சிகளை ஆசிரியர் கொண்டிருக்கிறர்களா என்பதை மதிப்பிடும் பொருட்டு அந்நாடுகளில் ஆசிரியர்களிற்கான நியம தேர்ச்சிசார் சோதனைகள் பாவனையில் உள்ளன.

### ஆசிரியர் தேர்ச்சியை விருத்தி செய்தல்

Susana de souza, Marcos F.Elia ஆகியோர் ஆசிரியர் மனப்பாங்கு, ஆசிரியர் தேர்ச்சிகள், பாடசாலை, சமூகம், சேவை முன்பயிற்சித்திட்டங்கள், சேவைக்காலப் பயிற்சித்திட்டங்கள் என்பவற்றிற்கிடையிலான வலிமையான இடைத்தொடர்புகளை காட்டும் மாதிரியொன்றை முன்வைத்துள்ளார்.




இதிலிருந்து ஆசிரியர் தேர்ச்சியிலும் ஆசிரியர் தேர்ச்சியின் விருத்தியிலும் நேரடியாக முக்கிய செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக சேவை முன்பயிற்சித்திட்டங்கள், சேவைக்காலப் பயிற்சித்திட்டங்கள், பாடசாலைகள் என்பவை இனங்காணப்படுகின்றன.

பெரும்பாலான நாடுகளில் இத்தகைய ஆசிரியர் கல்விப் பயிற்சித் திட்டங்களை அந்நாடுகளின் பல்கலைக்கழகங்களும், ஆசிரியர் கல்விசார் அமைப்புக்களும் நடாத்துகின்றன. இப்பயிற்சி நெறிகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆசிரியர்கள் தமது தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளமுடியும். அத்துடன் ஆசிரியர் தேர்ச்சியை விருத்தி செய்வதில் பாடசாலையின் வளங்கள், அமைவிடம், பாடசாலை அமைந்துள்ள சமூகச் சூழல் என்பனவும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

Reynolds என்பவர் "தேர்ச்சிமிக்க போதனையை அனுபவத்தினூடாக நிகழ்த்த முடியும்" என்கின்றார். எனவே ஆசிரியர்கள் தமது சுய அனுபவப் பகுப்பாய்வின் மூலமும் தமது தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ள முடியும்.

### ஆசிரியர் தேர்ச்சியும் இலங்கையும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஆசிரியர் தேர்ச்சி தொடர்பாக எமது நாட்டின் பொறுப்பு வாய்ந்தவர்களாலும் காலத்திற்கு காலம் பல்வேறுகருத்துக்கள் கொள்கையளவில் முன்வைக்கப்படுகின்ற போதிலும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பது பெரும் குறைபாடாக உள்ளது.

இதற்கு மிக முக்கிய காரணமாக அமைவது, இலங்கையைப் பொறுத்தவரையில் ஆசிரியர் தொழிற்றுறையானது ஒரு தொழில் வழங்கும் துறையாக கருதப்படுவதுதான். அரசியல் காரணங்களிற்காகவும், அப்போதைய சந்தர்ப்ப சூழ்நிலைகளிற்கேற்பவும் காலத்திற்கு காலம் ஆசிரியர் தேர்ச்சி தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தாது பெரும் எண்ணிக்கையானோர் ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்படுகின்றனர். இதற்கு உதாரணமாக 1990 களின் முற்பகுதியிலும் 2005 களின் பிற்பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையானோர் தொழிலின்மைப் பிரச்சினையை தீர்க்கு முகமாக ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சவால்களை வெற்றி கொள்ளல்

ஆசிரியர் ஆட்சேர்ப்பு நியமனங்களின்போதும், குறித்த கால இடைவெளிகளிலும் ஆசிரியர்களுக்கான நியம தேர்ச்சிப் பரீட்சைகளை உருவாக்கி நடாத்துவதன் மூலமும், ஆசிரிய சேவை தொடர்பான நிரந்தரமானதும் தேர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றதுமான தாபனக் கோவை ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதன் மூலமும் ஆசிரியர் தேர்ச்சி தொடர்பான சவால்களை வெற்றிகொண்டு அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்று இலங்கையிலும் ஆசிரிய சேவையை தொழில் என்னும் தளத்தில் இருந்து வாண்மை என்னும் தளத்திற்கு இட்டுச் செல்ல முடியும்.

### முடிவுரை

ஆசிரியர் தேர்ச்சி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு, அது தொடர்பான விழிப்புணர்வை ஆசிரியர்களிடம் ஏற்படுத்துவதனூடாக அவர்களை விளைதிறன் மிக்க ஆசிரியர்களாகவும், ஆசிரிய வாண்மையாளர்களாகவும் திகழச் செய்வதனூடாக கல்வியின் தரம், அதன் தேசிய அபிவிருத்தியின் மீதான பங்களிப்பு என்பவற்றின் மீதான சவால்களை வெற்றிகொள்ள முடியும்.

### உசாத்துணைகள் :


1. Myra Pollack sadkar and David miller sadker.(2000). Teachers schools and society. New Delhi: Mc Graw Hill companies.
2. Radha Mohan. (2002), Inovative physical Science Teaching.
3. Grady Roberts, T, kim E, Dooly, Tulie E Harlin, Theresa and murphery, p. (2006). Competencies and traits of successful Agricultural Science Teachers, Journal of career and Technical Education 22 (2), 1-11
4. CHENG May Hung, So wing – mui, TSANG Chalao - liang. (1996). An impact of teaching practice: perceptions of teacher competence among student teachers. Journal of primary Education, 6 (182) . 45-56
5. சந்திரசேகரன், அ. (2007). ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் அவர்களுக்கான தேர்ச்சித் தேவைகளும். அகவிழி. 30 (3), 10-13
6. சந்திரசேகரம், சோ. (2004). நவீன கல்வி முறையியலில் ஆசிரியரின் மாறிவரும் வகிபாகம் அகவிழி, 1(1), 2-6
7. ஞானரத்தினம், கே. (2006). ஆசிரியம் : ஒரு பன்முகப் பார்வை. அகவிழி, 20(2), 11-15


---

### ஆசிரிய தொழில் வாண்மை விருத்தி

ஆசிரியர்கள் தமது சுயமுன்னேற்றத்தைப் பெறுவதற்கு தொழில்சார் தகுதிவிதிகள், தேவைப்பாடுகள் பற்றி நிறையவே வாசிக்க வேண்டும். குறிப்பாக பின்வருவன பற்றி விரிவாக வாசிக்க வேண்டும்.

- ஆசிரிய தொழில்வாண்மை பற்றிய புதிய வளர்ச்சிப் போக்குகள்.
- உலகமயமாதலின் உருவாக்கம் பெற்றுள்ள ஆசிரிய தொழிலை வல்லாண்மைப்படுத்தும் அம்சங்கள்
- ஆசிரிய தொழில் பற்றிய தாபனக் கோவை, சட்டங்கள், சுற்றறிக்கைகள்
- ஆசிரிய சம்பள மாற்றம் தொடர்பான பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள்.
- தொழில்சங்கம் தொடர்பான பல்வேறு நடைமுறைகள் தொடர்பான நூல்கள், சட்டவிதிகள், அறிக்கைகள்.

இத்தகைய பல்வேறு வகையான நூல்கள் சஞ்சிகைகள், சட்டங்கள், சுற்றறிக்கைகள், தொழில்தாபனக் கோவை, தொழிற்சங்க அறிக்கைகள் போன்ற பலவற்றையும் தேடி, ஊக்குடன் வாசித்து தனது வாழ்வுத் தொழில் பற்றி பூரண அறிவு நிரம்பியவராக எல்லா ஆசிரியரும் விளங்க வேண்டும்.

இத்தகைய கற்கும் பழக்கம் இல்லாமையினால் தொழில் தொடர்பான ஏராளமான உரிமைகள், இலாபங்கள், முன்னேற்றங்கள் என்பவற்றை இழந்து விரக்தியுடன் வாழும் வேதனம் பெறும் ஊழியர்களாக பெரும்பாலான ஆசிரியர்கள் விளங்குவது வருந்தத்தக்க உண்மையாகும்.

(மா.சின்னத்தம்பி, 'ஆசிரியரை விளைதிறன் மிக்கவராக்கல்' பக்:46-47)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய சூழலில் ஆசிரியர்களும் அர்ப்பணிப்பும்

அனுஷ்சியா சத்தியசீலன்

## முன்னுரை

எந்தவொரு தொழிலின் சிறப்புக்கும் வெற்றிக்கும் "அர்ப்பணிப்பு" என்பது முக்கியமானது. அர்ப்பணிப்புடன் செயற்படும்போதுதான் எடுத்த கருமம் வெற்றியடையும், மனத்திருப்தியைத்தரும், முழுமைபெறும். அர்ப்பணிப்பு என்பது ஒருவகை மனப்பாங்கு (Attitude). எந்த ஒரு தொழில் வெற்றிக்கும் அர்ப்பணிப்பு அவசியமாயினும் ஆசிரியத் தொழிலிலேயே இதன் முக்கியத்துவம் மேலும் முனைப்புப் பெறுகின்றது.

## அர்ப்பணிப்பு - அதற்கான விளக்கம்

முதலில் அர்ப்பணிப்பு என்பதற்கான விளக்கத்தைச் சிறிது நோக்குவோம். "முழுமையான ஈடுபாடு" எனவும் "ஆர்வத்துடன் கூடிய செயலாற்றல்" எனவும் "மனநிறைவுடன் கூடிய செயலாற்றல்" எனவும் "வினைத்திறன், ஆர்வம், ஈடுபாட்டுடன் கூடிச் செயற்படல்" எனவுமான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

## ஆசிரியர் - காலமும் கருத்தும்

ஓர் ஆசிரியர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதில் காலத்திற்கூடாக மாறுபட்ட சமூகங்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் இருந்துவந்துள்ளன. கிரேக்க மரபில் ஆசிரியர் கற்பனை நிறைந்த கவிஞன் போலவும், சிந்தனை நிறைந்த ஞானி போலவும் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டார். சிந்தனை சுதந்திரமுள்ளவராகவும், எதனையும் ஆழமாகச் சிந்திக்கும் போக்குடையவராகவும் விளங்கும் ஆசிரியர் தன்னிடம் பயிலும் மாணவர்களை அத்தகைய வளர்ச்சிக்கும் பக்குவத்திற்கும் கொண்டு வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. உரோம மரபில் ஆசிரியர் கட்டுப்பாட்டிற்கும், ஒழுக்கத்திற்கும் உரியவராகக் கருதப்பட்டார். ஐக்கிய அமெரிக்க நாட்டினர் நல்லவராக, அறிவு ஆற்றலுடையவராக ஆசிரியரை நோக்கினர். ஆங்கிலேயர் அறிவு ஆற்றலுடன் பரந்த ஈடுபாடுகள் கொண்டவராக ஆசிரியரைக் கண்டனர்.

தத்துவஞானி ரூசோ "ஆசிரியன் போதனையிலும் சாதனையிலும் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த அறிஞனாக விளங்க வேண்டும், அவன் மற்றவர் துன்பத்தைத் துடைத்தெறியும் தூய உள்ளத்தை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்" என்றார். குழந்தை கல்விச் சிந்தனையாளர் மொன்டசூரி அம்மையாரோ "ஆசிரியர் பிள்ளைகளிடம் அன்னையைப் போல் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

ஒரு பிள்ளையை உருவாக்குவது ஆசிரியரே. ஆசிரியரின் பணி கற்பித்தல் அல்ல. இயக்குபவராக இருந்து பிள்ளைகளுக்கு வழிகாட்டுவதும் ஊக்குவிப்பதும் அவர் கடமை" என்றார். அதிகாரியாகத் தன்னைக் கருதிக் கொள்ளாமல் வழிகாட்டியாக, ஆலோசகராகத் தன்னைக் கருதிக் கொண்டு மாணவர்களை நெறிப்படுத்துவதே ஆசிரியத்துவத்திற்குச் சிறப்பானது என்றார் சிந்தனையாளர் டுயி. "மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் நல்ல உணர்வுகளை வெளிக்கொணர்வது ஆசிரியம்" என்றார் சுவாமி விபுலானந்தர். மேற்கூறப்பட்டவாறு காலத்திற்கூடாகப் பல்வேறு சமூகங்களிடையே கல்விச் சிந்தனையாளரிடையே ஆசிரியர் எப்படிப்பட்டவர், ஆசிரியத்துவம் எப்படிப்பட்டது என்பது பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஆயினும் அவை யாவும் அடிப்படையில் ஆசிரியரைக் கற்பித்தலுக்கு மட்டும் உரியவராகக் கருதிக் கொள்ளாமல் நல்லவராக, வல்லவராக, இதர பல ஈடுபாடுகள் கொண்டவராக, மாணவ சமூக வழிகாட்டியாக, சமூகசிற்பியாகக் காணவிழைந்தமை கண்கூடு. தமிழர் மரபும் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றும் "மாதா, பிதா, குரு தெய்வம்" எனவும் ஆசிரியரை உயர் நிலையில் வைத்துச் சிறப்பித்தது. இவ்வாறு ஆசிரியர் உயர்நிலையில் வைத்துச் சிறப்பிக்கப்பட்டமைக்குக் காரணம் அன்றைய ஆசிரியரிடம் காணப்பட்ட தொழில் இலட்சியமும் அர்ப்பணிப்புத் தன்மையுமேயாகும்.

## ஆசிரியத் தொழில் - சில விளக்கங்கள்

ஆசிரியத் தொழிலில் அர்ப்பணிப்பு என்பதனை நோக்குவதற்கு முன்னர் ஆசிரியத் தொழில் என்றால் என்ன என்பது பற்றி நோக்குவோம். ஆசிரியத் தொழில் என்றால் "கற்பித்தலைச் செய்வது" என்று இலகுவாகக் குறிப்பிட்டு விடுவோம். ஆகவே கற்பித்தல் என்றால் என்ன என்பதனைப் பற்றியும் சிறிது விரிவாக நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் என்றால் "தேவைப்படும் அறிவு, திறன், மனப்பாங்கினை மாணவன் பெறச் செய்தல்" என்ற விளக்கம் அளிக்கப்பட்டது. கற்பித்தல் என்றால் "தேவைப்படுகின்ற போதியளவு தேர்ச்சியினை பல்வேறு நுட்பங்களினூடாக மாணவர்களது ஆற்றலுக்கு ஏற்ப பொருத்தமாக வழங்குதல்" என்றும், இன்னோர் வகையில் கூறுவதாயின் கற்பித்தல் என்பது "எதிர்பார்க்கப்பட்ட விரும்பத்தக்க நடத்தை மாற்றங்களை கற்போரிடம் உள்வாங்குவதற்காக ஆசிரியரினால் முயற்சிக்கப்படுகின்ற தொடர் செயற்பாடுகள்" (Series of events) என்றும் கூறப்பட்டன.

Duncan (1970) கற்பித்தல் என்பது "ஒரு தனித்துவமான வாண்மைமிக்க மனித செயற்பாடாகும். இது கற்போனுடைய அறிவையும், திறன்களையும், நல்ல மனப்பாங்குகளையும் ஆக்கபூர்வமாக்க உதவுவது" என்றார். Dictionary of Psychology (உளவியல் அகராதி 1976) "பொருத்தமான தரவுகளையும், சந்தர்ப்பங்களையும், செயற்பாடுகளையும் உருவாக்கிக் கொடுப்பதினூடாக மாணவர்களை கற்பதற்குத் தூண்டும் ஒரு கலையாகும்" என கற்பித்தலுக்கான வரைவிலக்கணத்தை முன்வைத்தது. Gage (1978) கற்பித்தல் என்பது "கற்போன் திறம்பட ஒழுக்கமாக சமூகத்தில்தான் பங்குகொள்ளும் எல்லாவிடயங்களிலும் செயற்படுவதற்கு உதவும் செயற்பாடாகும்" எனக் குறிப்பிட்டார் David Minton (1997).

கற்பித்தல் என்பது "சவால்களை எதிர்கொள்ளல், தீர்மானம் எடுத்தல், ஆக்கத்திறன் வளர்ச்சி எல்லாவற்றையும் மாணவர்களிடம் உருவாக்க உதவும் செயற்பாடாகும்" என வரையறுத்தார். பெஸ்டலோசியினது சிந்தனையானது "குழந்தையினது சிந்தனையாற்றல்கள், தனித்துவங்கள், ஆக்கத்திறன் வளர உதவுவதே கற்பித்தல்" என்பதாக அமைந்தது. இந்திய கல்விச் சிந்தனையாளர் கிருஷ்ணமூர்த்தியோ "மாணவர்கள் உளத்திறன் பற்றி எடுத்துக்கூறி அவர்களின் தனித்தன்மை தெளிவுபட உதவுவதே கற்பித்தல்" என்றார். கற்பித்தல் என்பதற்கு "அறிவையும், நம்பிக்கையையும் இளம் தலைமுறையினருக்கு கையளிப்பதாகும்" என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்களை நோக்கிய அளவில் கற்பித்தல் என்பது ஒரு பரந்து பட்ட விடயமாக உள்ளது என்பதும் அதன் கனதி என்னவென்பதும் எமக்குப் புலப்படுகின்றது. இது அறிவு, திறன், மனப்பாங்குசார் அம்சங்களை உள்ளடக்கியதான ஒரு உன்னதமான தொழிலாகக் கருதப்படுகின்றது. எனவே மாணவனுடைய முழுமையான வளர்ச்சிக்கு வழிகாட்டுகின்ற இத்தொழிலை மேற்கொள்ளும் போது முழுமையான அறிவு என்பது மிக அவசியமானதாகின்றது.

## இன்றைய சூழலும் ஆசிரியர் பற்றிய எதிர்பார்ப்பும்

இன்றைய சூழலில் உலகளாவியரீதியில் ஆசிரியரிடமான எதிர்பார்ப்புகள் எவையென்பது பற்றி இங்கு



சிறிது நோக்குதல் பொருத்தமுடையதாகும். டேவிட் ஹைன்ஸின் கருத்தானது "ஒரு ஆசிரியர் தனது பகுத்தறிவு, அனுபவம், இவற்றினடிப்படையில் தனது மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டியவராகவும், பயன்படும் அறிவு திறன், தான் வாழும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் மனப்பாங்கு, விழுமியங்களை மாணவர் பெற்றுக்கொள்ள உதவுபவராகவும் இருத்தல் வேண்டும்" என்பதாக அமைந்தது. வான் ஷகாக் (Van sahack) 1. கற்பித்தலில் ஆர்வம், 2. திறமையான தொடர்பாடல், 3. சுய கட்டுப்பாடு, 4. மாணவர்பால் கரிசனையும் ஆர்வமும் கொண்டிருத்தல், 5.தொழில் இலட்சியம் கொண்டிருத்தல் போன்ற பண்புகளைக் கொண்டிருப்பவரே ஆசிரியர் என அடையாளப்படுத்தினார். மில்டான் (1987) "ஓர் ஆசிரியர் மாணவர் மீதான உண்மையான ஆர்வம், புத்தாக்கம் என்பனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்" எனக் குறிப்பிட்டார். இன்றைய ஆசிரியர் பற்றிக் கூறவந்த இந்திய கல்வியியலாளர் ஒருவர் ஒரு ஆசிரியனுக்கு மாணவர் சார்ந்ததாக, பெற்றோர் சார்ந்ததாக, தொழில் சார்ந்ததாக கடப்பாடுகள் பல இருக்கின்றன என்று குறிப்பிட்டவர் அவற்றைப் பின்வருமாறு பட்டியலிட்டார்.

### மாணவர் சார்ந்ததான கடப்பாடுகள்

1. கற்பித்தலின் உண்மைத்தன்மை
2. மாணவர் வகைக்குறிப்பு
3. உளவியல் ரீதியான பக்குவம்
4. பிள்ளைசார் உளவியல் அறிவு
5. உணர்வுபூர்வமான தொழில் ஆற்றுகை
6. தீர்மானம் எடுத்தலில் உதவுதல்
7. தலைமைத்துவத்தை விருத்தி செய்தல்

### பெற்றோர் சார்பான கடப்பாடுகள்

1. மாணவன் அடைவு சார்பான தரவுகளை பெற்றோருக்கு அளித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிள்ளை சார்பான மனப்பாங்கு ஊக்கல்களை பெற்றோருக்கு அளித்தல்

3. வீட்டுச் சூழலைத் திருப்திகரமாக்க பெற்றோருக்கு உதவுதல்

4. பெற்றோர் பாடசாலைத் தொடர்பினைப் பலப்படுத்த உதவுதல்

**சமூகம்சார் கடப்பாடுகள்**

1. சமூக பெறுமானங்களுக்கு (Norms) மதிப்பளித்து நடத்தல்
2. மத சகிப்புத்தன்மை
3. சமூக தொடர்பாடலை சமநிலையாக்கல்
4. இயற்கையுடன் உறவு பூண்டு வாழ்தல்
5. தேசிய உணர்வுகளுடன் ஒருமைப்படல்

**தொழில்சார் கடப்பாடுகள்**

1. தொழில்சார் நடத்தைகளுக்கு ஆதரவளித்தலும், வளர்த்தலும்
2. தொழிலை மதித்தல்
3. பாடசாலை முகாமைத்துவ சூழலைப் பாதுகாத்தல்

மேற்கூறப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆசிரியருக்கு உதவும் ஒரே கருவி அவரிடமுள்ள "அர்ப்பணிப்புத் தன்மையே" என்றும் அக்கல்வியியலாளர் அழுத்தினார். யுனெஸ்கோ அறிக்கையில் 21 ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. உயர் தொழில் தகைமை
2. அடிப்படை பாடநெறிகளில் வல்லமை
3. பல்வகை கற்பித்தல் தத்துவங்களை உள்வாங்கி கற்பித்தல்
4. மாணவர்களுடன் உரையாடும் திறன், அவர்களின் தரவல்லமையைத் தெரிவு செய்து பயன்படுத்த உதவுதல்
5. படைப்பாற்றல், மாற்றங்களையும், புத்தாக்கங்களையும் வரவேற்கும் மனப்பாங்கு போன்ற தகைமைகளையும், மாறும் சூழலுக்கேற்ப இசைவாக்கம் பெறுதல், திறனாய்வு மனப்பாங்கு, பிரச்சினைகளை இனங்காணல், அவற்றிற்குத் தீர்வுகாணும் திறன்களையும் பெற்றிருத்தல்.
6. சகிப்புத்தன்மை, சமூகநீதி, சமாதானம், இவற்றிற்கிடையிலான புரிந்துணர்வு என்பனவற்றை மேம்படுத்தும் மாற்றங்களுக்கான முகவராகச் செயற்படல்.

டாக்டர் அப்துல்கலாம் ஆசிரியர் பற்றிக் குறிப்பிடும் வார்த்தைகளையும் இங்கு கோடிட்டுக் காட்டுதல் பொருத்தமானதாக இருக்கும் "நீங்கள் எத்தகைய ஆற்றலுள்ள ஆசிரியர்களாகவும் இருக்கலாம் ஆனால் உங்களுக்கான சிறப்பான பெரும் பொறுப்பும் பங்கும் மாணவர் சமூகம் பொறுத்து, எதிர்கால நாட்டின் வளர்ச்சி பொறுத்து உள்ளது. ஏனெனில் வேறு எவரையும் விட நீங்கள்தான் எதிர்கால மாணவர் சமூகத்தை, நாட்டின் தலைவிதியை வடிவமைக்கப்போகின்றவர்கள். அதற்கு உள்ளிருக்கும் உங்களை நீங்கள் உணர வேண்டும். அது நீங்கள் காட்டும் ஈடுபாட்டிலும் அர்ப்பணிப்புத் தன்மையிலுமே தங்கியுள்ளது"

**எம்நாட்டுச் சூழலும் ஆசிரியர் அர்ப்பணிப்பும்**

மேற்கூறப்பட்ட எதிர்பார்ப்புகள், கருத்துக்கள் எம்நாட்டு ஆசிரியர் பொறுத்துப் பொருத்தமுடையனவாகவே இருக்கின்றன. ஆயினும் இன்றைய எமது சூழலில் இவற்றுக்கும் அப்பால் மனிதநேயம் மிக்க வளம் பொருந்திய எதிர்கால சமுதாயமொன்றை உருவாக்குவதற்கு உழைக்க வேண்டிய தேவை ஆசிரியர்கள் ஒவ்வொருவர் பொறுத்தும் மேலும் முனைப்புப் பெற்றுக்காணப்படுகிறது.

ஆனால் இன்றைய சூழலில் ஆசிரியர் "அர்ப்பணிப்புடன்" செயலாற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டு மேலோங்கிக் காணப்படுகிறது. அதில் உண்மையும் இல்லாமலில்லை வகுப்பறையின் உள்ளும் புறமுமான நடைமுறைச் செயற்பாடுகள் பல ஆசிரியரின் அக்கறையற்ற தன்மையை, அலட்சியப்போக்கினை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியரொருவர் பின்வரும் பண்புகளை உடையவராகக் காணப்படுவார்.

1. பாடப்புலத்தில் போதியளவு அறிவு
2. மாணவர் உளவியல் அறிந்து செயற்படல்
3. கற்பித்தல் சூழலை இறுக்கமற்றதாக வைத்திருத்தல், இனிதாக வைத்திருத்தல்
4. அன்பு கலந்த கண்டிப்புடன் நடத்தல்
5. வெறுமனே பாட உள்ளடக்கங்களை வழங்குவதனை விடுத்து அனுபவங்களுடன் கூடிய கற்பித்தலை மேற்கொள்ளல், வாழ்க்கைக்கு ஏற்றதான கற்பித்தலை மேற்கொள்ளுதல்
6. பாடமுன்னாயத்தம் செய்திருத்தல்
7. மனிதநேய விழுமியங்களை கொண்டவராகச் செயற்படுதல்
8. முன்மாதிரியான நடத்தைகளை கொண்டவராகக் காணப்படுதல்
9. சுயகற்றலில் ஆர்வம் காட்டுதல்
10. பல்வேறு கற்பித்தல் முறைகளினூடாக கற்போரிடம் பல்வேறு திறன்களை வளர்ப்பவராகச் செயற்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சமநிலை ஆளுமை கொண்டிருத்தல்

அண்மையில் இலங்கையில் ஆசிரியர் மத்தியில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் சேவையிலுள்ள ஆசிரியர்களில் சுமார் 40% ஆசிரியத் தொழிலிலுக்குப் பொருத்தமில்லாதவர்கள் என அறியப்பட்டுள்ளது.

2008 இல் பெறப்பட்ட தரவுகளின்படி க.பொ.த (சா/த) பரீட்சையில் சராசரியாக 57% மாணோர் தேர்ச்சி பெறத் தவறியுள்ளார்கள் எனவும், ஆறாம் தரத்தில் கற்கும் மாணவர்களில் 18% அறவே எழுதத்தெரியாதவர்களாக இருக்கிறார்கள் எனவும் தரம் 10 இல் கற்பவர்களில் 33% மாத்திரமே ஆசிரியர் வாசிக்கும் ஒரு பந்தியை தெளிவாக எழுதக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் எனவும் அறியப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி மாணவர்பால் காணப்படுகின்ற விழுமிய சீர்குலைவுகள் பற்றியும் அறிய முடிகின்றது. இத்தகைய நிலைமைகளில் ஆசிரியத் தொழிலின் அர்ப்பணிப்பு பற்றி நாம் சிந்திக்கவேண்டியது மிக அவசியமானதாகவே உள்ளது.

ஆசிரியத் தொழில் என்பது ஏற்கனவே கூறப்பட்டது போன்று மிகப் புனிதமான தொழில். எதிர்கால சமூகத்தை வடிவமைத்து நாட்டுக்குகந்த பிரஜைகளை உருவாக்கிக் கொடுக்கும் தொழில். ஆகவே அத்தொழிலின் கனதியை, புனிதத்தை புரிந்து, உணர்ந்து அதனை உண்மையாகவே விரும்பி ஏற்று நடக்கும் போதுதான் அத்தொழில் சிறப்படையும், பயன்தரும். வெறுமனே படித்த வேலையற்றோருக்கு "வேலை வழங்குதல்" என்ற ஒரேயொரு நோக்கத்திற்காக இத்தொழில் நியமனம் வழங்கப்படுதல் என்பதும் வேறு வேலைக்கும் சந்தர்ப்பமில்லை ஆகவே பெறக்கூடிய ஒரேயொரு வேலை என்பதற்காக இத்தொழிலை ஏற்றுக்கொள்ளுதல் என்பதும் இத்தொழிலின் புனிதத்தை, கனதியை அர்த்தமற்றதாக்கிவிடும்.

M.R. Price என்பாருடைய கருத்தினை இங்கு கவனத்திற் கொள்வோம். "ஆசிரியர் ஆட்சேர்ப்பு என்பது மிக முக்கியமானது. இது ஒரு உயர்திறன் வாய்ந்த தொழில். மேலும் இது கையாலாகாதவர்களுக்கான குப்பை மடுவம் அல்ல. ஆசிரியரின் பண்பை நிர்ணயிக்கும் காரணிகளும், அவர்களைத் தெரிவு செய்யும் முறையும் மிக முக்கியமானவை". எமது நாட்டைப் பொறுத்து இக்கருத்து சிந்திப்பதற்குரியது.

எம்மைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களிடம் இன்று அர்ப்பணிப்புத்தன்மை குறைந்திருப்பதற்கான காரணங்களைப் பின்வருமாறு நோக்க முடியும்.

1. ஆசிரியர் தொழிலை உண்மையான ஆர்வத்துடனும், விருப்பத்துடனும், ஏற்றுக்கொள்ளாமை (தொழில் பெற்றுக்கொள்ளுதல் என்ற ஒரேயொரு காரணம் மட்டும் இருத்தல்)
2. ஆசிரியர் நியமனங்களில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை.
3. தொழிலைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கூட தம் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்தாமை
4. இன்று கற்றலுக்காக மாணவர்கள் முழுமையாக ஆசிரியரை நம்பியிருக்க வேண்டிய தேவை குறைந்திருப்பதனால் மாணவர் காட்டும் அலட்சியப்போக்கு
5. சில பொருத்தமற்ற ஆசிரியர் செயற்பாடுகளினால் ஆசிரியர் சமூகம் முழுமைக்குமான கணிப்பு சமூகத்தில் போதியளவாக வழங்கப்படாமை
6. தம்தொழில் வாண்மைத்தொழில் என்பதை ஆசிரியர் புரிந்து கொள்ளத் தவறுகின்றமை.
7. பொருத்தமான வழிகாட்டல்கள் போதியளவில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமை.
8. இன்று வர்த்தக நோக்குடன் இயங்கும் தொழிலாக மாறிவருகின்றமை.

முடிவுரை

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இன்று ஆசிரியர்களிடம் போதியளவிலான அர்ப்பணிப்பு, ஈடுபாடு காணப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இச்சந்தேகம் மேலும் கூர்மைப்படுத்தப்படுகின்றது. அதற்கு ஏற்கனவே நாம் சுட்டிய காரணங்கள் பின்புலமமைத்துக் கொடுத்துள்ளன. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் போர் வடுக்கள் பலவற்றைக் கண்டு அதிலிருந்து மீளுவதற்கு முயன்று போராடிக் கொண்டிருக்கின்றது. எமது மாணவர்களே எமது சொத்துக்கள். முற்றாகக் கல்வியை இழந்த ஒரு சாரார், தரமான கல்வியைப் பெறாத ஒருசாரார், கல்வியை இடைவிட்ட ஒரு சாரார் என எமது மாணவர் சமூகம் பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது. எனவே இழந்த தரமான கல்வியை மாணவர் உரிய முறையில் பெறுவதற்கும் எமது மாணவர் சமூகம் வளமாக மாற்றப்படுவதற்கும் உழைக்கவேண்டிய தேவை ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது.

எம் மண்ணிலே எத்தனையோ ஆசிரியர்கள் ஆசிரியத்துவத்திற்குப் பெருமை சேர்த்தவர்களாக வாழ்ந்தார்கள், சிலர் வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். எனவே எமக்கு முன்னிருக்கும் பாரிய பொறுப்புணர்ந்து மென்மேலும் முழுமனதுடனும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்ற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பையன் வரைந்த சித்திரம்!

தமிழில் எம்.எச்.எம்.யாக்கூத்



ஒரு பையன் பாடசாலைக்குப் போனான். அவன் ஒரு சிறிய பையன். அது ஒரு பெரிய பாடசாலை. அவன் கதவடியிலிருந்து நடந்து சென்று தனது வகுப்பை அடைந்தான். அது குறித்து அவன் மகிழ்ச்சியடைந்தான். அதன் பின்னர் அந்தப் பாடசாலை ஒரு பெரிய பாடசாலையாக அவனுக்குத் தோன்றவேயில்லை.

ஒருநாள் காலையில் அவன் வகுப்பில் அமர்ந்திருந்தான். அப்போது ஆசிரியை "நாம் இன்று ஒரு சித்திரம் வரையப் போகிறோம்." என்றார். "மிகவும் நல்லது" பையன் எண்ணினான். சித்திரம் வரைவதில் அவனுக்கு கொள்ளை ஆசை. சிங்கம், பசு, கோழிக்குஞ்சுகள், புகைவண்டிகள், படகுகள் என எல்லாவற்றையும் அவனால் வரைய முடியும். அவன் தனது கிரேயன் பெட்டியையும் வரைதல் கொப்பியையும் வெளியே எடுத்தான். சித்திரத்தை வரையத் தொடங்கினான்.

"பொறுங்கள்... பொறுங்கள்... தொடங்க இன்னும் நேரமிருக்கின்றது" என்று ஆசிரியையின் குரல் ஒலித்தது. அனைவரும் ஆயத்தமாகும் வரை ஆசிரியை காத்திருந்தார்.

"சரி இப்போது நாம் பூக்கள் வரையப் போகிறோம்" என்றார் ஆசிரியை. "நல்லது" என்ற பையன் எண்ணினான். பூக்கள் வரைவதில் பையனுக்கு அலாதி விருப்பம். அவன் தனது இளஞ்சிவப்பு, செம்மஞ்சள், நீல நிற கிரேயன்களைக் கொண்டு பூக்கள் வரையத் தொடங்கினான்.

"பொறுங்கள்... பொறுங்கள்.." "இதோ பாருங்கள் இந்தப் பூ சிவப்பு நிறமானது." "இதனுடைய காம்பு பச்சை நிறமானது. பார்த்தீர்களா? சரி இனி வரையுங்கள்." என்றார் ஆசிரியை!

சின்னப் பையன் ஆசிரியை காட்டிய பூவைப் பார்த்தான். பின்னர் தான் வரைந்த பூவையும் பார்த்தான். ஆசிரியர் காட்டிய பூவை விட தான் வரைந்த பூவையே சின்னப்பையன் விரும்பினான். எனினும் அவன் அதனை வெளியிடவில்லை. அவன் தாளை மறுபுறம் திருப்பி ஆசிரியை காட்டியதைப் போன்ற ஒரு பூவை வரைந்தான். அது சிவப்பு நிறமானது. அதன் காம்பு பச்சை நிறமானது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு நாள் இந்தச் சின்னப் பையன், வெளிப்புறமாக நின்று தானாக அறைக் கதவைத் திறந்தான். "இன்று நாம் களிமண்ணாலான ஆக்கம் செய்யப்போகிறோம்." என்றார் ஆசிரியை. "மிக நல்லது" என்று பையன் எண்ணினான்! அவன் களிமண்ணால் வேலை செய்வதை பெரிதும் விரும்பினான். மோட்டார்கார், யானை, முயல், பாம்பு, வாத்து என எதனையும் அவனால் ஆக்க முடியும். அவன் களித் திரளைபொன்றைக் கிள்ளியெடுத்து உருட்டத் தொடங்கினான்.

"பொறுங்கள்... பொறுங்கள்..." தொடங்க இன்னும் நேரமிருக்கிறது." என்றார் ஆசிரியை. வகுப்பில் ஏனையோரும் ஆயத்தமாகும் வரை ஆசிரியை காத்திருந்தார்.



"சரி" இப்போது நாம் ஒரு கிண்ணம் செய்யப்போகிறோம்..." என்றார் ஆசிரியை. "நல்லது" பையன் எண்ணினான். அவன் கிண்ணங்கள் செய்வதை அதிகம் விரும்பினான். அவன் வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு வடிவங்களில் கிண்ணங்கள் செய்யத் தொடங்கினான். எனினும் ஆசிரியை "பொறுங்கள்... பொறுங்கள்..." என்றார். பின் "எப்படிச் செய்வது என உங்களுக்குக் காட்டுகிறேன்." என்றார். குழிவான ஒரு கிண்ணத்தை எப்படி செய்வது என ஆசிரியை காட்டினார். "இதோ பாருங்கள்" என்றார். "சரி, நீங்கள் இப்போது தொடங்கலாம்." என்றார். சின்னப்பையன், ஆசிரியர் ஆக்கிக்காட்டிய கிண்ணத்தைப் பார்த்தான். தான் ஆக்கிய கிண்ணங்களையும் பார்த்தான். ஆசிரியர் ஆக்கிய கிண்ணத்தைவிட தான் ஆக்கிய கிண்ணங்களையே அவன் விரும்பினான். எனினும் அவன் அதனை வெளியிடவில்லை. அவன் தனது கிண்ணங்களை மீண்டும் ஒரு பெரிய களித்திரளையாக உருட்டினான். ஆசிரியை ஆக்கிக் காட்டியதைப் போன்ற ஒரு கிண்ணத்தை ஆக்கினான்.

அது ஒரு குழிவான கிண்ணம்!

சிறிது காலத்திலேயே சின்னப் பையன் பொறுத்திருக்கவும் ஆசிரியை செய்து காட்டுவதைப் பார்த்துக் கொண்டிருக்கவும் ஆசிரியை செய்ததைப் போன்றே செய்யவும் கற்றுக் கொண்டான். அவன் அதன் பின்னர் தானாக எதனையும் ஆக்கவேயில்லை.

சிறிது காலத்தின் பின்னர் சின்னப் பையனும் அவனது குடும்பத்தாரும் பிறிதொரு நகரில் பிறிதொரு வீட்டில் குடியேறினர். அன்று தொடக்கம் அவன் வேறொரு பாடசாலைக்குப் போனான்.

இந்தப் பாடசாலை முன்னைய பாடசாலையிலும் பெரியதாக இருந்தது. வெளியே இருந்து அவனது வகுப்புக்குச் செல்ல ஒரு கதவு இருக்கவில்லை. சில பெரிய படிக்கட்டுக்களில் ஏறியிறங்கி, நீண்ட மண்டபமொன்றினையும் தாண்டி அவனது வகுப்பை அடைய வேண்டியிருந்தது.

பாடசாலைக்குச் சென்ற முதல் நாளிலேயே ஆசிரியை, "இன்று நாம் ஒரு பூ வரையப் போகிறோம்." என்றார். "மிக நல்லது" என்று சின்னப் பையன் எண்ணினான். என்ன செய்ய வேண்டுமென ஆசிரியை சொல்லும் வரை பொறுத்திருந்தான். ஆசிரியை எதுவும் கூறவில்லை. அவர் வகுப்பறையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்.

ஆசிரியர் சின்னப் பையனின் அருகே வந்தார். "உங்களுக்கு சித்திரம் வரைய விருப்பமில்லையா?" என்று கேட்டார். "விருப்பமாக இருக்கிறது" என்றான் சின்னப் பையன். "என்ன பூ வரைவது?" என்றும் வினாவினான். "நீங்கள் வரைந்தால் தானே அது என்ன பூ என எனக்குத் தெரியும்." என்றார் ஆசிரியை. "நான் எப்படி வரைவது?" என்றான் சின்னப்பையன்! "உங்களுக்கு எப்படி வரைய விருப்பமோ அப்படி வரையுங்கள்." என்றார் ஆசிரியை!

"எந்த நிறத்திலும் வரையலாமா? எனக் கேட்ட என் சின்னப்பையன்! "ஆமாம், எந்த நிறத்திலும் வரையலாம்" என்றார் ஆசிரியை. "ஒவ்வொருவரும் ஒரே நிறத்தைப் பயன்படுத்தி ஒரே சித்திரத்தை வரைந்தால் எந்தச் சித்திரத்தை எவர் வரைந்தார் என நான் எப்படி அறிவது?" என்றார் ஆசிரியை!

"எனக்குத் தெரியாது!" என்றான் சின்னப் பையன்.

அவன் இளஞ்சிவப்பு, செம்மஞ்சள், நீல நிறங்களில் பூக்கள் வரையத் தொடங்கினான். வெளியே இருந்து உள்ளே நுழைய ஒரு கதவு இல்லாதபோதிலும் அவன் தனது புதிய பாடசாலையைப் பெரிதும் விரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# முள் முடி

தி.ஜானகிராமன்

"அப்ப, எங்களுக்கு உத்தரவு கொடுக்கிறீர்களா?" என்று கண்ணுசாமி எழுந்ததும் கூடத்தை அடைத்து உட்கார்திருந்த கூட்டமும் எழுந்து கொண்டது.

"நான் வரேன் சார்!"

"நான் வரேன் சார்!"

"சார்! போய்ட்டு வரேன் சார்!"

நடுவில் ஒரு பையன் அவர்க காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். சட்டென்று காலை இழுத்துக் கொண்டார் அனுகூலசாமி.

"அட, இதென்னடா தம்பி!"

"செய்யட்டும் சார். இந்த மாதிரி யார் கிடைக்கப் போறாங்க அவங்களுக்கு நல்லாயிருக்கணும்னு உங்க வாயாலே சொல்லுங்க, நடக்கும்" என்றார் கண்ணுசாமி.

அந்தப் பையனைப் பார்த்து மற்றப் பையன்கள் அத்தனை பேரும் அவர் காலைத் தொட்டுத் தொட்டு ஒற்றுக் கொண்டார்கள்.

அனுகூலசாமி குன்றிப்போய் நின்றார்.

"இதெல்லாம்...?" என்று அவர் இழுப்பதற்குள் கண்ணுசாமி இடைமறித்தார்: "அனுகூலசாமி, நீங்க நிஜமான கிறிஸ்தவர். முகத்துக்குச் சொல்லலே. முப்பத்தாறு வருஷம் பிரம்பைத் தொடாம, அதிர்ந்து ஒரு வார்த்தை சொல்லாம, வாத்தியாராய் இருக்கிறதுன்னா, அந்தத் தெய்வத்தை விழுந்து கும்பிட்டாத்தான் என்ன?"

"அதெல்லாம் சொல்லாதீங்க"

"நான் சொல்லலே, ஊர் முழுக்கச் சொல்லுது. கடைத்தெருவிலே உக்கார்ந்து நானும் விசாரிக்கிறேனா? வயத்திலே பொறந்த பிள்ளையைக் கூட ஒரு அடியாவது எப்பவாவது அடிக்காம இருக்கமாட்டாங்க. ஒரு வெசவாவது வெய்வாங்க. அதுகூட இங்கே பேசப்படாது! இந்த மாதிரி யாரால் இருக்கமுடியும்? குழந்தையும் தெய்வமும் கொண்டாடற இடத்திலே. இந்தக் குழந்தைகளை, இன்னும் எத்தனையோ புள்ளைங்களை மனுஷப் பிறவிக்குக் கெடுக்கிற மரியாதை கொடுத்து மதிச்சீங்க...";

கண்ணுசாமி பேசும் போது பையன்கள் குனிந்து கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அனுகூலசாமிக்கு வாயைத் திறக்கவே முடியவில்லை. வாயைத் திறந்தால் குரல் உடைந்து நாக்குப் புரளும் போலிருந்தது.

"நான் வரட்டுமா... அப்ப?"

"செய்யுங்க" என்று சிரமப்பட்டு வாயைத் திறந்து உடனே மூடிக்கொண்டார். அவர்.

"எங்களுக்கு உத்தரவு கொடுக்கணும்" என்று முற்றத்தில் நாயனக்காரர் கும்பிட்டார். அதற்கும் அவரால் தலையசைக்கத்தான் முடிந்தது.

கூடத்துக் கூட்டம் முழுவதும் வாசற்படி வழியாக வெளியேற இரண்டு நிமிஷமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மூன்று பையன்கள் கிசுகிசுவென்று பேசி விட்டு, "சார், விளக்கு ரண்டும் இங்கியே இருக்கட்டும்; காலமே வந்து எடுத்துக்கறோம்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.

வாசல்வரை கொண்டு விட்டுத் திரும்பி வந்தபோது கூடம் வெறிச்சிட்டுக் கிடந்தது. அந்தச் சூன்யமும் நெஞ்சைப் பிடுங்குகிற ஏக்கமும் முன்னே ஒரு தடவை வந்ததுண்டு. பத்து வருடம் முன்னால் ஹாயிசாவை மாப்பிள்ளை வீட்டில் கொண்டு விட்டுவிட்டு வரும்போது வந்த அதே சூன்யம்; அதே ஏக்கம்.

'பளிச்' என்று பெட்ரோமாக்ஸ் இரண்டும் சூன்யத்தை நிரப்பிக் கொண்டிருந்தன.

தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டார். நாளைக்குப் புதன்கிழமை. ஆனால் அவருக்கு சனி, ஞாயிறு. நாளை, மறுநாள்; அதற்கும் மறுநாள் இனிமேல் எப்போதுமே சனி, ஞாயிறுதான். பள்ளிக்கூடத்துக்கு இனிமேல் போக முடியாது. அவருக்கு வயது அறுபதாகிவிட்டது. ஓய்வு கிடைத்துவிட்டது.

ஊஞ்சல் மீது உட்கார்ந்து கொண்டார் அவர். பக்கத்தில் ப்ரேம் போட்ட ஏழெட்டு உபசார பத்திரங்கள். ஒரு வெள்ளித் தட்டு, ஒரு பேனா, கடையில் நாலு ரூபாய் விலை. ஆனால் இங்கு இந்தப் பேனாவுக்கு விலை கிடையாது. நாலு லட்சம், நாலு கோடி பெறும் என்று சொன்னால் வீண்வார்த்தை ஏதோ இரண்டும் சமம் என்று ஆகிவிடும்.

கொள்ளாப் பட்டையும் வெள்ளி நூலுமாக நாலைந்து ரோஜா மாலைகள் சுருண்டு கிடந்தன.

ஊஞ்சல் சங்கிலி இரண்டையும் பிடித்துக் கொண்டு நின்றாள் மகிமை. பேசவில்லை; அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள். இத்தனை மேளதாளங்களும் தழதழப்பும் தனக்குக் கிடைத்தாற்போல ஒரு பார்வை. ஒரு நிமிஷம் அவரைப் பருகிக்கொண்டு நின்றவள். சட்டென்று வாசலுக்குப் போய்க் கதவைத் தாழிட்டு வந்து மாலைகளை ஒவ்வொன்றாக அவர் கழுத்தில் போட்டு தோள்களைப் பற்றி முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.


"என்னைக் கூடத்தான் நீங்க அடிச்சதில்லே. அதிர்ந்து சொன்னதில்லே" என்று மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

"உலகத்திலே வந்து இருக்கிறது கொஞ்ச காலம், ஈசல் மழைக்கு வந்து மடியறாப்பலே. அந்தப் பொழுதை அடிச்சுக் கோச்சுகிட்டுப் போக்கணுமா அடிச்சு யாரைத் திருத்த முடியும்?"

"ராட்சசன் மாதிரி கோச்சுக்க வாணாம். ஆம்பிளையா இருக்கறதுக்காவது ஒரு தடவை கோபம் வர வேணாம்?"

"வராமயா இருக்கும்?"

"வெளியில காமிக்கணும்."



"அதுக்குத்தான் பால்காரி, வேலைக்காரி எல்லாம் இருக்காங்க உனக்கு. நான் வேற கோச்சுக்கணுமா?"

"பள்ளிக்கூடத்திலே அடிக்காம அதட்டாம இருக்க முடியுமா?"

"இருக்க முடிஞ்சதே!"

பரவசமாகப் பார்த்துவிட்டு, அவர் மீசையை இழுத்து விட்டு, "காபி சாப்பிடறீங்களா?" என்று நகர்ந்து நின்றாள் மகிமை.

அவள் உள்ளே விரைந்தபோது தன் பிராணனே இன்னொரு உடம்பு எடுத்து விரைவது போலிருந்தது. மேலே சுவரைப் பார்த்தார். முள்முடியுடன் அந்த முகம் கருணை வெள்ளமாகப் பொழிந்து கொண்டிருந்தது. நாலைந்து படம் தள்ளி இன்னொரு படத்தில் அதே முகம் ஓர் ஆட்டுச் சிசுவை அணைத்துக் கொண்டிருந்தது.

கண்ணுசாமி சொன்னது அப்படியே உண்மைதான். முப்பத்தாறு வருஷ உத்தியோகத்தில் ஒரு பையனைக் கூட அடிக்கவில்லை; அதட்டிப் பேசவில்லை அவர்.

சுபாவமே அப்படி. ஹாயிசா பிறந்து, பள்ளிக்கூடம் சேர்ந்து, ஆறு வயதில் ஏதோ விஷமம் பண்ணியதற்காக வாத்தியாரிடம் அடிவாங்கிவிட்டது. அந்த வாத்தியார் ஸ்கேலால் அடித்தபோது சட்டைக்குள் இருந்த கோடைக்கட்டியின் மீது பட்டு... அப்பப்பா!

அன்று அடித்த துடி! அதைப் பார்த்ததும் சுபாவத்தை சங்கல்பமாகச் செய்து கொண்டார் அனுகூலசாமி. எல்லோரும் செய்த பாவங்களுக்குத் தன் உயிரை விலை கொடுத்தானே, அவன் எல்லாத் தலைமுறைகளுக்கும் சேர்த்துத்தான் கொடுத்தான்.

அந்த உறுதி முப்பத்தாறு வருஷமும் ஒரு மூளி விழாமல் பிழைத்துவிட்டது. இல்லாவிட்டால் பதவியைவிட்டு ஓய்வு எடுக்கிற எந்த வாத்தியாரை மேளதாளத்துடன் வீடுவரை கொண்டு விட்டுப் போயிருக்கிறார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத்தில் நேற்று நடந்த பாராட்டுக்கள் போதா தென்று, அவர் வகுப்பு என்று நாற்பது பையன்கள் இருக்கிறார்களே அவர்கள் நினைத்திருக்க வேண்டும். இன்று நடந்தது அந்தக் கூட்டம் தான். மாலை மாலை யாகப் போட்டார்கள். மடல் மடலாக வாசித்துக் கொடுத்தார்கள். இருந்தாற் போலிருந்து வராந்தாவில் "உம்" என்ற ஒத்தும், தொடர்ந்தது தவுலும் ஒலித்தன.

"என்ன தம்பி, இதெல்லாம்?"

"வேற யாருக்கு சார் செய்யப் போறோம்? வாங்க சார்" என்று நாட்டாண்மை மாதிரி நின்ற பெரிய பையன் அவரை அழைத்தான். அந்த ஆறுமுகத்துக்கு வயது இருபத்து மூன்று. இன்னும் பள்ளிக்கூடப் படிப்பு முடியவில்லை. வெகுகாலமாக வாசிக்கிறான். மற்றபடி உலக ஞானம் அதிகம். அனுகூலசாமி பதில் சொல்லாமல் அவன் வேண்டுகோளுக்குக் கட்டுப் பட்டு விட்டார். இல்லாவிட்டால் மற்ற வாத்தியார் களைப் பற்றி ஆரம்பித்துவிடுவான். நாலு வார்த்தை சொல்லிக் கூட விட்டான்.

"எங்களுக்குத் தெரியாதா சார்? 'நான் ரிடயராகப் போறேன்; நிதி திரட்டுங்க'ன்னு நீங்க சொல்லலே; கில்ட்டு நகையை வச்சுக் கடன் வாங்கல்லே; கடுதாசைக் காட்டி கடன் வாங்கி ஊர்ப் பாவத்தைக் கொட்டிக்கலே"

"சரி கொஞ்சம் தண்ணி கொண்டுவா" என்ற என்னமோ சொல்லி அவனை அனுப்பிப் பேச்சை மாற்ற வேண்டியிருந்தது.

அவன் வாயை அடைக்க வேண்டியிருந்ததே தவிர, சொன்னது என்னமோ தப்பில்லை. ஊர்பாவத்தைக் கொட்டிக்கொண்டதில்லை. ஓங்கி ஒருவனை அறைந் தால் என்ன, கடனை நாமம் சாத்தினால் என்ன? எல்லாம் ஒன்றுதான். அந்த ஹிம்சையும் அவர் கொடுத்ததில்லை.

நாரணப்பய்யரும் அவர் மாதிரிதான். சம்சாரம் அதிகம் இல்லை. ஒரு பிள்ளை, ஒரு பெண். ஆனால் மனுஷனுக்கு நவத்துவாரமும் கடன். ஜவுளிக் கடையிலிருந்து கொத்தமல்லிக்காரி வரை காலணாவுக்கு மதிக்க முடியாத நிலை வந்துவிட்டது. இந்த நிலையிலும் நாரணப்பய்யர் சும்மா இருக்க வில்லை. பட்டணத்தில் கல்வி டைரக்டர் ஆபீசிலே வேலை செய்கிற யாரோ உறவுக்காரன், "உங்களை இந்த வருஷம் பரீட்சை அதிகாரிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். உத்தியோ பூர்வமாக இன்னும் இரண்டு வாரத்தில் கடிதம் வரும்" என்று ஒரு கடிதம் எழுதியிருந்தான். அந்தக் கடிதத்தைக் காட்டியே, ஐம்பது எழுபத்தைந்து என்று இருபது பேரிடம் கடன் வாங்கிவிட்டார். அந்த வேலைக்குக் கிடைக்கப் போகிற கூலி என்னமோ இருநூற்றுச் சொச்சம்தான். கடைசியில் கடிதம் பொய்த்துவிட்டது. அவ்வளவுதான். ஷராப் கடை நாயுடு நாரணப்பய்யரை வளைத்துக் கொண்டு சைக்கிளை பிடுங்கிக் கொண்டு விட்டார். ஏமாந்த கோபம். பிடுங்கினதா பெரிது? சைக்கிளை ஒட்டுகிறது யார்? வாத்தியாராயிற்றே! நாரணப்பய்யரே, உம்மால் இந்த இனத்துக்கே அவமானம்!

பாங்க் ஏஜெண்ட் அய்யங்காரை யாராவது ஏமாற்ற முடியுமோ? கடைந்த மோரில் வெண்ணெய் எடுக்கிறவர்! அவரிடம் இந்த சாமிநாதன் கைவரிசை யைக் காட்டினாரே! வாத்தியார் என்ற நம்பி சாமிநாதன் கொடுத்த சங்கிலியை எடைபோட்டு ஒன்பது பவுனுக்கு முன்னூறு ரூபாய் கடன் கொடுத்தார் அய்யங்கார். சாமிநாதன் பேசாமலிருந் திருக்கலாம். பதினைந்தாம் நாள் இன்னொரு சங்கிலியைக் கொண்டு போனால் அதையுமா உரைத் துப் பார்க்காமல் பணத்தைத் தூக்கிக் கொடுப்பார்கள்? சங்கிலியை உரைத்துக் கொண்டே புன்சிரிப்புடன், "என்ன அய்யர்வாள்! பள்ளிக்கூடத்திலே பையன் சந்தேகம் கேட்டால், 'சீ அதிகப் பிரசங்கி உட்காரு' ன்னு அதட்டி நம்ம அஞ்ஞானத்தை மறைச்சுக் கலாம். ஆனால் கடைத்தெருவிலே அது செல்லுமோ என்னமோ? எனக்குத்தான் சரியாகத் தெரியலையோ என்னமோ? சித்தே இருங்கோ, பத்தரை அழைச் சிண்டு வரேன்" என்ற வெளியே எழுந்து போனாராம் அய்யங்கார். சாமிநாதய்யருக்கு வயிற்றைப் புரட்டியது. பத்தரைக் கூப்பிட ஆள் இல்லையா? என்ன சமாதானம் சொல்லலாம் என்று அவர் தேடுவதற்குள் பத்தர் வந்துவிட்டார். "ஏட்டு" ம் வந்துவிட்டார். அந்த சாட்சி களோடு கஜானா அறையைத் திறந்து பார்த்த போது, போன தடவை கொடுத்த சங்கிலியும் 'நான் பித்தளை' என்ற பல்லை இளித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலேகூட அய்யங்கார் வாத்தியார் குலத்துக்கு மதிப்புக் கொடுத்துவிட்டார். மூன்றாம் பேருக்குத் தெரியாமல் சாமிநாதய்யரின் அப்பத குழித் தோட்டத்தை எழுதி வாங்கிக் கொண்டு ஆளை விட்டுவிட்டார். நல்லவேளை, "ஏட்டு"ம் உடையில் வராமல் வேட்டி சட்டையோடு போயிருந்தார். கூட்ட மில்லை; ஊர் சிரிக்காமல் போயிற்று.

இன்னும் நாலைந்து பேரின் நினைவு வந்தது. "ஏண்டலெ! ரிடையராயாச்சு; இன்னமே கால் வயிறு சாப்பாடுதான். அந்த நாள்ளே எங்க வாத்தியாருக்கு நிதி திரட்டிக் கொடுத்தோம் நாங்க" என்று ஒரு பையனைக் குழையடித்து வசூலுக்குக் கிளப்பி விட்டார் ராமலிங்கம்.

காப்பியை எடுத்துக் கொண்டு வந்தாள் மகிமை.

"என்ன யோசனை? சாப்பிடுங்க. சூடு சரியாயிருக்கு" என்று உபசாரப் பத்திரங்களை ஒவ்வொன்றாக வாசித்துக் கொண்டிருந்தாள். நடுநடுவே பெருமை யுடன் அவரை நிமிர்ந்து பார்த்துக்கொண்டார்.

"அதல்லாம் நெசம்னு நெனைச்சுக்காதே, இனிமே வேலைக்கு வரமுடியாதுன்னா அழபோறானேன்னு உளுவாக் காட்டியிருக்காங்க.. சக்கரை முட்டாயி."

"தெரியும் ஆனால் நெசத்தை மட்டும் எல்லாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருக்காங்க" என்றாள் மகிமை. "உங்கள் கை நீளாம, குரல் வெடுவெடுக்காம இருந்தது நேரம்."

"நல்ல. பெரிய நேசத்தைக் கண்டுபிட்டாங்க."

"திறமையின்ல சொன்றதும் நேசந்தான்" என்றாள் மகிமை. "தடியெடுக்காம, அதட்டாம, அப்படியே கெட்டிக்காரன்னு பேர் எடுக்கிறதும் கஷ்டம்தானே?

அனுகூலசாமி யோசித்துப் பார்த்தார். அதுவும் உண்மைதான் என்று பட்டது. அவருக்குக் கர்வப்படக் கூட உரிமை உண்டு என்று தோன்றிற்று.

"ஒரு கஷ்டமும் இல்லே. பால்காரி, கூட்டுக்காரி கிட்டயும் அப்படி இருக்கலாம். மனுஷனாப் பொறந்தவன் யாரும், புத்தியிருக்கறவன் யாரும் அடியிலே நம்பிக்கை வைப்பானா?"

"எல்லாருக்கும் முடியாதுங்க!"

"என்னமோ நான் இருந்துட்டேன்" என்றார் அவர்.

"சார்!" என்று வாசற் கதவைத் தட்டுவது கேட்டது.

"யாரு?"

"நான்தான் சார்?"

மகிமை போய்த் திறந்தாள்.

"சார் இருக்காங்களா?"

"இருக்காங்க...ய யாரு? ஆறுமுகமா, வா!"

ஆறுமுகம் மட்டும் வரவில்லை. இன்னொரு பையனும் வந்திருந்தான். அவர் வகுப்பில் படிக்கிற பையன்தான். கூட ஒரு அம்மாள். வயது நாற்பது நாற்பத்திரண்டு இருக்கும். நெற்றி, காது, மூக்கு, கைகளில் ஒன்றுமில்லை. அனுகூலசாமி எழுந்து நின்றார்.

"என்ன சேதி, சின்னையா?"

"சின்னையன் அம்மா சார், இது" என்றான் ஆறுமுகம்

"வாங்க!"

ஆறுமுகம் யாரையாவது அழைத்து வருவதென்றால் சிபார்சு என்று அர்த்தம். இருபத்து மூன்று வயதில் இன்னும் பள்ளிக்கூடத்தை முடிக்காத பையன்! நாட்டாண்மைக்காரன் மாதிரி ஒரு அந்தஸ்து உண்டு அவனுக்கு. எதற்கு வந்திருக்கிறானோ? பரீட்சைப் பேப்பர்கூட இல்லையே!

"என்ன ஆறுமுகம்?"

"சின்னையன் பார்க்கணும்னான் சார்!"

"என்ன சேதி... சின்னையா?"

சின்னையன் பதில் பேசவில்லை. தலைகுனிந்து நின்றான். கேட்டு அரை நிமிஷம் ஆயிற்று; குனிந்த தலை நிமிரவில்லை. அழுதான்.

"சொல்லுடா!" என்றாள் அந்த அம்மாள்.

உற்றுப் பார்த்தான் அனுகூலசாமி.

பையனின் முகச்சதை கோணிற்று; உடட்டு நடுங்கிற்று.

"சொல்லேண்டா" என்றான் ஆறுமுகம்.

"ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதுங்க அது" என்றாள் அம்மா.

"ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதா?"

"ஆமாம் சார்" என்றான் ஆறுமுகம். நீங்க இனிமே பேசலாம்னு சொல்லிடுங்க சார்."

"நல்லாச் சொல்லேண்டா. எனக்கு ஒன்றும் புரியலியே!"

"சாருக்கு மறந்து போச்சு" என்று அந்த அம்மாளையும் மகிமையையும் பார்த்தான் ஆறுமுகம்.

'எனக்கு என்ன மறந்துபோய்விட்டது? அனுகூலசாமி யோசித்து யோசித்துப் பார்த்தார்; ஒன்றும் ஞாபகமில்லை.

ஆறுமுகம் சொன்னான்: சார், போன வருஷம் இவன் காயாரோகணத்தோட இங்கிலீஸ் புஸ்தகத்தைத் திருடிட்டுப் போயி, வேற பேர் ஒட்டி, கடையிலே பாதி விலைக்கு வித்துப்பிட்டான். நான்தான் அதைக் கண்டுபிடிக்க உங்ககிட்ட கொண்டு நிறுத்தினேன்."

பையன் விசும்பி விசும்பி அழவே, "சும்மா இருடா" என்று தாயார் அவனைச் சமாதானம் செய்தாள்.

"அப்புறம்?"

"நீங்க அவனைச் சித்த நேரம் பாத்திங்க. 'நம்ம கிளாசிலே ஒரு பய இதுவரைக்கும் இந்த மாதிரிப் பண்ணினதில்லே. இனிமே இந்தப் பயலோட ஒருத்தரும் பேசாதிங்கடா'ன்னு சொன்னீங்க."

பையன் அழுகை நிற்கவில்லை.

"அன்னிலேந்து அவனை நாங்க ஒதுக்கிப்பிட்டோம் சார். யாரும் பேசறதில்லே. அப்புறம் இன்னக்கிப் பார்ட்டி நடத்தினோமில்ல? அதற்கு ரெண்டு, ஒண்ணொண்ணு பையன்கள் கிட்ட வசூல் பண்ணினோம். இவனும் ஒரு ரூபா கொடுக்க வந்தான். வேண்டாம்னுட்டோம். பார்ட்டிக்கும் வரக் கூடாதுன்னிட்டோம். ஒன்றும் பேசாது போயிட்டான் நேத்து. இப்ப இங்க வந்திட்டு வீட்டுக்குப் போனேனில்ல, அவங்க அம்மாளை அழைச்சிட்டு வந்து திண்ணையிலே நின்னுக் கிட்டிருந்தான். இவங்க அம்மாவும் சொன்னாங்க. அழைச்சிட்டு வந்தேன்" என்று பயந்து, மென்று விழுங்கிக் கொண்டே சொன்னான்.

அனுகூலசாமிக்கு அந்தச் சம்பவம் ஞாபகம் வந்துவிட்டது. ஆனால் இவ்வளவு கடுமையான தண்டனையா விதித்தோம்? ஏதோ சொல்லி வைத்தார். ஆனால் இவ்வளவு கண்டிப்பாகவா அதை நடத்த வேண்டும்?

"சின்னையா, அழாதடா ஏய்!" என்றார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள்ளாம் அவனோட பேசலாம்னு சொல்லுங்க சார், நீங்க."

"ஒரு வருஷமா அவன் சொரத்தாவே இல்லீங்க. எப்பவும் சிரிச்சுப் பேசிட்டு இருப்பான். இப்ப சரியாகப் பேசறதில்லே. ஒரு வார்த்தை பேசுவான், போயிடுவான். என்னமோ அதுங்க மனசிலே இருக்கிறது நமக்குத் தெரியுதுங்களா? தங்கச்சிகளோட சரியாப் பேசறதில்லை. இன்னிக்கிச் சாயங்காலம்தான் எல்லாத்தியும் சொன்னான். ஊட்டுலே அதெல்லாம் விளையாடப் போயிருந்திச்சு. வாத்தியாரை இன்னிக்கிப் பார்த்தாத்தான் உண்டுன்னான். வந்தேன். நீங்க பெரிய மனசு பண்ணுங்க."

அனுகூலசாமி கையும் களவுமாகப் பிடிபட்டு விழித்தார்; புழுத் துடிப்பாக அவர் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

"பையனைச் சேத்துக்க மாட்டேன்னுட்டாங்களாம். இதை உங்க கையாலே வாங்கிங்க. எல்லோரும் செய்யறப்ப அவன் மனசு கேக்குங்களா... கொடுடா" என்றாள் அம்மா.

பையனுக்கு அழுகை அதிகமாகிவிட்டது. கையில் வேர்த்துக் கொண்டிருந்த ரூபாவை நீட்டினான்.

"வாங்கிக்கங்க சார்" என்று கெஞ்சினான் ஆறுமுகம்.

பேசாமல் வாங்கிக் கொண்டார்.

"ரொம்ப நல்ல பையன் சார், அன்னிக்கு ஏதோ புத்தி பிசகாப் பண்ணிட்டான். அப்புறம் ஒரு புகார் கிடையாது சார் அவன் மேலே."

"நீங்க சொல்லுங்க பெரிய மனசு பண்ணி கூட இருக்கறதுங்க பேசாம இருந்தா என்ன செய்யும்? சிறுசுதாங்களே!" என்றாள் அம்மாள்.

"இந்தப் பயலுங்க இப்படிப் பண்ணுவாங்கன்னு தெரியாமே போயிடிச்சே எனக்கு" என்றார் அவர்.

"நீங்க சொன்னதைத்தானே செய்தாங்க" என்றாள் மகிமை.

"அது சரி" என்று லேசாகச் சிரித்தார் அவர். அழுகை தான் சிரிப்பாக வந்தது. மேலே படத்தில் தோன்றிய முள்முடி அவர் தலையை ஒருமுறை அழுத்திற்று.

---

நிகழ்பதிவு

# வாண்மைக் கருத்தரங்கு

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விச்சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமையும் ஆசிரியர் சங்கங்களின் பின்னடைவு காரணமாகவும் மேல் மாகாணத்தில் உருவாக்கப்பட்டதே ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகும். குறுகிய காலத்தில் இதன் சேவை உணரப்பட்டமையால் பெரும் வரவேற்புடன் விரைவாக வளர்ச்சி அடைவதை காணகூடியதாக உள்ளது.


ஆசிரியர் நலன் தொடர்பாக பல செயல்திட்டங்களை ஆரம்பித்துள்ள இச்சங்கம் அண்மையில் ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாக இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் மூன்றாவது கருத்தரங்கை அதன் தலைவர் திரு. க. சண்முகானந்தன் தலைமையில் ஒழுங்கு செய்திருந்தது. சிறந்த வளவாளர்களை கொண்டதாக காத்திரமான விடயத்தெரிவுகள் இக்கருத்தரங்கின் சிறப்பம்சமாகும்.

உபதலைவர் M.S.A. திரு ஒஸ்வோல்ட்இன் வரவேற்புரையுடன் ஆரம்பிக்கப்பட்ட கருத்தரங்கில் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபா திருமதி கோதை நகுலராஜாவின் சிறப்புரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கொழும்பு பல்கலைகழக கல்விப்பீட முதுநிலை விரிவுரையாளர் Dr.M. கருணாநிதி அவர்கள் தரம் 8, 10 மாணவர்களின் அடைவு பற்றிய, தேசிய மட்டக் கணிப்பீட்டின் ஆய்வு பற்றிய விரிவுரையை பல கோணங்களில் முன்வைத்தார். அதனைத் தொடர்ந்து அன்பு ஜவஹர்ஷா அவர்கள் ஆசிரியர், அதிபர் பதவி உயர்வும், சம்பளமாற்றமும் தொடர்பாக கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். இதன்பின்னர் பல ஆசிரியர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்து ஆலோசனைகளையும் வழங்கினார்.

மதிய போசனத்தை தொடர்ந்து அகவிழி ஆசிரியர் மதுசூதனனின் 'ஆசிரியர் மேம்பாடும் வாசிப்பும்' பற்றிய விசேட உரை பலரின் மனதில் சிந்தனை கிளர்வை (Bruin Strom) ஏற்படுத்தியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









இதனைத் தொடர்ந்து உளநல துணையாளர் கோகிலா மகேந்திரன் அவர்கள் மாணவரின் அடைவு மட்டமும் உள நலமும் என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கினார். இந்த உரை ஆசிரியர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.

உண்மையில் கூறப்போனால் இக்கருத்தரங்கு மிகச்சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டு மதிய உணவு, தேநீர் வழங்கப்பட்டு சிறந்த கையேடுகளையும் அகவிழி இதழ் ஒன்றும் வழங்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

இக்கருத்தரங்கில் 50க்கு மேற்பட்ட அதிபர் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தார்கள். எல்லோரும் உற்சாகத்துடன் இருந்து ஆசிரிய வாண்மைத்துவம் தொடர்பிலான பல்வேறு புதிய சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டார்கள்.

இறுதியாக பொதுச் செயலாளர் திரு. எர்.லிங்டர் அவர்களின் நன்றி உரையுடன் கருத்தரங்கு நிறைவு பெற்றது.

*"ஐக்கியமே வளம்" "Unity is Wealth"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தா விண்ணப்பப் படிவம்

அகவிழி
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

பெயர் (முழுப் பெயர்) : ______________________

கற்பிக்கும் பாடசாலை : ______________________

பாடசாலை முகவரி : ______________________

தொலைபேசி/தொலைநகல் இல. : ______________________

மின்அஞ்சல் முகவரி : ______________________

கற்பிக்கும் பிரிவு : ________________ ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ______________________

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

______________________
கையொப்பம்

திகதி : ____________

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

✂ - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

### சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை நடைமுறைக் கணக்கு எண் 1100022581 Commercial வங்கியின் எந்த கிளைகளி-லிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : | 700/= |
| இரு வருடச் சந்தா | : | 1200/= |

### அகவிழி விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | 7000/- |
| உள் அட்டை (முன்) | : | 6000/- |
| உள் அட்டை (பின்) | : | 5000/- |
| உள் பக்கம் | : | 4000/- |
| நடு இருபக்கங்கள் | : | 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
167, Hospital Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
37, Old Rest House Road,
Tel: 065-2222097




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு

சேமமடு

### சர்வதேச அரசியல் சில பார்வைகள்




ஆசிரியர்:

கே.ரீ.கணேசலிங்கம்

விலை:

ரூபா.200.00

## பத்மம் பதிப்பகத்தின் புதிய வெளியீடு

பத்மம் பதிப்பகம்

### கிராமத்துக் கதைகள் (சிறார் இலக்கியம்)

ஆசிரியர்:

சபா.ஜெயராசா

விலை:

ரூபா.360.00




# CHEMAMADU BOOK CENTRE

U.G.50 People's Park Colombo - 11

Tel:011-2472362, 011-2321905 Fax:011-2448624

E-mail:chemamadu@yahoo.com, chemamadu50@gmail.com , Website: www.chemamadu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

தனலட்சுமி புத்தகக்கடை
29, பிரதான வீதி,
கப்புற்றல
தொ.பே.இல: 057-2268205

கிரிசான் புத்தக நிலையம்
07, தபால்நிலைய வீதி,
மஸ்கெலியா.
தொ.பே.இல: 071-9531554

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 024-4920733

ஜானு புத்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
களுவாஞ்சிக் குடி.
தொ.பே.இல: 077-6446046

ABI புத்தக நிலையம்
(எலக்ரோனிக் கடை)
பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி
தொ.பே.இல: 065 22 50 950

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
37, ஓல்ட் ரெஸ்ற் கவுஸ் றோட்,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-222-2097

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0771-285749

கே.எம்.பஸிர்
ஆசிரியர்
புதிய துறைமுக வீதி
நெய்தல் நகர்
மூதூர் - 01
075-2793793

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S: ஏகாந்தராஜன்
50/9, நாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

ஐடியல் ஸ்ரேசனரி
# 327/8, வடாபொத்த றோட்
(ஹகவத்த T.M.V றோட்) கஹவத்த
தொ.பே.இல: 045 4905715

M.T.M தௌசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பிள்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

அல்குரசி புத்தக நிலையம்
28,1/2, புகையிரத வீதி
மாத்தளை.
தொ.பே.இல: 066 3662228

அகவிழி நிலையம்
167, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

கலையரசு
அம்பிற்ற கந்த, பூனகல
பண்டாரவளை
தொ.பே.இல. 077-4933651/0575679108

ISSN 1888-1246
9 771888 124003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org